பக்கங்கள்: 16+VIII= இருபத்திநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 17 வெள்ளிக்கிழமை (01.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 036

# மஹிந்தா, ரணில் இருவருடனும் சம்பந்தன் தொடர்ந்தும் பேச்சு

## 4 ஆம் திகதி கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு கூடும்



கொழும்பு, ஜன. 01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் தொடர்ந்து பேசி வருகின்றார்.

ஜனாதிபதி உட்பட்ட அரசுத் தரப்புடன் நேற்று முன்தினம் இரவு அவர் நடத்திய பேச்சுகளில் முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை என்றும், எனினும் அதே நேரம் நேற்றுக்காலையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் நடத்திய பேச்சுகள் ஆக்கபூர்வமானவையாக அமைந்தன என்றும் தமிழ்க் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.



(16ஆம் பக்கம் பார்க்க)

## தென்னாசியாவின் கேந்திர நிலையமாக இந்தத் தசாப்தத்தில் இலங்கை மாறும்

### புத்தாண்டுச் செய்தியில் ஜனாதிபதி உறுதிபடத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 01

இன்று ஆரம்பமாகும் புதிய தசாப்தத்தில் எமது அபிவிருத்தி மூலோபாயங்கள் இலங்கையைத் தென்னாசியாவிலேயே ஒரு கேந்திர நிலையமாக மாற்றியமைக்கும் என உறுதிபடத் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இன்று பிறக்கும் புத்தாண்டை ஒட்டி அவர் நாட்டு மக்களுக்கு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

அந்தச் செய்தியில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:- (16ஆம் பக்கம் பார்க்க)

## ஊழல், மோசடி, குடும்ப ஆதிக்கம் ஒழிகின்ற புத்தாண்டு மலரட்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் புதுவருடச் செய்தி

கொழும்பு, ஜன. 01

ஊழல், மோசடி, குடும்ப ஆதிக்கம் ஆகியவை ஒழிகின்ற புதிய நல்வரவுடன் கூடிய புத்தாண்டுப் பிறப்பை எதிர்பார்க்கின்றோம்-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)






சரித்திரப் பிரசித்திபெற்ற, காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில், நேற்றைய திருவாதிரைத் தேர்த் திருவிழாவிற்குத் திரண்ட லட்சக்கணக்கான பக்தர் கூட்டத்தின் ஒரு துளியினரையே இங்கு படங்களில் காண்கிறீர்கள். *(படங்கள்: தர்ணிகா)*

ஆட்சிமாற்றத்துக்கு வழிகாண்போம்

எதிர்க்கட்சித் தலைவர் **ரணில் விக்கிரமசிங்க**,
ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் **மனோ கணேசன்**,
டாக்டர் **ஜயலத் ஜயவர்த்தன** ஆகியோர் பொதுவேட்பாளர்
**சரத் பொன்சேகாவுடன் யாழ். மாவட்ட மக்களை**
**நாளை(02.01.2010) சனிக்கிழமை யாழ் வீரசிங்கம்**
**மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்குச் சந்திக்கவுள்ளனர்**

அனைவரும் வருக! ஆட்சிமாற்றம் காண்க!

இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிய நற்செய்தி!

**ASP ENTERPRISES**

முதன் முறையாக அறிமுகப்படுத்தும்

**INDUCTION COOKER**

அனுகூலங்கள்

# குறைந்த நேரம்
# சிக்கன மின்சாரம்
# தீ,மின் அபாயமில்லை
# இலகுவாகக் கையாளலாம்
# ஒரு வருட உத்தரவாதம்
# இதற்குரிய சகல உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்ளலாம்
# சர்வதேச தரச்சான்றிதழ் பெற்றது (ISO 9001 : 2000)



யாழ் மண்ணில் புதியதோர் உதயம்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்

கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0213001585, 0776079352

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

அருள்வளர்

## ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்

இணுவில் - மருதனார்மடம்

**வருடாந்த இலட்சார்ச்சனைப் பெருவிழா**

ஆரம்பம் :- 02.01.2010 சனிக்கிழமை
பூர்த்தி :- 12.01.2010 செவ்வாய்க்கிழமை
தினமும் காலை :- 8.30 - 11 மணி மாலை 3- 5மணி.

**ஹனுமத் ஜெயந்தி**

**13.01.2010 புதன்கிழமை**

காலை:- 9 மணி 108 கலச அபிஷேகம்
10 மணி பொங்கல் ஆரம்பம்
11மணி சொற்பொழிவு

நிகழ்த்துபவர்:-
"சொல்லின் செல்வன்"," சிவத்தமிழ் சொல்லழகர்"
திரு-ச- லலீசன் M.A (தமிழ்) E.md.
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

12 மணி : சந்தன அலங்காரப் பூஜை.
1 மணி : அன்னதானம்
மாலை 4மணி : உபசார பூஜை
5மணி : தேர் பவனி

அடியார்கள் பூ, வில்வம், துளசி, பால் ,தயிர், இளநீர், பழவகை, நெய், தேன், சமித்து மற்றும் அன்னதானத்திற்குரிய பொருள்களை உபகரிக்கலாம்.

சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்.
ஆதீனகர்த்தா.

T.P:- 0094 21 222 3648

(சி/563591)



சாமியே சரணம் ஐயப்பா

வியாவில் ஐயனார் கோயில் - காரைநகர்

## மகரஜோதிப் பெருவிழா

**02.01.2010 சனி**

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் கார்த்திகைத் திங்கள் இருபத்தேழாம் நாள் முற்பகல் 8மணி முதல் ஐயப்ப பெருமானுக்கு மகரஜோதிப் பெருவிழா நடைபெற திருவருள் கூடியுள்ளது.

**கிரியைகள்**

சாஸ்தாபீடம் : பிரம்மஸ்ரீ மகாதேவாக்குருக்கள் தலைமையில் பிரபல சிவாச்சாரியார்கள் நடத்தி வைப்பார்கள்

யாழ். மாவட்டம் 18 ஆம் படி குருசாமி அ. இந்துதாசன் (தாவடி- ஸ்ரீ சட கோபராமானுஜ ஐயப்ப பக்தசபை -மதுரை) அவர்கள் கலந்துகொள்ளும் இவ் விழாவில் ஏனைய குருசாமிமார்கள், மாலை அணியப்பெற்ற ஐயப்ப சுவாமி மார்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து ஐயப்பன் அருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விசேட நாதஸ்வர, தவில் கச்சேரி இடம்பெறும்.

குறிப்பு : இன்று 01.01.2010 வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மேற்படி ஆலயத்தில் இடம்பெறும்.

ஆலய பரிபாலனர்கள்.

(சி/563818)

அனுசரணை:சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்ப்பாணம்.



## 1st IN COM, G.A.Q.

யாழ்ப்பாணம். பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

**மேற்படி பல்கலைக்கழகங்களினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.**

- A/L இல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- பேராதனை பல்கலைக்கழகத்தின் பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாகச் செய்து தரப்படும்.
- விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

குறிப்பு: யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் B.A. இறுதியாண்டிற்கான விரிவுரைகள் ஆரம்பம் 02.01.2010.

விவரங்களுக்கு : நிர்வாகி, S.அருள்நங்கை.

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி/563821)



## ← A/L 2012 →

## நாளை ஆரம்பம்

## கலை - வர்த்தகப் பிரிவு

## எமது மூன்று நிறுவனங்களிலும்

| | பாடம் | பொருளியற்கல்லூரி யாழ்.நகர் | பொருளியற்கல்லூரி இணுவில் | BARATHY சித்தன்கேணி |
|---|---|---|---|---|
| ★ | பொருளியல் | வரதராஜன் | சுதாகரன் மகேந்திரன் | சுதாகரன் மகேந்திரன் |
| ★ | கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் | திருக்குமரன் |
| ★ | வணிகக்கல்வி | முரளி | முரளி | பசில் |
| ★ | புள்ளிவிவரவியல் | விக்னேஸ்வரன் | விக்னேஸ்வரன் | விக்னேஸ்வரன் |
| ★ | தமிழ் | மீரா | பாலா | பாலா |
| ★ | இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் | சுரேஸ், தரன் |
| ★ | புவியியல் | குமரன் | குமரன் | குமரன் |
| ★ | நாடகம் | கணேஷ் | கணேஷ் | கணேஷ் |
| ★ | வரலாறு | சுதன் | சுதன் | சுதன் |
| ★ | அரசியல் | ஜெனா | கோகுலன் | கோகுலன் |
| ★ | இந்து சமயம் | தரன் | தரன் | தரன் |
| ★ | கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் | வசந்தன் |
| ★ | விவசாய விஞ்ஞா. | விக்கி | விக்கி | விக்கி |
| ★ | இலகுகணிதம் | ஐங்கரன் | ஐங்கரன் | ஐங்கரன் |
| ★ | மனைப்பொருளியல் | மஜிபன் | மஜிபன் | மஜிபன் |
| ★ | I.C.T | அம்ரி | அம்ரி | அம்ரி |
| ★ | ஆங்கிலம் | நிஷாந்தன் ஜைஜஷன் | நிஷாந்தன் ஜைஜஷன் | நிஷாந்தன் ஜைஜஷன் |
| ★ | அளவையியல் | R.V.சர்மா | ஜெயா சிறில் | R.V.சர்மா |

உங்கள் அனுமதிகளை நீங்கள் விரும்பிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

- வர்த்தகப் பிரிவு : யாழ்நகரில் - 8 a.m, சித்தன்கேணியில் 9 a.m , இணுவிலில் - 2 p.m,
- கலைப்பிரிவு : யாழ்நகரில்- 8 a.m, சித்தன்கேணியில் 11 a.m, இணுவிலில் - 9 a.m

Note: யாழ்.நகரில் உங்கள் அனுமதிகளை இன்று 01.01.2010 வெள்ளி 9 மணி முதல் ஒரு மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.



## நாளை ஆரம்பம்

A/L - 2012
பி.ப. 2 மணி

வர்த்தகப்பிரிவு

கணக்கீடு : D. Sam, வணிகக்கல்வி : பசில்
பொருளியல் : S.S. சிறி.

கலைப்பிரிவு

தமிழ் : பத்மநாதன், அரசியல் : அசோக்,
இ.நா.: ஜெயக்குமார், வரலாறு : கஜன்,
நாட.அர.: மங்களேஸ், விவசாயம் : விக்கி,
அளவையியல்: ஜெயந்தன், சித்திரம் : ஸ்ரீஸ்
புவியியல் : செந்தூரன்

கணித, உயிரியல் பிரிவு

பௌதீகவியல் : குமரன், பார்த்தீபன்
இரசாயனவியல் : வாகீசன்,
இணை.கணிதம் : பிரதீபன்
உயிரியல் : பிரபல ஆசிரியர்

(93063)

**ACA** கோவில் வாசல், கே.கே.எஸ். வீதி, இணுவில்.


## தவறிவிட்டது

வல்லிபுரக் கோயில் சுற்றாடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சின்னத்தம்பி பொன்னம்பலம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (552370724V), சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் வரிப்பத்திரம் ஆகியன தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் சி. பொன்னம்பலம் புற்றளை வளவு, புற்றளை, புலோலி என்ற முகவரிக்கு சேர்ப்பிக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## சாரதி தேவை


யாழ். நகருக்குள் வசிக்கும் அனுபவமுள்ள கார்ச் சாரதி தேவை. ஓய்வு பெற்றவரும் விரும்பத்தக்கது.

T.P : 077 172039, 021 3218756

(92066)


MSS 40ஆவது அகவையில்

## மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை




651/12, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

பணிப்பாளர்


### உயர்தர மாணவருக்கு இலவசக் கருத்தரங்கு

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு தமிழ்ப்பாட மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள T.E.C.S. ஆட்ஸ் அக்கடமியில் நடைபெறவுள்ளது.

நலன்புரி நிலைய மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள முடியும். தமிழ்ப்பாட ஆசிரியர் நாக.தமிழிந்திரன் இக்கருத்தரங்கை நடத்துகிறார்.

(ஒ-07)

### சியன கல்லூரிக்கான நேர்முகப் பரீட்சை

சியன தேசிய கல்வியியற் கல்லூரிக்கான ஆங்கில மொழி மூல கணிதபாட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாத குடாநாட்டு மாணவர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்று யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ... தன் அறிவித்துள்ளார்.

(ஒ-06)


## தென்மராட்சி மாணவர்களுக்கு மட்டும் சாவகச்சேரியில்

யாழ்ப்பாண, பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான பதிவுகளும், விரிவுரைகளும் நடைபெறுகின்றன.

## New Degree College

**புதிய பட்டப்படிப்பு கல்லூரி**

**சங்கத்தானை**

(சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகே)

2010 இல் பேராதனைப் பல்கலைக்கழகம் தற்போது வெளிவாரிப் பதிவுகளைக் கோரியுள்ளது. உயர்தரத்தில் ஏதாவது ஒரு துறையில் 3 பாடம் சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பதிவுகளுக்குரிய சகல ஒழுங்குகளும் கட்டண அறவீடு இன்றி எம்மால் செய்துதரப்படும்.

G.A.Q (யாழ்.,பேராதனை) விரிவுரைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

★ B.A Part-I, B.A மாணவர்களுக்கான விரிவுரைகள் 02.01.2010 இல் புதிய பிரிவுகளுக்கு ஆரம்பமாகின்றன. அனுபவம் மிக்க விரிவுரையாளர்களால் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன.

தொ.பே: 0213734426
0776179040

இயக்குநர்:
N.D.C

(சி/563825)



## Learn French the French Way
## French Classes

சர்வதேச மொழியான French மொழி French Embassy இன் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.

- எங்களுடைய நூலகத்தை மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.
- மாணவர்கள், அலுவலர்கள், வெளிநாடுகளில் உயர்கல்வி கற்க விரும்புவோர், மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.
- புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
- அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
- மேலதிக விவரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம்

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri- Nallur Road, Jaffna.
Phone: 021-222 8093 E-mail: alliancejaffna@Yahoo.com

(92067)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 02.05.1929

ஐங்கரன் அடியில் 01.01.2007



மானிப்பாய் வடக்கு

## திருமதி தங்கமலர் பொன்னையா

மூன்றாண்டுகள் ஒரு நொடியில் மறைந்தாலும்
மண்ணிலிருந்து நீங்கள் மறைந்தாலும்
எங்கள் மனதிலிருந்து உங்கள் நினைவுகள்
என்றும் மறையாது அம்மா !
இல்லத்தின் ஒளிவிளக்காய் ஒளிர்ந்து
எங்களுக்கு பல நல்வழிகள் காட்டி
சிறப்புடன் வாழ்ந்தவரே மீண்டும்
உயிர் கொண்டு எம்முடன்
நீங்கள் வந்து வாழவேண்டும் அம்மா !

குடும்பத்தினர்

135/5 A ஸ்ரீ சரணங்கரா வீதி, தெகிவளை Tel: 0722 447608

## 31 ஆம் நாள் ஆத்மசாந்திப்பிரார்த்தனை



அன்னைமடியில்: 20★04★1941

ஆண்டவன் அடியில்: 02★12★2009

அமரர்

## செல்லப்பா சண்முகநாதன்

(எஸ்.எஸ். சண்முகநாதன்).

மண்ணில் மனிதப் பிறவி எடுத்து
இல்லறம் என்னும் நல்லறம் ஒச்சி
இனிதே வாழ்ந்த உம்மை இடைநடுவே
இறைவன் அழைத்த காரணம்தான் தெரியவில்லை
உமது நினைவை, அன்பை, செய்கையை
மறக்க முடியவில்லை.
எமது உயிருள்ளவரை உமது ஆத்மா
இறைபதம் சேர வேண்டி நிற்போம்.

(92072)

11,கவகரத்தினம் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கடந்த தசாப்தத்தில் அரங்கேறிய மிக மோசமான ஊடக அடக்குமுறை

இன்று புது வருடப்பிறப்பு மட்டுமல்ல. புதிய தசாப்தத்தின் பிறப்பும் கூட. 2000 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி மிலேனியம் ஆண்டுப் பிறப்போடு ஆரம்பித்த இந்த மிலேனியத்தின் முதலாவது தசாப்தம் நேற்று 2009 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. புதிய தசாப்தம் இன்று ஆரம்பிக்கிறது.

இலங்கையில் ஈழத் தமிழினம் மிக மோசமான - மிகக் கொடூரமான - மிகக் கோரமான - மிகக் குரூரமான - அழிவுகளைச் சந்தித்த இந்தத் தசாப்தத்தில்தான், இலங்கையின் ஊடகத்துறையும் அதுபோன்ற மிகக் கோரமான அழிவுகளையும், அடக்குமுறைகளையும் சந் தித்தது.

அதுவும் தமிழ் ஊடகத்துறை - குறிப்பாக உங்களின் 'உதயன்', 'சுடர் ஒளி' நாளிதழ்கள் - மிகமிக மோசமாக அழிவுகளையும் நாசங்களையும் சந்தித்தன. தென்னாசியாவிலேயே கடந்த தசாப்த காலத்தில் அதிகபட்ச பாதிப்புகளையும் அடக்குமுறையின் அடாவடித்தனங்களையும் அதிகம் சந்தித்த ஊடகங்களாக 'உதயன்', 'சுடர் ஒளி' நிறுவனங்கள்தான் அமையும்.

இந்நிறுவனங்களின் அலுவலகங்களுக்கு பல தடவைகள் குண்டுகள் வீசப்பட்டன; முகமூடி அணிந்த ஆயுததாரிகள் இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் அலுவலகத்துக்குள் புகுந்து கண்மண் தெரியாமல் சுட்டுத் தள்ளித் தாக்குதல் நடத்தினார்கள். இந்நிறுவனங்களின் பணியாளர்கள், செய்தியாளர்கள் இலக்குவைத்துத் தாக்கிக் கொன்றொழிக்கப்பட்டனர். ஊழியர்கள் இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டனர். பத்திரிகை நிறுவனத்துக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட அச்சுறுத்தல் நடவடிக்கை கட்டமைப்பு ரீதியில் கனகச்சிதமாக மேற்கொள்ளப்பட்டன. நிறுவனத்தின் வாகனங்கள் கடத்தப்பட்டன. பத்திரிகையோடு சேர்த்து எரிக்கப்பட்டன. உதயனின் களஞ்சியசாலை பெரும்தொகையான அச்சுத் தாள் சேகரிப்போடு தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

இப்படி 'உதயன்', 'சுடர் ஒளி' நிறுவனங்கள் எதிர்கொண்ட பேரிழப்புகளுக்கு நஷ்ட ஈடோ, காப்புறுதிக் கொடுப்பனவுகளோ வழங்கப்படவில்லை.

இந்தத் தசாப்த காலத்திலே 'உதயன்', 'சுடர் ஒளி'நிறுவனங்களின் ஏழு பணியாளர்கள் இலக்குவைத்துப் படுகொலை செய்யப்பட்டனர். இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட ஆசிரிய பீடத்தின் இரு ஊழியர்களில் ஒருவர் காணாமல் போனார். மற்றொருவரான பத்திரிகையின் ஆசிரியரின் கடத்தல் பின்னர் கைதாக மாற்றப்பட்டது. இரண்டு மாதத் தடுப்புக் காவலின் பின்னர் மீண்டுவரும் வாய்ப்பு தெய்வாதீனமாக அவருக்குக் கிட்டியது.

இத்தகைய பின்புலத்திலே கடந்த தசாப்தம் கடந்து செல்லும் இன்றைய நிலையில் கூட, இலங்கையில் ஊடகத்துறையின் மீதான அச்சுறுத்தல் - அடக்குமுறை - நீங்குவதற்கான அறிகுறி தென்படுவதாக இல்லை.

தென்னாசிய நாடுகளில் இலங்கைப் பத்திரிகையாளர்களே நேற்று முடிவுற்ற கடந்த ஆண்டில் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தென்னாசிய ஊடக ஆணைக்குழு தெரிவித்திருக்கின்றது.

*''சகல விதங்களில் நோக்கும் போதும் இலங்கைப் பத்திரிகையாளர்களே 2009 ஆம் ஆண்டில் மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். பாகிஸ்தானில் உள்ள அவர்களது சகாக்கள் எதிர்கொள்ளும் அவலங்களை விட அதிகமாக இலங்கைப் பத்திரிகையாளர்கள் எதிர்கொண்டுள்ளனர். உயிர் அச்சம் காரணமாகப் பல சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ளனர்.''* - என்று அந்த ஆணைக்குழு தெரிவித்திருக்கின்றது.

'த ஸண்டே லீடர்' ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை, 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் ஆசிரியர் கடத்தல் பாணியில் கைது செய்யப்பட்டமை, ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இருபது ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை போன்ற மோசமான சம்பவங்களை அந்த அமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றமையும் கவனிக்கத்தக்கது.

இதேசமயம், பாரிஸைத் தளமாகக்கொண்டு இயங்கும் எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பும் இலங்கையில் ஊடகத்துறை எதிர்கொள்ளும் பேரவல நிலையைச் சுட்டிக்காட்டி அறிவிப்பு விடுத்திருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

அச்சுறுத்தல்கள் காரணமாக இலங்கையிலிருந்து 29 ஊடகவியலாளர்கள் கடந்த ஆண்டில் நாட்டை விட்டுத் தப்பி ஓடியிருக்கின்றார்கள் என்ற புள்ளிவிவரத்தை வெளியிடும் அந்த அமைப்பு, இதேபோன்ற மோசமான நிலையே ஈரானிலும் நிலவுவதாகக் கூறுகின்றது.

*''இவ்வாறு ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி நாட்டை விட்டு வெளியேற்றச் செய்வதன் மூலம், தமக்கு எதிரான கருத்துக்கள், விமர்சனங்கள் வெளியாவதையும், பன்மைத்துவக் கருத்து யோசனைகள் வெளிப்படுவதையும் தடுக்கமுடியும் என இந்நாடுகளின் அதிகார வர்க்கம் நம்புகின்றது. இது மிகப் பயங்கரமான போக்கு. இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.''* - என்று அவ்வமைப்பு தெரிவித்திருக்கின்றமை அவதானிக்கத்தக்கது.

என்று திருந்துமோ இந்த ஊடக அடக்குமுறை.......? இந்தத் தசாப்தத்திலாவது அடக்குமுறையற்ற ஊடக சுதந்திரம் கிட்டாதா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

# யாழ்ப்பாணத்தில் ஏ-9 உட்படப் பிரதான வீதிகளை புனரமைக்கக் கொழும்பிலிருந்து தார் வந்துசேரும்

## பணிகள் விரைவில் ஆரம்பமாகுமெனத் தகவல்

யாழ்ப்பாணம், ஜன.01

வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஏ-9 வீதி மற்றும் குடாநாட்டின் பிரதான வீதிகளை மீளப் புனரமைத்துச் செப்பனிடத் தயாராரி வருகிறது.

இதற்கெனக் கொழும்பிலிருந்து ஒரு தொகுதி தார்பரல்களைத் தரைப் பாதையூடாகக் கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தார் பரல்கள் பெரும்பாலும் ஜனவரி மாதத்துக்குள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கடந்த ஆண்டு மே மாதத்தில் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட 800 தார் பரல்களின் கையிருப்பு முற்றாக முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் ஏ-9 வீதி உட்பட யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகளை மீளப்புனரமைப்புச் செய்வதற்கு தார் பரல்களை எடுத்துவருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவை தெரிவித்தன.

தார்பரல்கள் வந்துசேரும் பட்சத்தில் வீதிப் புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (50-224)

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.01

அரியாலை, நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (ஒ-7)

* * *

சுழிபுரம், ஜன.01

சுழிபுரம் மேற்கு ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபையினர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் திருவாசகம் முற்றும் ஓதுதலை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பயன்பெறுமாறும் முற்றோதலில் பங்கு கொள்பவர்களுக்கு நண்பகல் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-28)

# உளநல மேம்பாடு; ஞாயிறு கருத்துரை

யாழ்ப்பாணம், ஜன.01

'சிந்தனைக்கூடம்-யாழ்ப்பாணம்', அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணி முதல் 6.30 மணி வரை யாழ்ப்பாணம், 182, பிறவுண் வீதி என்னும் முகவரியில் அமைந் துள்ள ஐ.ஐ.ரி, யாழ்.கிளை வரவேற்பு மண்டபத்தில் சர்வதேசப் புகழ்மிக்க உளநல மருத்துவ நிபுணர் பேரா சிரியர் தயா.சோமசுந்தரத்தின் ''நொந்து போயுள்ள எமது மனங்களின் உளநல மேம்பாடு'' என்ற பொருளிலான கருத்துரையும் அதனைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு ஆர்வமுள்ளவர்கள் வருகைதந்து பயன்பெற முடியுமென சிந்தனைக்கூட அமைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவிக்கின்றார். (ஒ)

# விபத்தில் சிக்கி முதியவர் காயம்

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸு டன் சைக்கிள் ஒன்று மோதியதில் முதியவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

புத்தூர்ச் சந்திக்கு அருகே இடம்பெற்ற இந்த விபத்தின்போது சைக்கிளில் பயணித்தவரான அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த கந்தசாமி (வயது 71) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (04-15)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 18 | 02.01.2010 |
| | சனிக்கிழமை |
| திதி: | துதியை |
| | மு.இ.09.31 வரை |
| நட்சத்திரம்: | புனர்பூசம் |
| | காலை 05.56 வரை |
| சுபநேரம்: | 3.30-05.00 வரை |
| ராகுகாலம்: | 09.30-11.00 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் மூழ்கியுள்ள கைதடி கிழக்கு வீதிகள்

கைதடி, ஜன.01

கைதடி கிழக்கு கிராம சேவகர் பிரிவில் 'நியாப்' திட்டத்தின் கீழ் போடப்பட்ட வீதிகள் பலவும் அண்



மையில் பெய்த மழையினால் மிகவும் சேதமடைந்துள்ளதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

கைதடி கிழக்கு கிராமசேவகர் பிரிவில் கைதடி கலைநகர் வீதி மற்றும் கைதடி ஊற்றலடி இந்து மயானத்திற்கு அருகேயுள்ள வீதி என்பனவே இவ்வாறு சேதமடைந்துள்ளன.

இவ்வீதிகள் நியாப் திட்டத்தின் கீழ் முன்னர் புனரமைக்கப்பட்டன. அந்த வீதிகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை என அப்போது பொதுமக்கள் முறைப்பாடு செய்தனர். எனினும் அரச அதிகாரிகள் அப்போது இதுகுறித்து உரிய கவனம் செலுத்தவில்லையெனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இனிமேல் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும்போது அதனை உரியவகையில் சீராகச் செய்ய வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-288)

# யாழ்.மாவட்டத்தில் கட்டம்-4இன் கீழ் 3022 வீடுகளை மீள்நிர்மாணிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.01

வடக்கு-கிழக்கு வீடமைப்புத் திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டத்தில் கட்டம்-4இல் 3ஆயிரத்து 22 வீடுகள் மீள்நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் இதற்கான துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கட்டம்-4இன் கீழ் 2009-2010இல் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது.

ஏற்கனவே இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக முன்னுரிமை அடிப்படையில் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு ஊடகங்கள் வாயிலாக விளம்பரப்படுத்தப்பட்டது.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் மீளக்குடியேறிய சகல குடியிருப்பாளர்களுக்கும் வீடுகளின் சேதமதிப்பீட்டுப் படிவம் வழங்கப்பட்டு குறிப்பிட்ட புள்ளிகளுக்குமேல் பெற்றவர்கள் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு ஐந்து கட்டங்களாக 3லட்சத்து 25ஆயிரம் ரூபா வீடமைப்பு நன்கொடை வழங்கப்படவுள்ளது.

மேற்படி திட்டத்தினை 2009-2010 காலப்பகுதியில் பூர்த்தியாக்குவதற் குப் பிரதேசசபை-நகரசபை என்பன முன்னுரிமை பிரகாரம் சீர்செய்து அனுமதி வழங்கி உதவுமாறு யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் கேட்டுள்ளார்.

இதேவேளை-

பயனாளிகள் பட்டியல் பிரதேச செயலகங்கள்-உள்ளூராட்சி சபைகளில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. (04-302)

# தைப்பொங்கலை ஒட்டி புற்றுநோயாளருக்கு ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம், ஜன.01

குடாநாட்டில் உள்ள புற்று நோயாளர்களுக்கு தைப்பொங்கலை ஒட்டி சத்துணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள புற்று நோய் விடுதியில் இடம்பெறவுள்ளது. சுமார் 800 நோயாளர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப் பொதிகள் வழங்கப்படும்.

அன்றைய தினம் புற்றுநோயாளர் விடுதிக்கு சமுகமளித்து பொதிகளை பெற்றுக் கொள்ளுமாறு புற்றுநோய் சிகிச்சை நிபுணர் என்.ஜெயக்குமாரன் கேட்டுள்ளார்.

அமெரிக்க மருத்துவ பௌதீக வியல் பேராசிரியர் என். சுந்தரலிங்கம் இந்த உதவியை வழங்குவதற்காக பெரும் பகுதி நிதியை வழங்கியுள்ளார். மற்றும் பலரும் வழங்கிய உதவிகளைக் கொண்டு சத்துணவு வழங் கப்படுகின்றது என்று அவர் தெரிவித்தார். (1)

# தீவுப்பகுதிகளுக்குச் செல்லும் பொதுமக்களுக்கான சோதனை நடவடிக்கைகள் நேற்றுமுதல் தளர்வு

நல்லூர், ஜன.01

நெடுந்தீவு துறைமுகத்தில் பயணிகளை சோதனை செய்யும் நடவடிக்கை நேற்றுமுதல் நிறுத்தப்பட்டுள்ளதாக நெடுந்தீவு கடற்படை அதிகாரி லெப்டினன் கொமாண் டர் ஜெயசிங்க அறிவித்துள்ளார்.

துறைமுகத்தில் நடைபெற்று வந்த பொதிகள் சோதனை, அடையாள அட்டைப் பதிவுகள் என்பன நேற்று வியாழக்கிழமை முதல் நிறுத்தப்பட்டுள்ளதுடன் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்வதற்கான பாஸ்முறைகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், மீனவர்கள் தாங்கள் விரும்பிய நேரங்களில் தொழிலுக்குச் செல்லமுடியும் என்றும் வழமையாகத் தாங்கள் திரும்பும் துறைகளுக்குச் செல்லலாம் எனவும் கொமாண்டர் ஜெயசிங்கா மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மண்கும்பான் வெள்ளைப் புற்றடி விநாயகர் கோயிலுக்கு முன்பாக இருந்த பாதுகாப்பு அரண்கள் அகற்றப்பட்டதுடன், அல்லைப்பிட்டியிலும் பதிவுகள் சோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் தீவுப் பகுதிக்குச் செல்லும் பயணிகள் வாகனங்களில் இருந்து இறங்கவேண்டிய நிலை தவிர்க்கப்பட்டுள்ளது. எனினும் தீவுப் பகுதியில் இருந்து யாழ்.வரும் மக்கள் பண்ணைப் பகுதி யில் இறங்கி ஏறவேண்டிய நிலை நேற் றும் தொடர்ந்தது. (04-111)

# பிறந்தநாள் வாழ்த்து




சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த
செல்வி கேசவசர்மா அர்ஷனா இன்று
(01.01.2010) வெள்ளிக்கிழமை தனது
முதலாவது பிறந்த தினத்தை தனது
இல்லத்தில் கொண்டாடுகிறார்.
இவரை அமிர்தயாஷினி சந்திரசேகர
வாரிவளநாத சிவன் அருள் கிட்ட
பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துவோர்
தாத்தா, பாட்டி, சித்திமார், மாமா சரண்ய
சிவன்கோயிலடி,
சாவகச்சேரி. (சி/563599)


# பண்டாரநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றமில்லை

கொழும்பு,ஜன.1

கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றமில்லை என விமான நிலைய வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளினது விமான நிலையங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இலங்கை விமான நிலையத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றமில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

2002ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து விமான நிலையத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டது.

அப்போதிருந்தே தீவிரவாத தாக்குதல்களை கட்டுப்படுத்தும் வகையில் ஏற்கனவே பாதுகாப்பு ஒழுங்குகள் பண்டாரநாயக்கா விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தீவிரவாத தாக்குதல் அச்சுறுத்தல் காரணமாக உலக நாடுகளினது விமான நிலையங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## முன்பள்ளிக் கலைவிழா

கைதடி மத்தி நிறைமதி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த கலை விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலைய மண்டபத்தில் முன்பள்ளி வளர்ச்சிக் குழுத் தலைவர் திருமதி வி.ஈஸ்வரன் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கைதடி சேதுகாவலர் வித்தியாலய அதிபர் திருமதி தா.திருஞானசிவம் கலந்து சிறப்பிப்பார். மழலைகளின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (50-288)


## ENGLISH & SINHALA Personal Classes

இரு மொழிகளும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்கள், அரச, வங்கி மற்றும் தனியார் நிறுவன சேவையாளர் உட்பட எவ்வயதினரும் 02.01.2010 முதல் இணைந்து கொள்ளலாம்.
வகுப்பு நேரங்கள் (வெள்ளி தவிர)
மு.ப. 8.30 - 11.30, பி.ப. 2.45 - 5.30

**T.SAGATHEVAN, B.A.Lond.** Trilingual Tutor/ Translator (PVT),
46,Pirappankulam Lane, Vannarpannai, Jaffna.
T.P.: 2223520/ 077 8210178
(91984)



## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 08 ✱ 03 ✱ 1940



மறைவு 12 ✱ 01 ✱ 2009

**சிவயோகசுந்தரம் நாகராணி** (சின்னக்கிளி)
மண்கும்பான் மேற்கு
திதி: அபரபக்க பிரதமை (01.01.2010)

அன்பும், பண்பும், அமைதியுமே உருவான என்னருமைத்தாயே நீ என்னைத் தவிக்க விட்டு இறைபதம் அடைந்து ஓராண்டு நிறைவு பெறும் இன்று உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன் அம்மா.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

465/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (91769)

அன்பு மகள் சீதாவும்
மற்றும் உறவினரும்.



வ
கணபதி துணை



உசன்,
மிருசுவில்
கஜகேணிப்
பிள்ளையார்
கோயில்

## மஹா கணபதி ஹோமப் பெருவிழா

02.01.2010 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கற்பம், நவகலசபூஜை, மஹாகணபதி ஹோமம், விசேஷ திரவிய அபிஷேகம், வசுத்தாரா ஹோம உபசாரம், பூர்ணாகுதி பகல் 12மணி ஷோடச உபசாரபூஜை திருவீதியுலா.

மதியம் 1மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

நாட்டின் அபிவிருத்திக்கும் மக்களின் சுபீட்சமான வாழ்வுக்குமாக நடத்தப்படும் இக் ஹோமப் பெருவிழாவில் அடியார்கள் பங்குபற்றி அனைவருக்குமாகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கிரியைகள் மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேய கோயில் "அருள் வாக்குச் சித்தர்" சிவஸ்ரீ இ.கேதீஸ்வரக் குருக்கள் (உசன்) அவர்கள் தலைமையில் ஈழத்தின் பிரபலமான பல சிவாச்சாரியர்களால் நடத்தப்படும்.

அனைவரும் வருக!
ஐங்கரன் அருள் பெறுக!!

விளம்பர அனுசரணை
**அருள் விநாயகர் ரேடர்ஸ்**
இல 106, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி/563583)


## நல்லெண்ணெய் கடைகள் திறக்கப்பட்டன

நவாலி,ஜன.1

ஆனைக்கோட்டைப் பகுதிகளில் மூடப்பட்டிருந்த நல்லெண்ணெய்க் கடைகள் மீண்டும் திறந்து வியாபாரம் நடைபெற்று வருகின்றன.

தொடர் மழை காரணமாக எள்ளை உலர விட முடியாமலும் ஆலைகள் மூடப்பட்டிருந்ததினாலும் நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இதே வேளை தென்பகுதி மக்கள் இப்பகுதிகளுக்கு வந்து நல்லெண்ணெயை அதிக அளவில் கொள்வனவு செய்வதால் அதற்கு அதிக மவுசு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-100)

## ஆஞ்சநேயர் ஆலய இலச்சார்ச்சனைப் பெருவிழா

யாழ்ப்பாணம்,ஜன.1

மருதனார் மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய வருடாந்த இலச்சார்ச்சனை நிகழ்வு நாளைசனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் காலை 8.30 மணிதொடக்கம் முற்பகல் 11 மணிவரையும், பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணிவரையும் நடைபெறவுள்ளது.

13ஆம் திகதி புதன்கிழமை ஹனுமத் ஜெயந்தி ஆகும். அன்றைய தினம் காலை 9 மணிக்கு 108 கலச அபிஷேகம் நடைபெற்று, 10மணிக்கு பொங்கல் நடைபெறும். 11மணிக்கு சொற்பொழிவு இடம்பெறும். நண்பகல் 12 மணிக்கு சந்தன அலங்கார பூசையும் ஒருமணிக்கு அன்னதானமும் பிற்பகல் 4 மணிக்கு உபசார பூசையும் 5 மணிக்கு தேர் பவனியும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் சொற்பொழிவாற்றுவார். (ஒ-7)


# திறப்பு விழா



காலம் : இன்று (01.01.2010)
வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணி
முன்னாள் இந்து கலாசார அமைச்சர்
**அமரர் தியாகராசா மகேஸ்வரன்**
அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவாக
சந்நிதியான் ஆச்சிரமத்தினால் புதிதாக
அமைக்கப்பட்ட வைத்தியசேவைக்கும்
முன்பள்ளிக்குமான புதிய கட்டடம் சம்பிரதாய
பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

சந்நிதியான் ஆச்சிரமம். (சி/563532)



# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி சின்னப்பு
தங்கமணி

மலர்வு 15.03.1952
உதிர்வு 03.01.2006

காலம் கரைந்தோடி
மூன்றாண்டுகள் ஆனதம்மா!
காயமே கண்ணாகி அழுதாலும்
கவலை ஆறுமோ அம்மா...

கற்திட்டிலேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (91971)

குடும்பத்தினர்.



## Accounting

**ENGLISH/ TAMIL MEDIUM**
TEACHER WITH FOREIGN EXPERIENCE GROUP AND PERSONAL CLASSES STARTING FROM O/L ACCOUNTS
*CONTACT - 0773316402*
(92061)



## விற்பனைக்கு

விறாத்துப் பருவக் கோழிக்குஞ்சும், சேவலும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 7713
(92059)



# NEC

Clock Tower Road, Jaffna.
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
A/L 2012
கலை, வர்த்தக,
கணித, உயிரியல்
பிரிவுகள்
காலை 8.00 மணி



## பதினைந்தாம் ஆண்டு நினைவில்

**அமரர் சின்னையா**
**இரத்தினம்**
(பிரபல வெற்றிலை வியாபாரி,
சாவகச்சேரி)



அன்னை மடியில்: 25.06.1925
அம்மன் திருவடியில்: 01.01.1995

கருவாகி உருவாகி உயர்வாகினீர்- எம்மைக்
கருவாக்கி உருவாக்கி உயர்வாக்கினீர்!
பெருமைக்கும் உரிமைக்கும் உருவாக்கினீர்- அம்மன்
திருக்கோயில் நிரமைத்து சிறப்பாகினீர்!
வருவாய்க்கு நீரென்றும் உழைப்பாகினீர்- வெற்றிலை
வருவாயே போதுமென்று நிறைவாகினீர்!
இரு ஐந்து பிள்ளைகளின் பிதாவாகினீர்- வந்த
மருமக்கள் அனைவரதும் மனதாகினீர்!
பேரரைப் பூட்டரை மடிதாங்கினீர்- ஊரே
பேர் சொல்லும் இரத்தினமாய் ஒளிவீசினீர்!
பேருக்கும் புகழுக்கும் வழியாக்கினீர்-இன்று
பேசாது படமாக எமதாகினீர்!
வருடங்கள் மூவைந்தை முடிவாக்கினீர்-ஐயா நீர் எங்கள்
மனங்களில் இறையாகினீர்!!

முத்துமாரி அம்மன் வளவு,
பெருங்குளம் பிள்ளையார் வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவோடு:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரர், பூட்டர்.
(91793)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ வழிபாட்டில் சிறப்புப் பெற்றது திருவெம்பாவை

**கடந்த பத்து நாள்களாக சைவ மக்களால் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வந்த திருவெம்பாவை நோன்பின் கடைசி நாள் இன்றாகும். அதனையொட்டி இவ் ஆக்கம் இங்கு பிரசுரமாகின்றது.**



மார்கழி மாதம் பீடை மாதம் எனக் கொள்ளப் படுகிறது. தொடர் மழை, குளிர், பனி போன்ற கால நிலைக் காரணிகள் இயல்பு வாழ்க்கையில் பாதிப்புக் களை ஏற்படுத்துவதால் சுபகாரியங்களை மேற்கொள் வதற்கு இம்மாதத்தை விலக்கினர். எனவே இறைவழி பாட்டிற்கென முழுமையையும் அர்ப்பணித்தனர்.

வைஷ்ணவர்களின் திருப்பாவை நோன்பும் சைவர்களின் திருவெம்பாவை, திருவாதிரை நோன்புகளும் மற்றும் கிறிஸ்து பிறப்பும் மார்கழி மாதத்திற்குப் பெருமை சேர்ப்பன.

திருவாதிரை நாளை ஈறாகக் கொண்டு பத்து நாள்கள் சைவர்களால் கைக்கொள்ளப்படும் திரு வெம்பாவை கிராமம் சார்ந்த பக்தி உணர்வின் எழுச் சிக்கு அடிநாதமாக அமைகின்றது காலைநேரச் செயற் பாடுகளை இறை சிந்தனையுடன் ஆரம்பிப்பதற் கான பழக்கத்தை ஏற்படுத்தும் பயிற்சியாகவும் இதனைக் கொள்ளலாம்.

அச்சுவினி முதல் அமையும் 27 நட்சத்திரங்களுள் திருவாதிரை மிதுன இராசியில் அமையும். ஆறா வது நட்சத்திரம் ஆகும். மார்கழி மாதத்தில் சூரியன் மறைந்த பின்னர் கிழக்கு வானில் திருவாதிரை என்ற உடுத்தொகுதியை அவதானிக்கமுடியும்.

ஆதிரை சிவனுக்குரிய நட்சத்திரமாக அமைந் திருப்பதால்ஆதிரையான், ஆதிரை முதல்வன் என்றெல்லாம் சிவன் சிறப்பிக்கப்படுகிறார். ஐந்தொழில் ரூபனாக விளங்கும் நடராஜப் பெருமானுக்கு மார்கழி மாத ஆதிரை நாள் சிறப்பிற்குரியது. இது ஆருத் திரா தரிசன நாள் என ஏற்றப்படுகிறது. இந்நாளில் நடேசர் அபிஷேகத் திருவிழா நடைபெறும்.

சைவத் திருமுறைகளில் ஆதிரை நாள் பற்றிய செய்திகள் அழகாகக் குறிக்கப் பட்டுள்ளன.

திருஞானசம்பந்தர் அப்பரை நோக்கி திருவாதவூரின் சிறப்பு யாதோ? எனக் கேட்கிறார். அதற்கு அப்பர் திருவாரூரில் நிகழ்ந்த ஆதிரைநாள் கொண்டாட்டச் சிறப்பை எடுத்துக்கூறி விடை யளிக்கிறார். 'முத்து விதானம்...'' எனத் தொடங்கி அமையும் பத்துப் பாடல்கள் 'திரவாதிரைத் திருப்பதிகம் என அமைந்து ஆதிரை நாளின் சிறப்பைப் பேசுவனவாக உள்ளன.

இறைவனை வணங்காத நாள்கள் எமக் குத் துன்பமானவை. அவனை ஏத்தும் நாள் கள் இன்பமளிப்பவை. இறை இன்பத்தில் தம்மையும் இணைக்குமாறு ஆதிரை நாளில் அடியவர்கள் ஏங்குகின்றனர்.

"துன்பம் நும்மைத் தொழாத நாள்கள் என்பாரும்
இன்பம் நும்மை ஏத்தும் நாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்
அன்பன் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்"

*(தேவாரம்: 4:21:9)* என்பது அப்பர் பாடல்.

திருவாதிரைத் திருநாளில் இறைவனின் புகழைப் பாடிப்பரவ யார் யாரெல்லாம் வந்தார்கள்? எனக் கணக்கெடுப்பு ஒன்று நடத்தப்படும் என்கிறார் திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார்.

'ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்...' என்ற திருப்பல்லாண்டுப் பாடல் இச் செய்தியைத் தருகிறது.

**ச.லலீசன்,** *விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.*

இறை வழிபாட்டின் பால் சிறுவர்களையும் ஈடுபடத்தூண்டும் சிறப்பைத் திருவெம்பாவை, திருவாதிரை காலங்களில் நாம் காண்கிறோம். நேர் மனப்பாங்குடன் இறைவழி நிற்றல் என்ற செய்தி சிறுவர்களிடம் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும். மாறாக சங்கு ஊதுதல், சேமக்கலம் இசைத்தல், வீடுகளுக்குச் சென்று பணம் வசூலித்தல் இதுவே திருவெம்பாவைக்காலம் என்ற தப்பான எண்ணப் பாங்கு மனதில் ஏற்படுத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

திருவெம்பாவை, திருவாதிரை என்பவற்றின் பெருமைகளை உணர்த்தல் , பாவைப்பாடல்களைச் சிறார்களுக்கு அறிமுகம் செய்தல் முதலிய இறைவழிக் கையளிப்பு நிகழ்வுகள் இக்காலங்களில் ஆற்றப்பட வேண்டும். நல்ல சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்பு வதற்கு சிறுவயதில் நாட்டப்படும் ஆன்மீக விதை அவசியமானது. அது நம்மையும் நம் இனத்தையும் நல்வழிப்படுத்தும்.★★★★★★★

# வாழ்க்கைக்கு வழிகாட்டும் திருமூலரின் திருமந்திரம்

நாம் ஒரு பயணத்தை மேற்கொள்ளும்போது எந்த ஊருக்குப் போக வேண்டும்; யார் யார் போக வேண்டும்; எப்படிச்செல்வது;செல்லும் இடத்தில் எவ்வளவு நாள் இருப்பது என்பதை யெல்லாம் முன்னதாகவே நிர்ணயித்துக் கொள்கிறோம். அதுவும், இந்தக் காலத்தில் ரயிலில் பயணம் செய்யவேண்டும் என்றால் இரண்டு மாதங்களுக்கு முன்னமே இது பற்றியெல்லாம் திட்ட மிட்டு முடிவு செய்யவேண்டும்.




கல்விப் பயணமும் அப்படி தான் இருக்க வேண்டும். அதற்கு ஒரு குறிக்கோள் வேண்டும். ஒருமுறை வேண்டும். கல்வியின் பயன் வாழ்நாள் முழுவதும் நீடிக்க வேண்டும். நமக்குப் பிரச்சினைகள் வரும் போதெல்லாம் நாம் கற்ற கல்வி நமக்குத் துணை யாக இருக்க வேண்டும். அது நம்முடைய தன்முனைப்பை, அகம்பாவத்தை வளர்க்கும் கல்வியாக இருக்ககூடாது. நமக்கு அப்பால் உள்ள மேலான ஒரு பொருளைச் சுட்டிக் காட்டவேண்டும்.

புராணங்களில் நாரதமுனிவருக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. ஏராளமாகக் கற்றவர். இருந்தாலும் அவருடைய மனதில் நிம்மதியில்லை. ஒரு நாள் சனத்குமாரரிடம் செல்கிறார். ''நான் நிரம்பப் படித்திருக்கிறேன். ஆனால் எந்த ஒன்றை முடிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமோ அதைத் தெரிந்து கொள்ளவில்லை. தாங்கள்தான் உதவ வேண்டும்.'' என்று சனத்குமாரரிடம் கேட்டார்.

''நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள்? அதை முதலில் சொல்லுங்கள்'' என்றார் அந்த ரிஷி.

''வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சகல கலைகள் எல்லாம் எனக்குத் தெரியும்'' என்றார் நாரதர்.

''அப்படியானால், உங்களுக்கு ஒன்றும் தெரியாது'' என்று சொன்ன சனத்குமாரர், பரம்பொருளின் தன்மையையும் படிப்பையும் எடுத்துச் சொல்லி விளக்கினார். நமக்குத் தெரிந்ததிலிருந்து நம்மை அழைத்துச் சென்று தெரியாத ஒன்றை விளக்குவது அருளாளர்களுக்கு கைவந்த கலை.

இறைவனை அறிந்துகொண்டு அவனுடைய திருவடிகளைத்தொழுது, அவனை என்றும் இதயத்தில் தங்கச் செய்வதே மேலான கல்வி என்று திருமூலர் சொல்லுகிறார். நாம் முயற்சி செய்து பெறவேண்டியது எல்லாம் அறியும் அறிவு அதை நீக்கி எல்லாம் அறிந்தும் அங்கே லாபம் இல்லை. சிவனடிச் சிந்தனையைத் தூண்டும் கல்வியும், கேள்வியும் எல்லா பற்றிற்கும் மேலானது.

இந்தக் கல்வி பண்பைத் தரும். ஆன்ம வளர்ச்சிக்கு உதவும், பக்குவப்படுத்தும். அன்பையும் வினையையும் உள்ளத்தில் தோற்று வித்து பிற உயிர்களையும் தம்முயிர் போல கருதச் செய்யும். பரம்பொருள் பற்றிய கல்வி இல்லாத வர்களை ''கல்லாத மூடர்'' என்று திருமூலர்பெரு மான் உறுதியாகச் சொல்கிறார். ஒன்றும் படிக்கா மல் இருப்பதைக் கூட ஏற்றுக்கொள்ளலாம். இறைமையையும் பண்பையும் அறியாத வகை யில் கல்வி பயின்றால் அத்தகைய கல்வி பெற்றவர் களைப் பார்க்க வேண்டாம்; அவர்கள் சொல் கேட்க வேண்டாம் என்கிறார் திருமூலர். கடுமைதான், ஆனால் உண்மையல்லவா!

'கல்லாத மூடனாகக் காணவும் ஆகாது
கல்லாத மூடர் சொல் கேட்கக்கடன் அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்.
கல்லாத மூடர் கருத்தறியாரே'

**- நன்றி:- பக்தி**

# அன்பும் அறமும் இன்ப வாழ்க்கைக்கு அடிப்படை

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

இல்வாழ்க்கையை இனிய வாழ்க்கையாக ஆக்கிக் கொள்ள எண்ணுபவர்கள், மூதாதையர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் ஆகிய இவர்களுடன் தன்னையும் போற்றிக்கொள்ள வேண்டும். இதில் தென்புலத்தார் என்பது மூதாதையரைக் குறிக்கும்.




இறந்துபோனவர்கள் நினைவாகப் படைத்தல் என்ற முறை இன்றும் எம் மத்தியில் உள்ளது. இதைச் சிலர் பைத்தியக்காரத்தனம் என்பார்கள். கற்பனை உருவங்களுக்குப் படைக்கப்படவில்லை. நம்முடன் வாழ்ந்திருந்த பெரியோர்கள் நினைவாகப் படைக்கப்படுவது. நம்மை வாழவைக்கும் தெய்வங்களுக்கு - தாய், தந்தை, பாட்டன் போன்ற மறைந்தவர்கள் நினைவாகப் படைக்கப்படுவதாகும். மறைந்த இவர்களைத்தான் தென்புலத்தார் என்கிறார் வள்ளுவனார். பின்னர் தான் வணங்கும் தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் ஆகிய இவர்களையும் பராமரித்துத் தன் நலனையும் காத்துக் கொள்வதுதான் இல்வாழக்கையின் முக்கிய சிறப்பாகும்.

பலர், மூதாதையர்களை மறந்து விடுகின்றார்கள். பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களைப் புறக்கணிக்கிறார்கள். இதனால்தானோ என்னவோ மூதாதையர்களையும் வள்ளுவனார் மறவாமல் சேர்த்துக் கொண்டார்.

இவர்களையெல்லாம் அறநெறி தவறாமல் போற்றிச் சிறப்பிப்பது, இல்வாழ்வான் கடமையாகும் என்று வலியுறுத்துகிறார்.

எனவேதான், இல்வாழ்க்கையின் பண்பையும் பயனையும் விளக்கியுரைக்கும்போது அன்பும் அறனும் இருந்தால்போதும் என்று துணிவுடன் நிலை நாட்டுகிறார்.

அன்பும் அறச் செயல்களும் தானே இவ்வுலகத்தை வாழச் செய்கின்றன! இவைதானே இல்வாழ்க்கையிலும் வாழ வழிகளை - வழிமுறைகளை வகுத்துத் தருகின்றன?

அன்பு இல்லாத வாழ்க்கையை, அறமே இல்லாத வாழ்க்கையை எவ்விதம் ஒரு நல்ல வாழ்க்கையென்று - இல்வாழ்க்கையென்று கூறமுடியும்? அன்பு இல்லை யேல் ஒன்றுமே இல்லையே.....! இது போன்றுதானே அறமும்? அறச் செயல்கள் இல்லையென்றால் யார், எங்கு, என்ன சிறப்பை, உயர்வைக் காண முடியும்?

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது.*

அன்புடைமை என்னும் அதிகாரத்திலே வருகின்ற,

*அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்*
*நண்பு என்னும் நாடாச் சிறப்பு*

என்ற குறளையும் இந்த இடத்தில் பொருத்திப் பார்த்துச் சிந்திக்க வேண்டியவர்களாகிறோம்.

அன்பு என்ன செய்கிறது? பிறரிடம் விருப்பமுடையவராக வாழ்கின்ற ஒரு நல்ல தன்மையைத் தருவதாக அமைகின்றது. அது மட்டுமன்றி, நட்பு என்று சொல்லப்படுகின்ற ஒரு பெரிய சிறப்பையும் உண்டு பண்ணுகின்றது.

இல்வாழ்க்கை என்னும் இந்த அதிகாரத்தில், அன்பையும் அறச் செயல்களையும் பற்றி விளக்கியு ரைக்கும்போது, இவைதாம் இல்லற வாழ்க்கையின் பண்பும் பயனும் என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

ஆக, இல்வாழ்க்கைக்கும் அன்பு உடைமைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு தெள்ளத் தெளிவாகிறது.

அன்பு இல்லையேல் ஒன்றுமே இல்லை. அறச் செயல்கள் இந்தப் பூமியில் இல்லாவிட்டால், எல்லாமே பாழாகத்தானே செய்யும்? பண்பற்ற வாழ்க்கை என்ன வாழ்க்கை? ****************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் தியாகராஜா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சர்,
கொழும்பு, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)



எங்களை உயிருக்கு உயிராக நேசித்த அப்பா!
உங்களை இழந்து இரண்டு ஆண்டுகள் மறைந்தனவே
முத்தாகவந்த மூத்த மகள் என்று
நித்தமும் முத்தமிட்டு ஆசீர்வதிப்பீர்களே!
என்னுள்ளத்தில் என்றும் இருந்து
எம்மை வாழவையுங்கள்
தெய்வமான உங்களை என்றும் வணங்குகின்றேன்.

உங்கள்
முத்தான மூத்தமகள்
பவதாரணி

**திதி: 08.01.2010**

இல. 32, 36 ஆவது ஒழுங்கை,
கொழும்பு 06.
தொலைபேசி இல: 011 2360679

தகவல்:
திருமதி விஜயகலா மகேஸ்வரன்,
பிள்ளைகள், குடும்பத்தினர்.
276, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 2227559

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி. ஆருடன் நெருக்கமாகப் பழகிய ஊடகவியலாளர்களுள் ஒருவர் சோலை. புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் எம்.ஜி. ஆரை ஒட்டிய தமது நினைவுப் பதிவுகளை 'குமுதம்' இதழில் அவர் பகிர்ந்து கொண்டுள்ளார். அது இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகின்றது.**

# ஈழ விவகாரம்: இந்தியா மாறியது ஏன்?





ஈழ மக்களின் இணையற்ற தலைவர் பிரபாகரனின் மறைவை இலங்கை அரசு உறுதி செய்திருக்கிறது. அப்படி ஒரு செய்தியைப் பெறுவதற்கு டெல்லி ரொம்ப ஆவல் கொண்டிருந்தது. தாயக லட்சியத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டவர்களுக்கு மரணம் ஏது?

அன்றைக்கு அன்னை இந்திரா காந்தி நாட்டின் பிரதமராக இருந்தார். மலையகத் தமிழர்களுக்குக் கூட வாக்குரிமை இல்லை. எல்லா உரிமைகளும் பறிக்கப்பட்டு ஈழத்தமிழர்கள் பொட்டுப் பூச்சிகளாக நசுக்கப்பட்டனர்.

'அண்டை நாட்டில் என்ன நடைபெறுகிறது என்பதனை விவாதிக்க வேண்டும்' என்று நாடாளுமன்றத்தில் மதுலிமாயி சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார். அதன் மீது தி.மு.க. உறுப்பினர்களான சி.டி. தண்டபாணியும் மாயத்தேவரும் ஈழத்தின் நாதமாகவே முழங்கினார்கள்.

அன்றைக்கு இந்திரா அளித்த பதில் சாசனமாகவே அமைந்திருந்தது. சிங்கள அதிபர் ஜெயவர்த்தனா டெல்லிக்கே ஓடிவந்தார். 'இலங்கைத் தமிழர்களுக்கு எல்லா உரிமைகளும் அளிக்கப்படும். எதுவும் செய்துவிடாதீர்கள்' என்று மன்றாடினார்.

'எதுவும் செய்துவிடாதீர்கள்' என்றால் என்ன பொருள்? இன்றைய பங்களாதேஷான அன்றைய கிழக்கு பாகிஸ்தான் மக்கள் வங்காளிகள்தான். அவர்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவியிருக்கலாம். ஆனால் மொழியால், பண்பாட்டால் ஒருகூட்டுப் பறவைகள்.

எனவே, கிழக்கு பாகிஸ்தான் விடுதலைக்குப் போராடிய முக்தாவாகினி படையினருக்குப் பின்னே இந்திய இராணுவம் சென்றது. அதேபோல ஈழம் மலர எதுவும் செய்துவிடாதீர்கள் என்று கேட்பதற்காகத்தான் ஜெயவர்த்தனா வந்தார்.

அன்றைக்கு திருகோணமலையில் அமெரிக்க இராணுவதளம் அமைவதாக இருந்தது. 'இந்தியாவுக்கு அருகில் எந்த இராணுவதளம் அமைவதையும் விரும்பமாட்டோம்' என்று இந்திரா எச்சரித்தார். அந்தத் திட்டத்தையே அமெரிக்காவும் கைவிட்டது. இலங்கையும் கைகழுவியது.

இனி இந்தியாவிற்குத் தென்திசையிலிருந்துதான் அச்சுறுத்தல் வரும் என்பதனை இந்திரா உணர்ந்திருந்தார். எனவே, ஈழம் நமக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று எண்ணினார். ஆகவேதான் அவர் ஈழப் போராளிகளை ஆதரித்தார். ஜெயவர்த்தனா சந்தேகம் கொண்டது போல் அவர் பிரபாகரனுக்கு மகுடம் சூட்டக் காத்திருந்தார். இன்றைக்கு அதே மாவீரனின் மரணச் செய்திக்கு டில்லி காத்திருந்தது.

அன்றைக்கு கொழும்பு டில்லிக்கு ஓடிவந்தது. இன்றைக்கு டில்லி கொழும்பிற்கு ஓடுகிறது.

இனி இலங்கையில் அமெரிக்க இராணுவ தளமும் அமையும். சீன கப்பற்படைத் தளமும் உதயமாகும். அப்போதுதான் ஈழத்தின் இழப்பு எவ்வளவு பெரிய பேரிழப்பு என்பது நமக்குப் புரியும்.

1983ஆம் ஆண்டிலிருந்து ஈழத்தில் சிங்கள இராணுவத் தாக்குதல்கள் அதிகரித்தன. அப்போது போராளிக் குழுக்கள் பலம் பெறவில்லை. எனவே, அவர்கள் தமிழகம் வந்து சேர்ந்தனர்.

அப்போது நாட்டின் பிரதமர் இந்திரா காந்தி. தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். ஆயினும், போராளிக் குழுக்களை இணைக்க ஒரு பக்கம் எம்.ஜி.ஆர். முயன்றார். இன்னொரு பக்கம் கலைஞர் முயன்றார். இருவரது முயற்சியும் முழுப் பலன் தரவில்லை.

அமரர் எம்.ஜி.ஆர். சித்தாந்தக் குழப்பங்களில் சிக்கிக் கொள்வதில்லை. சுயாட்சியா? தன்னாட்சியா? தனி நாடா? என்றெல்லாம் அவர் குழப்பிக் கொண்டதில்லை. தனி ஈழம் என்பதில் அவர் தெளிவாக இருந்தார். பிரபாகரன் தலைமையில் இயங்கிய விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிப்பது என்று முடிவு செய்தார்.

முதலில் அன்டன் பாலசிங்கம் எம்.ஜி.ஆரைச் சந்தித்தார். 'ஏன் பிரபாகரனை அழைத்து வரவில்லை?' என்பதுதான் அவர் கேட்ட முதல் கேள்வியாகும். அடுத்த சில தினங்களில் பிரபாகரன் வந்தார். அவரிடம் கேட்ட முதல் கேள்வி, 'நீங்கள் ஏன் கலைஞரைச் சந்திக்கவில்லை?' என்பதுதான்.

'அண்ணே, எல்லாக் குழுக்களையும் விடுதலைப்புலிகள் என்றே இங்குள்ள ஏடுகள் குறிப்பிடுகின்றன. மக்கள் குழம்பிப் போகிறார்கள். தம்பி (பிரபாகரன்) தலைமையில் இயங்குவதுதான் விடுதலைப்புலிகள் இயக்கம் என்பதனை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும்' என்றார் பாலசிங்கம்.

'என்ன செய்ய வேண்டும்?' எம்.ஜி.ஆர். கேட்டார்.

'ஈழம் தொடர்பான பேட்டிகளில், உரைகளில் தாங்கள் பதிவு செய்ய வேண்டும். நீங்கள் எங்களை ஆதரிக்கிறீர்கள் என்பது தெரிந்தால் கடல் கடந்த ஈழ மக்கள் கூட கரைபுரளும் உற்சாகம் கொள்வர். ஈழத்திலும் எழுச்சி ஏற்படும்.'

அடுத்த நாள் காலையில் எம்.ஜி.ஆரிடமிருந்து எமக்கு அழைப்பு வந்தது. அப்போது நாம் அவருடைய 'அண்ணா' நாளிதழின் பொறுப்பாசிரியன். விவரம் சொன்னார்.

காலை பதினொரு மணிக்கு 'அண்ணா' அலுவலகத்திற்கு 'பேபி' வந்தார். அவருடைய உண்மையான பெயர் சுப்பிரமணியம். விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர்கள் வரிசையில் அவர் நான்காவது இடத்தில் இருந்தார்.

அன்றிலிருந்து அண்ணா நாளிதழின் முகம் மாறியது. விடுதலைப்புலிகள் இயக்கத் தகவல்கள்தான் முதல் பக்கத்தில் தலைப்புச் செய்திகளாக இடம் பெற்றன. 'பிரபாகரன் தலைமையில் இயங்கும் விடுதலைப்புலிகள் இயக்கம்' என்றே குறிப்பிட்டோம்.

இதற்கு மத்தியில் ஆங்கில நாளிதழ் அதிபர் எம்.ஜி.ஆரைச் சந்தித்தார். விடுதலைப்புலிகளைத் தவிர வேறு குழுக்களை ஆதரிக்க வேண்டும் என்று அவர் கோரினார். அவர் சிங்கள அரண்மனையின் செல்லப்பிள்ளை என்பது அவருக்குத் தெரியும்.

எல்லா ஈழப்போராளிக் குழுக்களும் பயிற்சி பெற பிரதமர் இந்திரா உதவினார். அதில் விடுதலைப்புலிகள் 600 பேர் மட்டும்தான் பயிற்சி பெற்றனர். தங்கள் வீரர்களில் இரண்டாயிரம் பேராவது பயிற்சி பெற விரும்புகிறோம் என்று பாலசிங்கம் எம்.ஜி.ஆரிடம் தெரிவித்தார்.

'அவ்வளவுதானா?' என்றார் எம்.ஜி.ஆர்.

தமிழக மலைஅடிவாரங்களில் பயிற்சி பெற எம்.ஜி.ஆர். ஏற்பாடு செய்தார். மக்களுக்குத் தொல்லையில்லாது பயிற்சிகள் அமைய வேண்டும் என்பதனை அவர் தெளிவுபடுத்தினார்.

எந்த அரியணையில் அமர்ந்து அமரர் எம்.ஜி.ஆர். விடுதலைப்புலிகளை சொந்தச் சகோதரர்களாக அணைத்துக் கொண்டாரோ, அதே அரியணையிலிருந்து அவரது மறைவிற்குப் பின்னர் ஒரு பேய்க்குரல் கேட்டது. 'பிரபாகரனை இரும்புச் சங்கிலிகளால் கட்டி இழுத்து வாருங்கள். தூக்கில் போடுங்கள்' என்று அந்தக் குரல் டெல்லி நோக்கி அலறியது.



ஈழமக்களுக்கு எதிரான சிங்களப் பகைப்புலத்தை சந்திக்க புலிகள் இயக்கம்தான் சரியான சேனை என்பதில் இந்திராவும், எம்.ஜி.ஆரும் ஒருமித்த கருத்துக் கொண்டிருந்தனர். எனவே, பொய் முகங்கள் காலப்போக்கில் கரைந்து போயின. இதர போராளிக் குழுக்கள் வலுவிழந்தன.





காலங்கள் மாறின. அன்னை இந்திரா அமரரானார். அவருடைய மறைவு நமக்கு மட்டுமல்ல, ஈழமக்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். ராஜீவ்காந்தி நாட்டின் பிரதமரானார்.

ஈழப்பிரச்சினையில் அவரும் சரியான பாதையிலேயே ஆரம்பத்தில் பயணித்தார். புத்தத்தைப் போதித்த சிங்களத்தை இனவாத அரசு யுத்தத்தின் கொலைக்களமாக்குவதை அவரும் விரும்பவில்லை. எப்படி ஈழப் பிரச்சினையில் இந்திராவுக்கும், எம்.ஜி.ஆருக்கும் கருத்தொற்றுமை இருந்ததோ, அதேபோல ராஜீவிற்கும் எம்.ஜி.ஆருக்கும் இணக்கமான உறவுகள் இருந்தன.

சிங்கள இராணுவத்தின் அத்துமீறல்களைக் கண்காணிக்க இராமேஸ்வரம் கடற்கரையில் இந்தியப் போர்க் கப்பல்கள் மிதக்கும் என்று இந்தியா எச்சரித்தது.

1985ஆம் ஆண்டு பெங்களூரில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு வந்த ஜெயவர்த்தனா பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்தார். 'சிங்களத்தில் தனி ஈழம் மலர்ந்தால் தமிழகமும் தனிநாடாகும். அது இந்தியாவிற்குத்தான் ஆபத்து' என்றார். அதனை ராஜீவ் காந்தி நம்பினார். வஞ்சகம் விரித்த வலையில் அவர் வீழ்ந்தேவிட்டார்.

அவர்களுடைய உரையாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தவர் இந்திய வெளியுறவுச் செயலாளர் வெங்கடேசுவரன். 'என்றும் தமிழகம் தனி நாடாகாது' என்று அவர் ராஜீவிடம் வாதாடினார். ஆனால் ஜெயவர்த்தனா விதைத்த நச்சுவிதை நன்றாகவே முளைவிடத் தொடங்கியது.

இலங்கை - ஈழப்பிரச்சினையில் அன்னை இந்திராவின் ஆலோசகராக, தூதுவராக இருந்தவர் ஜி.பார்த்தசாரதி. நேர்மையானவர். அவரைக் கண்டாலே ஜெயவர்த்தனாக்கள் நெற்றிக்கண்ணைத் திறப்பார்கள். கொழும்பு குலைநடுங்கும். ராஜீவிற்கும் அவரே ஆலோசகராகத் தொடர்ந்தார். ஆனால், ஜெயவர்த்தனா அவரை மாற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். ராஜீவ் பணிந்தார். பாதை மாறிய பயணம் ஆரம்பமானது.


அதன்பின்னர் ரொமேஷ் பண்டாரி என்பவர் ஆலோசகரானார். அவருடைய மனைவிக்கு சிங்கள அரசு வைர நெக்லஸ் பரிசளித்ததாக மும்பை ஏடுகள் பரபரப்பாக சேதிகள் தந்தன.

(10 பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 ஆம் ஆண்டு நினைவு தினம்

## அமரர் முருகப்பா பழனியப்பன்



தோற்றம்
19.01.1935

மறைவு
01.01.2003

அப்பா உங்களின் எல்லையில்லா
அர்ப்பணிப்பால் நாங்கள்
தலைநிமிர்ந்து வாழுகின்றோம்

எத்தனை ஆண்டுகள் தான்
சென்றாலும் அப்பா நீங்கள்
எங்களைப் பிரிந்த சோகம் மறையாது

எங்களை விட்டுப் பிரிந்த
அப்பாவின் ஆத்மா சாந்தியடையட்டும்.

உங்கள்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
543, ஆடியபாதம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(91929)

# செவிநுகர் கனிகள் – நூல் வெளியீட்டு விழா அழைப்பு

இடம்: நல்லை ஆதீனம்
காலம்: நாளை (02.01.2010) சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 3 மணி
தலைமை: பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா

ஆர்வலர் அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்,
பேராசிரியர் அ.சண்முகதாஸ்.

## நிகழ்ச்சி நிரல்

பிற்பகல்: 3.00 இறைவணக்கம்
3.10 வரவேற்புரை - பேராசிரியர் அ.சண்முகதாஸ்
3.20 ஆசியுரை -
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
(ஆதீன முதல்வர், நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்)
3.30 வாழ்த்துரை - செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
(அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.)
3.40 தலைமையுரை - பேராசிரியர், எஸ்.சிவலிங்கராசா
(தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
3.50 வெளியீட்டுரை - திரு.என்.விஜயசுந்தரம்
(அதிபர், இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, திருநெல்வேலி)
**4.00 நூல் வெளியீடும் சிறப்புப் பிரதி வழங்கலும்**
4.10 அறிமுகவுரை: சிவத்தமிழ்ச் சொல்லழகர் ச.லலீசன்
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை, கோப்பாய்)
4.25 நயப்புரை - கலாநிதி வேல்நம்பி
(முதுநிலை விரிவுரையாளர், வணிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
4.40 ஏற்புரை - கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

இவ்விழாவிலே பங்குபற்றிச் சிறப்புச் செய்யுமாறு
தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
'செல்வத்துள் சிறந்த செல்வம் செவிச்செல்வம்'


(அ/563572)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் பேரானந்தம் சிவானந்தன்

(ஓய்வுபெற்ற ஊழியர்- யாழ்.மாநகர சபை)

திதி: பிரதமை



குடும்பத்தின் குலவிளக்காய் என்றும் மறவா
அன்புடன் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
ஒளியூட்டிய அன்புத் தெய்வமே அப்பா!
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உங்கள் குரல் காதில் கேட்குதே!
நீங்காத நினைவுடன் ஆத்மா சாந்திபெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

என்றும் நினைவுடன்:
**மனைவி, மகன்.**
41/9, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.

(91995)

தோற்றம்
28.11.1954

மறைவு
28.12.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டடமின்றி இயங்கிவரும் ஒரு சனசமூக நிலையம்!

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் யுத்த அனர்த்தங்களின்போது சேதமடைந்த சனசமூக நிலையங்கள் பல. அவற்றுள் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் கடந்த 13 வருடங்களாக அகப்பட்டுக் கொண்டதால் கட்டடங்கள் அனைத்தும் இழந்து அத்திபாரம் கூட இல்லாதநிலையில் பரிதாபமாக உள்ள சனசமூக நிலையமென்றால் அது சாவகச்சேரி திருவள்ளுவர் சனசமூக நிலையம்தான்!

1996 ஆம் ஆண்டு திருவள்ளுவர் சனசமூக நிலையம் இருந்த கட்டடம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அகப்பட்டதால் மக்கள் அதனுள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அதனால் சனசமூக நிலையம், முன்பள்ளி ஆகியவற்றின் தளபாடங்கள், விளையாட்டுக் கழகத்தின் பெறுமதி மிக்க பரிசில் கேடயங்கள், வெற்றிக் கிண்ணங்கள் போன்றவை மீட்கமுடியாமலே போய்விட்டன.

சிறிது காலத்தில் இந்தக் கட்டடத்தில் தங்கியிருந்தவர்கள். கட்டடப் பொருள்கள் தவிர்ந்த ஏனையவற்றை எடுத்துச் சென்றுள்ளனர். அதன் பின்னர் அதில் குடியமர்ந்தவர்கள் கட்டடத்தினையே அப்புறப்படுத்திக்கொண்டு சென்றனர். மீதமிருந்த அத்திபாரக்கற்கள் இதற்குப் பக்கத்தில் அமைக்கப்பட்ட வீதிக்குப் பயன்படுத்தப்பட்டன.

இந்த விடயங்கள் சாவகச்சேரி பிரதேச சபை முன்னாள் தலைவர் அன்ரன் பொன்னையா அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா அம்மையாருக்கு அறிவித்தனைத் தொடர்ந்து பொலிஸாரால் விசாரணை நடத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது.

1967 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திருவள்ளுவர் சனசமூக நிலையம் அப்பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் தூண்கள் நிறுத்திய கட்டடத்தினுள் இயங்கியது. இக்கட்டடம் காலை வேளையில் முன்பள்ளியாகவும் மதியத்தின் பின்னர் வாசிகசாலையாகவும் நகரசபை எல்லைக்குள் திறம்பட இயங்கிய சனசமூக நிலையங்களில் ஒன்றாகச் அது திகழ்ந்தது.

இந்தச் சனசமூக நிலையத்திற்கு நிரந்தரக்கட்டடம் அமைப்பதற்கென, தென்மராட்சி உதவி அரச அதிபரினால் கடற்கரைப் பகுதியில் இரண்டு பரப்புக்காணி வழங்கப்பட்டது.

நிலைய உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் இந்தக் காணியில் சிறந்த நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு முன்பள்ளி, விளையாட்டுக்கழகம் போன்றவற்றுடன் இயங்கிவந்தது.

இந்தச் சனசமூக நிலையம் அமைந்திருந்த பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்ததால் நிலையத்தினை மீண்டும் அமைப்பதற்கு உதவுமாறு உயர் அதிகாரிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு முறையிட்டும் உரிய பயன் கிடைக்கவில்லை.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அகப்பட்டு இயங்காமல் இருந்த 'உதயசூரியன்' சனசமூக நிலையம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் 2002 ஆம் ஆண்டு நிலைய நிர்வாகிகளிடம் கையளிக்கப்பட்டு சாவகச்சேரி நகரசபையினால் புனரமைக்கப்பட்டு தற்போது சிறப்பாக அது இயங்கிவருகிறது. சனசமூக நிலையம் இயங்குவதற்கு நிரந்தரக் கட்டடம் இல்லாத போதிலும் அதன் நிர்வாகச் செயற்பாட்டில் இதுவரை எந்தவொரு தொய்வு நிலையும் இடம் பெறாதவகையில் செயற்பட்டு வருகின்றது. பிரதேச மட்டத்தில், நகரசபை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்துப் போட்டிகளிலும் பங்கு பற்றி வருகின்றனர்.

எனவே திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினை மீண்டும் பழைய இடத்தில் புதிய கட்டடத்தில் இயங்கவைக்க உரியவர்கள் முன்வரவேண்டுமென்பது இப்பகுதி மக்களின் அவா!

# ஆயுர்வேத வைத்தியர் வ. சின்னப்பு



ஆயுர்வேத வைத்தியமுறை பன்னெடுங்காலமாக மக்கள் மத்தியில் செயற்பட்டு வருகிறது. ஆங்கில வைத்தியமுறை ஆரம்பிக்க முன்னமே ஆயுர்வேத முறை பரம்பரை வைத்தியர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஆயுர்வேத வைத்தியமுறை இன்னும் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கி வருகின்றன.

இலங்கையில் ஆயுர்வேத வைத்தியமுறையினை மேம்படுத்த பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் சித்த மருத்துவப் பிரிவுக்கென தனி அலகு தோற்றுவிக்கப்பட்டு வருடாவருடம் சித்த மருத்துவ வைத்தியர்கள் உருவாக்கப்பட்டு மக்களுக்குச் சேவை செய்ய நியமிக்கப்படுகின்றனர். சித்த மருத்துவத்தினை மேம்படுத்த சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் ஆயுர்வேத திணைக்களத்தினை இலங்கை அரசு உருவாக்கி உள்ளது. அத்துடன்இலங்கையில் ஆயுர்வேத வைத்தியமுறையை விருத்தி செய்ய உள்ளூராட்சிச் சபைகள் மூலம் ஆயுர்வேத மருந்தகங்கள் அமைக்கப்பட்டு மக்களுக்குரிய சேவை வழங்கப்பட்டு வருகின்றது நகர்ப் பகுதிகளில் ஆயுர்வேத மத்திய மருந்தகங்கள் ஆயுர்வேத வைத்திய சேவையினை மக்களுக்கு வழங்கி வருகின்றன.

இது மட்டுமல்ல நாட்டில் உள்ள பரம்பரை ஆயுர்வேத வைத்தியர்களை இவை கண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் வழங்குகின்றன. நாட்டில் ஆங்கில வைத்தியசாலைகள் பல இருந்தபோதிலும் ஆயுர்வேத வைத்திய முறையையே கிராமத்து மக்கள் இன்னும் தமது நோய்களுக்கு நிவாரணியாகப் பயன்படுத்துகின்றனர்.

ஆயுர்வேத மருத்துவத்தில் சிறுபிள்ளைநோய் மற்றும் வாதநோய் ஆகியவற்றுக்கு வழங்கும் சிகிச்சை இன்றும் பிரபல்யமாகவுள்ளது. சிறுபிள்ளைகளுக்கு ஏற்படும் கிரந்தி, கரப்பன் ஆகிய நோய்களுக்கும் வாதரோகம், குன்மம் போன்ற நோய்களுக்கும் ஆயுர்வேத வைத்திய நிலையங்களில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை இன்னும் குறைவடையவில்லை.

அந்தவகையில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் 50 வருடங்களுக்கு மேலாக ஆயுர்வேத வைத்தியசாலை என்னும் நிலையத்தில் ஆயுர்வேத வைத்தியம் மேற்கொள்ளும் வைத்தியர் வ. சின்னப்பு அவர்களைச் சந்தித்து அவரது வைத்திய முறைகளைப் பற்றிச் செவ்வி கண்டோம் அவரது மொழியில் சித்த வைத்திய அனுபவங்களை இங்கே விவரிக்கிறார். *(தொடரும்....)*

# அஸ்தமனமாகிக் கொண்டிருக்கும் "உதயசூரியன்" கிராமம்....



ஆய்வு: யாழ். பல்கலை சமூகவியல்துறை 3ஆம் வருட மாணவர்கள்

[சென்றவாரத் தொடர்ச்சி....]

நகரசபைக்குச் சொந்தமான நிலத்தில் வசிக்கும் இவர்களுக்குச் சொந்தமாக ஒரு துண்டு நிலம் கூட இல்லாத நிலையில் நகரசபையானது இவர்களது உழைப்பினை மட்டும் சுரண்டி விட்டு இவர்களை அந்நியப்படுத்தி விடுகிறது. எடுத்துக்காட்டாக,

ஒரு வேலைத்தளத்தில் எல்லா ஊழியர்களும் ஏற்றத் தாழ்வின்றி நடத்தப் படுதலே தொழில் தர்மம் ஆகும். ஆனால், இங்கு நடப்பதோ முற்றிலும் வேறுபட்ட வகையிலுள்ளது. அதாவது இக் கிராம ஊழியர்களின் நன்மை, தீமைகளுக்கு நகரசபையிலிருந்து எவருமே வந்து கலந்து கொள்ளமாட்டார்கள். அம்மக்களின் வீடுகளுக்குச் சென்றால் தமது கௌரவம் குறைந்துவிடும் என நினைக்கின்றார்கள் போலும். ஆனால் அங்கு பணிபுரியும் ஏனைய ஊழியர்களின் நிகழ்வுகளுக்கு இவர்களிடமிருந்தும் பணம் அறவிடப்பட்டே அவர்களுக்கு உபகாரமாகக் கொடுக்கப்படுகின்றது. இது எவ்வகையில் நியாயம்? அம் மக்களையே ஒதுக்கிவைத்தபின், அவர்களின் பணத்தில் மட்டும் ஏன் குளிர்காய வேண்டும்? இவ்வகையான பாரபட்சத்தினால் ஒரு சமூகமே ஒடுக்கப்பட்டு முகவரியினை தொலைத்துவிட்டு நிற்கின்றது. நகரசபை ஊழியர்கள் ஓய்வூதியம் பெற்ற பின் மறு நிமிடமே இவ்விடத்தை விட்டு செல்லுமாறு நிர்பந்திக்கப்படுகிறார்கள். அவர்களின் இடத்துக்குப் புதிய குடும்பங்கள் குடியமர்த்தப்படுவர். அந் நிலத்தை அவர்களுக்கே சொந்தமாக வழங்கினால், இவ்வாறு ஏதிலிகள் போல் அலையும் நிலை இவர்களுக்கு இருக்காது.

இக் கிராமத்தில் வசிக்கின்ற 70 குடும்பங்களுக்கும் பொதுவாக 5 மலசல கூடங்களே உள்ளபோதிலும் 2 மலசலகூடங்கள் தற்போது பயன்படுத்தமுடியாத நிலையில் உள்ளன. தற்போது பாவனையில் உள்ள 3 மலசலகூடங்களும் பாழடைந்த நிலையிலேயே உள்ளன. அத்துடன் இக்கிராமத்தில் உள்ள 3 கிணறுகளும் தற்போது பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளன. இதனால் ஒவ்வொருவரிடமும் 60 ரூபா பெற்றே குடிதண்ணீர் குழாய் வழியாக நகரசபையால் வழங்கப்படுகின் றது. இயற்கையாகக் கிடைக்கும் நீருக்கே பணம் கேட்டால் அம் மக்கள் என்னதான் செய்வார்கள்? இவற்றினை தட்டிக்கேட்டால் தமது வேலை பறிபோய்விடும் என்ற பயத்தினால் வாயில்லாத பூச்சிகளாகவே இன்று வரை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இக் கிராமத்தில் வசித்துவரும் ஏழை மக்களுக்கு எந்த உதவிகளும் சரிவரக் கிடைப்பதில்லை. அதிர்ஷ்ட வசமாக சில நிறுவனங்கள் வந்து அம்மக்களிடம் கூட்டங்கள் நடத்தி உதவிகள் வ[illegible] போதிலும் ம[illegible] நிறுவனங்கள் காணாமல் போய்விடுகின்றன. இதனால் அக்கிராம மக்கள் விரக்தியின் விளிம்பிலேயே வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இங்குள்ள மக்களில் பலர் அன்றாடங்காய்ச்சிகளாகவே உள்ளனர். இக் கிராமத்தில் பல்வேறு வகை யான திறமைமிக்க பிள்ளைகள் உள்ள போதும் அவர்கள் அத் திறமையை வெளிக்கொண்டு வருவதற்கு எந்த விதமான வாய்ப்புக்களும் கொடுக்கப்படவில்லை. அதனால் அவர்களது திறமைகள் அவர்களுக்குள்ளேயே புதைந்து விரக்திக்குள்ளாகி பாடசாலை இடைவிலகலில் ஈடுபடுகின்றனர்.

உதயசூரியன் கிராம மக்களின் குடிசைகளில் இருந்துகொண்டு இரவு வேளையில் நட்சத்திரங்களை கண்டுகளிக்கலாம் அவ்வளவு துவாரங்கள் காணப்படுவதனால் மழைக்காலத்தில் குடிசைகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. கால் மிதிக்க முடியாத அளவிற்கு சேறும் சகதியுமாக உள்ளது. அத்துடன் நுளம்புகளின் தொல்லையோ வார்த்தைகளால் கூறமுடியாது. இந்நிலையில் பிஞ்சுக் குழந்தைகள், சிறுவர்களை வைத்துக்கொண்டு மக்கள் எவ்வாறு வாழ்க்கை நடத்துவது? சுகாதார நிலையங்கள் கூட இவர்களின் நிலைபற்றிப் பாராமுகமாகவே உள்ளன.

இக்கிராமத்தில் இளைஞர், யுவதிகள் படிப்பை இடைநிறுத்தி விட்டு வேலைவாய்ப்பின்றி இருக்கின்றனர். சிலர் கூலி வேலைக்குச் சென்று வயிற்றை ஓரளவுக்காவது நிரப்புகின்றனர். இங்கு ஒழுங்கான வீட்டு வசதிகள் இன்மையால் மின்சார வசதிகளைச் செய்து கொள்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. இதனால் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடு பெரி தும் பாதிப்படைந்துள்ளது. பாடசாலைகளிலும் இக்கிராம பிள்ளைகளை பாரபட்சக் கண்ணோட்டத்திலேயே நோக்குகின்றனர். இக் கிராமத்துக்கு அருகில் கடலை அண்டிய பகுதியில் ஏராளமான புறம்போக்கு காணிகள் உள்ளபோதும் அந்த எல்லைகள் விஸ்தரிக்கப்படாமலே உள்ளன.

நாம் இக்கிராம மக்களின் பிரச்சினைகளினை பரந்த கண்ணோட்டத்தில் பார்ப்போமாயின் புறக்காரணிகள் மட்டும் இவர்களது பிரச்சினைக்குக் காரணமல்ல. இவர்கள் காலங்காலமாகத் தமக்கென்றே உரித்தான ஒரு வறுமைப் பண்பாட்டை உருவாக்கி வாழ்கின்றார்கள். இதனால் வெளிச் சமூகத்தினருடன் இவர்களது இடைவினை மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. இவர்களுக்குள் தாம் வறியவர், தாழ்ந்தவர் என்கின்ற தாழ்வுமனப்பான்மை ஆழமாக வேரூன்றி இருப்பதை அறிய முடிகின்றது. இது தவறான எண்ணமாகும். இறைவனின் படைப்பிலே எல்லோரும் அவருடைய குழந்தைகளே. அதில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று எவருமில்லை என்பதை அவர் கள் தெளிவாகப் புரிந்து கொண்டால்தான் அவர்களுக்கு மீட்சி உண்டு.

அடுத்து அவர்களின் வாழ்க்கை முறையை ஒரு கட்டமைப்புக்குள் கொண்டு வர வேண்டும். வாழ்க்கை நெறிமுறைகள், விழுமியங்கள், குடும்பத்திட்டமிடல் போன்றன அறிவுறுத் தப்பட வேண்டும். இளவயதுத் திருமணங்கள் தடைசெய்யப்படவேண்டும். சமூக முதலீடானது செய்யப்பட்டு வெளியுலகில் நடைபெறும் விடயங்களை அவர்கள் அறியும்படி செய்து அவர்களின் மனதளவில் முதலில் மாற்றத் தைக் கொண்டுவரவேண்டும்.

இக்கிராம மக்களின் பிரச்சினைகள் இன்றுவரை வெளியுலகிற்கு தெரியாமல் இருப்பதே இவர்களின் தலையாய பிரச்சினையாகக் காணப் படுகிறது. இவ்வகையில் 'உதயசூரியன்' கிராமத்தின் புறப்பிரச் சினைகளுடன் அவர்களது அகப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டால் அவர் களின் வாழ்வு பிரகாசித்து, ஏனையவர்களைப் போல சமத்துவத்துடன் வாழ்வார்கள் என்பதில் எவ் வித ஐயமுமில்லை. ஆகவே அவர்களது தேவைகளையும் குறைகளையும் கருத் திற்கொண்டு அவர்களை இருளில் இருந்து வெளியே கொண்டு வந்து நல்ல தொரு வழியை ஏற் படுத்த வேண்டியது மனித நேயமும், சமூக அக்கறை யும் கொண்ட ஒவ்வொருவரினதும் கடமையாகும்.



தென்மராட்சி வலம்

தொகுப்பு: ஜயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ விவகாரம் இந்தியா.....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஜி.ஆருக்கும் ஜி.பார்த்தசாரதிக்கும் நல்ல உறவு இருந்தது. அவர் எம்.ஜி.ஆரை (1985 ஏப்ரல்) சந்தித்தார். இரண்டு மணிநேரம் கலந்துரையாடல். விடுதலைப் புலிகள் முன்னேறித் தாக்குகிறார்கள். சிங்கள இராணுவம் சிதறி ஓடுகிறது. இந்த நிலையில் இந்தியாவைத் திசைதிருப்ப ஜெயவர்த்தனாக்கள் எப்படி சதி செய்கிறார்கள் என்பதனை விளக்கினார். எனவே, ஈழப்பிரச்சினையில் இறுதிவரை எம்.ஜி.ஆர். தெளிவாகவும் உறுதியாகவும் இருந்தார். பல்வேறு சந்தர்ப்பங்களில் அவருடைய ஆலோசனைகளை ராஜீவ் காந்தியால் மீறமுடியவில்லை.

சிங்களப் பேரினவாதத்தின் கர்ப்பத்திலிருந்து ஈழம் பிறக்கும் என்ற நிலை உருவானது. அதுவரை அழைத்தாலும் வர மறுத்த ஜெயவர்த்தன பணிந்தார். எப்படியாவது போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பது அவரது கவலை. புலிகளை கொசுக்களைப் போல் ஒழிப்பேன் என்று கொக்கரித்தவர்தான்.

ஆனால், அடுத்த சில மாதங்களிலேயே ஈழப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முடியாது என்று ஜெயவர்த்தன அந்தர்பல்டி அடித்தார். கூர்ந்து பார்த்தால் ஓர் உண்மை புரியும். அவர்கள் ஈழத்து மயானத்தில் சங்கீத கச்சேரி நடத்துவார்கள். முடியவில்லை என்றால் முட்டி மோதி டில்லிக்கு ஓடி வருவார்கள். போர் நிறுத்தம் என்பார்கள். மீறுவார்கள். புலிகள் மீது பழி போடுவார்கள்.

இலங்கைக்கு இந்தியத் தூதராக ஜே.என்.டிக்ஸிற் பொறுப்பேற்றார். 'வைர நெக்லஸ்' பண்டாரி எப்படி ஜெயவர்த்தனாவுக்கு சீடரானாரோ, அதேபோல் இந்த டிக்ஸிற்றும் இன்னொரு சீடரானார். ஒரே ஒரு நிகழ்வை நினைவுபடுத்துவோம். பிரபாகரனை டில்லிக்கு அழைத்து வரச் சென்ற இராணுவத்தினரிடம் 'பிரபாகரனை சுட்டுக் கொல்லுங்கள். மேலிட உத்தரவு' என்றார்.

சிவசங்கர்மேனனும் இலங்கையில் இந்தியத் தூதராக இருந்தவர்தான். இலங்கை நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த ஈழத் தமிழர்கள் அவரைச் சந்திக்க முயன்றார்கள். ஒரு முறை கூட அவர் அதற்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. விடுதலைப்புலிகளின் கடல் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த இந்தியா - இலங்கைக் கடற்படையின் கூட்டு ரோந்து தேவை என்று திருவாய் மலர்ந்ததும் அவர்தான். அவர் இந்தியாவின் வெளியுறவுச் செயலாளரானார்.

இப்போது இந்தியாவின் தேசி[illegible] பாதுகாப்பு ஆலோசகராக இருப்[illegible] எம்.கே.நாராயணன். இந்திய இராணுவம் ஈழத்தில் இறங்கியபோது நமது உளவுத்துறைத் தலைவராக இருந்தவர். இவர்கள்தான் ஈழப்பிரச்சினையில் ராஜீவ் காந்திக்கு வழிகாட்டிகளாக அமைந்தனர். இலங்கைப் பிரச்சினை தீர ஈழத்தைச் சிலுவையில் அறைய வேண்டும் என்பது இவர்களது கோட்பாடு.

சிங்கள இராணுவம் தினம் தினம் மூர்க்கத்தனமான தாக்குதலை நடத்தும். வான்வெளியிலிருந்து குண்டுகள் போடும். ஆயிரமாயிரமாக ஈழ மக்கள் பலியாவார்கள். அந்தப் படுகொலைகளை இவர்கள் கண்டுகொள்ளவே மாட்டார்கள். ஆனால், புலிகள் திருப்பித் தாக்கினால் 'பயங்கரவாதம்' என்று அலறுவார்கள்.

போர்க்களத்தில் புலிகளை வெல்ல முடியாது என்ற நிலை வந்தபோது, உடன்பாடு காண ஜெயவர்த்தன முன் வந்தார். அதன் மூலம் புலிகளைப் பணிய வைப்பதுதான் ராஜீவ் காந்தியின் நோக்கமாகும். அந்த உடன்பாட்டைத் தயார் செய்ததே நமது 'ரா' உளவு நிறுவனம்தான்.

பிரபாகரனை அழைத்து வர இந்திய இராணுவ ஹெலிக்கொப்டர்கள் ஈழத்திற்குப் பறந்தன. அப்போதுதான் பிரபாகரனைச் சுட்டுக் கொல்லும்படி இலங்கைத் தூதர் டிக்ஸிற் தெரிவித்தார். இது பதிவு செய்யப்பட்ட செய்தியாகும்.

டில்லி வந்த பிரபாகரனை உடன்பாட்டில் கையெழுத்திடும்படி நிர்ப்பந்தித்தனர். அப்போது எம்.ஜி.ஆர். டெல்லியில் இருந்தார். உடன்பாடு உண்மையிலேயே ஈழமக்களுக்குக் கரம் கொடுக்கும் என்று அவர் நம்பினார். உடன்பாட்டில் பிரபாகரன் கையெழுத்திட்டார். அடுத்த நாள் அவரும் பிரபாகரனும் மூன்று மணி நேரம் எதிர்காலத் திட்டம் பற்றி கலந்துரையாடினர்.

உடன்பாட்டை ஏற்க மாட்டோம் என்று இலங்கைப் பிரதமர் பிரேமதாஸா அறிவித்தார். புலிகளின் நிலைகள் மீது சிங்கள இராணுவம் திடீர் தாக்குதல்கள் நடத்தியது. இந்திய அமைதிப்படை ஈழத்தில் இறங்கியது.

[illegible] - ராஜீவ்காந்தியை [illegible] ஆயுதங்களை [illegible] ஆனால், அந்த [illegible] இரகசியமாக இதர நோஞ்சான் போராளிக் குழுக்களுக்கு இந்திய இராணுவம் வழங்கியது.

போர் முனையில் பணிய வைக்க முடியாத புலிகளை, சமாதானம் என்று சரணடைய வைப்பதுதான் உட்பொருள் என்பதனை அடுத்து நடந்த நிகழ்வுகள் அம்பலப்படுத்தின. எம்.ஜி.ஆர். அதிர்ந்து போனார்.

உடன்பாட்டின்படி சிறைகளிலிருந்த மூவாயிரம் போராளிகளை விடுதலை செய்ய வேண்டும். விடுதலை செய்ய ஜெயவர்த்தன மறுத்தார்.

சிங்களத்தோடு தமிழும் ஆங்கிலமும் ஆட்சி மொழி என்று அறிவிக்க வேண்டும். ஆனால் சிங்களம் மட்டும்தான் என்று பிரகடனம் செய்தார்.

உடன்பாட்டைத் தொடர்ந்து சென்னையில் இயங்கிய தங்கள் அலுவலகத்தை புலிகள் மூடினர். அவர்களுக்குப் பொது மன்னிப்பு உண்டு. அதனை நம்பி புலேந்திரன், குமரப்பா உள்பட 17 இளம் தலைவர்கள் பயணமாயினர். இந்திய அமைதிப்படையிடம் தெரிவித்துவிட்டுத்தான் சென்றனர். ஆனால், நடுக்கடலில் சிங்கள இராணுவம் அவர்களைக் கைது செய்தது. இதுதானா உடன்பாடு என்று ஈழம் அதிர்ச்சி அடைந்தது. அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று பிரபாகரன் டில்லியின் கதவுகளைத் தட்டினார். இன்னொரு பக்கம் எம்.ஜி.ஆர். முயன்றார். டில்லி மௌனம் சாதித்தது. ஓர் இயக்கத்தின் எதிர்காலத் தலைமுறையை இந்தியாவால் காக்க முடியவில்லை. அந்த 17 வீரர்களும் பகைவனிடம் மண்டியிட மறுத்து, களச்சாவை சந்தித்தனர்.

மூன்றே மாதங்களில் புலிகளை ஒழித்து பிரபாகரனைக் கைது செய்துவிடலாம் என்பதுதான் இரகசிய உடன்பாடு. இரண்டு ஆண்டுகளாகியும் இந்தக் கனவு நிறைவேறவில்லை. 'பிரபாகரனைக் கைது செய்ய முடியாத இந்திய இராணுவம் வெளியேற வேண்டும்' என்று பிரேமதாஸா எச்சரித்தார். எவ்வளவு பெரிய தலைகுனிவு?

[illegible] நூறு தமிழச்சிகள் பாலியல் [illegible]ரத்திற்கு ஆட்படுத்தப் பட[illegible]கள். இந்திய இராணுவம் புலிகளை வேட்டையாட ஆரம்பித்தது. எட்டிய தூரத்தில் இரண்டு முறை பிரபாகரன் பிடிபடாமல் தப்பினார்.

'இந்திய இராணுவமும் புலிகளும் போரிட்டு அழிகிறார்கள். நமது வீரர்கள் பந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்' என்று பிரதமர் பிரேமதாஸா கைகொட்டிச் சிரித்தார்.

தங்களுக்கு வந்த சவாலை தாங்கள்தான் சந்திக்க வேண்டும். இந்திய அவதார புருஷர்கள் உதவிக்கரம் நீட்ட மாட்டார்கள். வேடிக்கை பார்ப்பார்கள் என்பது ஈழ மக்களுக்கும் புலிகளுக்கும் புரிந்தேவிட்டது. உடன்பாடு என்று நம்பி மோசம் போனோம் என்று நொந்து போனார்கள். ஆனாலும் இறக்குமதி செய்துகொண்ட ஆபத்திலிருந்து எப்படியோ தப்பினார்கள்.

காலப்போக்கில் கருணா என்பவர் இனத் துரோகியானார். சிங்களத்தின் சேவகனானார். அவரை முன்நிறுத்தியே கிழக்கு மாநில புலிகள் முகாம்களை சிங்கள இராணுவம் அழித்தது.

ஒருபக்கம் இனத் துரோகம் இன்னொரு பக்கம் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா, இஸ்ரேல், சீனம், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் போர்க்களத்தில் அணிவகுத்தன. ஒரு வெண்புறாவை வேட்டையாட எத்தனை, எத்தனை வல்லூறுகள்?

எனவே,துப்பாக்கிக் குழாயிலிருந்து இப்போதைக்கு ஈழம் மலரவில்லைத்தான். ஆனால் அது அமைதிப் பூங்காவில் பூக்கப் போகிறது. சர்வதேசச் சூழ்நிலைகள் சரியாக அமைந்து வருகின்றன. அப்போது சந்தனப் பேழையில் உறங்கும் எம்.ஜி.ஆர். கண்விழித்து ஆசீர்வதிப்பார்.

★★★






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்புக்களைப் பயன்படுத்தி உரிமைகளைப் பெற்றெடுக்க ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் வாக்களிக்க வேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன.1

வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டு எமது உரிமைகளை பெற்றெடுக்கும் வகையில் நாம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் செயற்படவேண்டும். மாறாக தென்னிலங்கை எம் மக்களைப் பயன்படுத்தி அதிகாரத்துக்கு வருவதற்கு வழி சமைக்கும் வகையில் எமது அரசியற் கட்சிகள் செயற் படக்கூடாது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாறிவரும் உலகில் அரசியல், பொருளாதார அணுகுமுறை மாற்றங்கள் இன்று உலகமயமாதலின் விளைவாக அனைவரையும் அதன் தாக்கத்திற்கு உள்ளாக்குகின்றன. கடந்த காலங்களில் சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் எமக்கு விமோசனம் தரவில்லை. பலர் ஒதுங்கி நின்றோம். ஆனால் உலக வல்லாதிக்கங்களும் பிராந்திய வல்லாதிக்கங்களும் தமது சுயலாப, பொருளாதார, அரசியல், இராணுவ நலன் கருதியே அனைத்தையும் நடத்தி முடித்தனர். இன்றும் தமது நலன்கருதியே முட்டி மோதுகின்றனர்.

மறுபுறம் பொரும்பான்மைக் கட்சிகள் தமது இருப்புக்களை உறுதிப்படுத்தவும் அவர்களின் சுயநலன் கருதியும் இன்றைய நிலையில் இலங்கையின் இராணுவப் பொருளாதார மையங்கள் மேல் உலகநாடுகள் கொண்டுள்ள அக்கறையையும் அதன் மூலம் உலக நாடுகளிடம் எழுந்துள்ள மறைமுக மோதல்களையும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அணிதிரண்டு நிற்கின்றன. எவ்வாறாயினும் இக்கட்சிகள் மிகப்பெரிய உள்நோக்கங்களுடனும் நீண்டகால பார்வையுடனும் தமது நடவடிக்கைகளைத் திடமாகவே மேற்கொள்கின்றன. அவை சிறுபான்மையினருக்கு எதைத் தந்திடப்போகின்றன என்பதை, இதுவரை எதை ஏமக்குத் தந்தார்கள் என்பதை வைத்து மக்கள் மதிப்பிடட்டும்.

ஆனால் எம் அன்புக்குரிய மக்களே!

இன்றைய நிலையில் எமது தமிழ்ச் சமூகத்தின் எதிர்கால நிலையைத் தீர்மானிக்கும் சக்தியாக மக்களாகிய நாம் காத்திரமாக முடிவெடுக்கவேண்டும். கடந்த காலங்களைப் போல் மீண்டும் நாம் பிறரால் ஆட்டுவிக்கப் படுபவர்களாக இல்லாமல் எமது விதியை நாமே நிர்ணயிக்க வேண்டும். இதற்காக நாம் எமக்குக் கிடைத்திருக்கும் சிறிய துரும்புச்சீட்டையும் உரிய வகையில் உபயோகிக்க வேண்டும். வீரவசனங்களாலும், வெற்றுப் பேச்சுக்களாலும் காலம் கடத்தும் எமது அரசியல்வாதிகளை உரிய வகையில் நாம் இனங்காணவேண்டும். இவர்களில் பலர் பொதுநலன் சார்ந்து நிகழ்கால, எதிர்கால நடைமுறை யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாது தமது இருப்பைப் பேணுவதை மட்டுமே குறியாகக் கொண்டு மக்களை மீண்டும் துன்பத்தில் தள்ள முயல்கின்றனர்.

### புலம்பெயர் உறவுகளின் கருத்துக்கள் செப்பனிடப்பட வேண்டியவை

எமது புலம்பெயர் உறவுகள் பல தமிழர் பிரதேசத்தின் நடைமுறை யதார்த்தம் புரியாது பல கருத்துக்களை வெளியிடுகின்றனர். அவர்களின் கருத்துக்களை செப்பனிட வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குள்ளது. ஏனெனில் எமது பிரதேசத்தின் மீள்கட்டுமானம், பொருளாதார அபிவிருத்தி சார்ந்த முதலீடுகள் என்பன புலம்பெயர் உறவுகளின் நிதி மூலங்களாலேயே கட்டியெழுப்பப் படவேண்டிய உள்ளத்தோடு எமது நியாயமான அரசியல் அபிலாசைகளை எமது இனத்திற்கேயான தனித்துவத்தோடு பெற்றெடுக்க அவர்களின் குரல் இன்றியமையாதுள்ளது.

இருவரில் ஒருவரே வெற்றிபெறுவர் என்னும் நிலையில் உள்ள எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இன்றுவரை முடிவெடுக்காதநிலையில் பல அணிகளாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரிந்து நிற்கின்றது. தமிழ் மக்களைக் கடந்தகாலத்தைப் போல் தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் எனக் கூறுவதோ அல்லது தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கும் வகையில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடுவது புத்திசாலித்தனமானதும் அல்ல, தமிழ் மக்களுக்குரிய பேரம்பேசலை தக்கவைக்க உகந்ததுமல்ல. உணர்ச்சிகளின் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகள் எவ்வாறான விளைவுகளைப் பெற்றுத் தரும் என்பதைக் கடந்தகாலம் எமக்குக் கற்பித்துவிட்டது. மாறிவரும் போக்கினை உணராது வாய்புக்களைக் தவறவிட்டால் எமது இனம் இருள் சூழ்ந்த எதிர்காலத்தையே எதிர்கொள்ள நேரிடும்.

### தமிழ் அரசியல் கட்சிகள் சரியாகச் செயற்பட வேண்டும்

அழிவில் உருக்குலைந்த பல நாடுகள் இன்று உலகிலேயே இராணுவ, பொருளாதார வல்லாதிக்க நாடுகளாக மாறிவிட்டன. அவர்களிடமிருந்து நாம் நிறையக் கற்றுக் கொள்ளவேண்டும். அமெரிக்காவால் உருக்குலைந்த ஜப்பான் அமெரிக்காவோடு இணைந்து செயற்பட்டு இன்று அமெரிக்காவை விட முன்னேறிச்சென்றுவிட்டது. ஆனாலும் இன்றுவரை ஜப்பான் தனது நாட்டின் தனித்துவத்தை இழக்கவில்லை. வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொண்டு எமது உரிமைகளைப் பெற்றெடுக்கும் வகையில் நாம் செயற்படவேண்டும். மாறாக தென்னிலங்கை எம்மக்களைப் பயன்படுத்தி அதிகாரத்திற்கு வருவதற்கு வழி சமைக்கும் வகையில் எமது அரசியல் கட்சிகள் செயற்படக்கூடாது.அவ்வாறு செயற்படும் அரசியல் கட்சிகளுக்கும் கட்சி உறுப்பினர்களுக்கும் மக்கள் உரிய தீர்ப்பளிப்பர். தொடர்ந்து வரும் நாடாளுமன்றத்தேர்தலில் மக்களின் பிரதிபலிப்புக்கள் நிச்சயமாகத் தமிழ் கட்சிகளின் செயல் வீரத்திற்கு முக்கியம் கொடுப்பதாக அமையுமே தவிர வாய் வீரங்களுக்கு முக்கியம் கொடுப்பதாக அமையாது.

எனவே முயற்சியை நிறுத்தாத வரையில் தோல்வி முடிவானதல்ல என்பதற்கிணங்க எமது சமூகத்திற்குச் சுபீட்சமான எதிர்காலத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் அரசியல் பேதங்களை மறந்து அனைத்துத் தரப்பினரும் தொலைநோக்கு பார்வையுள்ள தீர்மானங்களை எடுத்து ஒன்றிணைந்து செயற்படுவோம். அதற்கு யாழ். பல்கலைக் கழக மாணவர் சமூகம் அனைத்துவிதமான ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராக உள்ளது என்பதை யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்து கொள்கின்றது- என்றுள்ளது.

(50)

# ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்காது சீட்டைச் செல்லுபடியற்றதாக்குங்கள்

## புதிய ஜனநாயகக் கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.31

ஜனாதிபதித் தேர்லில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்காது வாக்குச்சீட்டை செல்லுபடியற்றதாக்க வேண்டும். அதன் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான வெகுஜன எதிர்ப்பியக்கத்தை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் வெளிப்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை புதிய ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

கடந்த 30 வருடங்களுக்குப் பின்பு தமிழ் மக்களின் இரத்த வெள்ளத்தில் யுத்தத்தை நிறைவு செய்து வெற்றிவிழா கொண்டாடி நிற்பவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதே வேளை கொடூர யுத்தத்தினை முன்னெடுத்து வந்தவர் இராணுவ ஜெனரல் சரத் பொன்சேகா இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாலும் இந்நாட்டின் உழைக்கும் மக்களினதும் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களினதும் அடிப்படை அபிலாசைகளை நிறைவேற்ற மாட்டார்கள். ஒருவரை நல்லவர் எனத் தேர்ந்தெடுத்து வாக்களிப்பதென்பது அரசியில் விவேகமற்ற செயல் மக்கள் தமது தலைகளுக்குத் தாமே மீண்டும் மண் அள்ளிப் போடுவதாக அமையும்.

இரண்டு பேரினவாதக் கட்சிகளின் சார்பாக நிற்கும் இவ்விரும் பிரதான வேட்பாளர்களுக்கும் அடக்கப்பட்டு வரும் தமிழ், முஸ்லிம் மலையக மக்கள் எவ்வாறு வாக்களிக்க முடியும் என்ற கேள்வியை எமது புதிய ஜனநாயகக் கட்சி கேட்கின்றது.

எனவே இந்த ஜனாதிபதி ஆட்சி முறைமையையும் அதன் கொடூரமான அதிகாரங்களையும் பதவிக்கு வரும் எவரும் வெறும் தேர்தல் வாக்குறுதிக்காக மனமுவந்து கைவிட்டு மக்களுக்கு ஜனநாயகத்தைக் கொண்டு வருவார்கள் என்பது பகற்கனவேயாகும்.

எனவே இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுக்கும் எதிரான தமது வெறுப்பையும், எதிர்ப்பையும் மக்கள் காட்டுவதற்கு உள்ள ஒரு சந்தர்ப்பம் இத்தேர்தலை நிராகரித்து வாக்குச் சீட்டை செல்லுபடியற்றதாக்கிக் கொள்வதே.

அதன் மூலம் மக்கள் தமது அரசியல் பலத்தையும் வெகுஜனப் போராட்ட மார்க்கத்தையும் மாற்று அரசியலாக முன்னெடுக்க முடியும் என்பதே எமது கட்சியின் வேண்டுகோளாகும் - என்றுள்ளது. (50-9)




# ராஜபக்ஷ குடும்பம் சொத்துக் குவித்ததா? முடியுமானால் ஆதாரத்துடன் நிரூபியுங்கள்!

## எதிர்க்கட்சியினருக்கு அரசுத் தரப்பிலிருந்து சவால்

கொழும்பு, ஜன.1

ராஜபக்ஷ குடும்பம் பெருமளவு சொத்துகளைச் சேர்த்து வருகின்றது என்ற தங்களது குற்றச்சாட்டுத் தொடர்பில் எதிர்க்கட்சியினர் முடிந்தால் தகுந்த ஆதாரங்கள், ஆவணங்களுடன் நிரூபிக்கட்டும் என அரசு சவால் விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்தச் சவாலை முன்வைத்தார் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராகச் சேறு பூசுவதற்காக எதிர்க்கட்சிகள் சில ஊடகங்களைப் பயன்படுத்துகின்றன.

ராஜபக்ஷ குடும்பத்தினர் வைத்திய சாலைகள், நிலங்கள் உட்பட பெருமளவு சொத்துகளைக் கொள்வனவு செய்துள்ளனர் என அற்ப குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

இவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை உரிய ஆவணங்களை முன்வைப்பதன் மூலம் எதிர்க்கட்சியினர் முடிந்தால் நிரூபித்துக் காட்டட்டும்.

சரத் பொன்சேகா நத்தார் தாத்தா போன்று செயற்படுகிறார். நடைமுறைச் சாத்தியமற்ற பல உறுதிமொழிகளை முன்வைக்கிறார்.

சரத் பொன்சேகா பாரியளவில் சம்பள அதிகரிப்பைத் தாம் வழங்கப் போகிறார் எனக் கூறுகிறார். இந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டால் திறைசேரி காலியாகிவிடும்.

ஜனாதிபதி யின் தேர்தல் விஞ் ஞாபனம் ஜன வரி மூன்றாம் திக திக்குப் பின்னர் வெளியாகும் - என்றார் அவர். (சி)

# தேர்தல் வன்முறைகள் தொடர்பாக இதுவரையிலும் 115 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜன.1

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக இதுவரை 115 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

அச் சம்பவங்கள் குறித்த விசாரணைகள், முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள அந்தந்த பொலிஸ் நிலையங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

இதுவரை தேர்தல் சட்டங்களை மீறிய குற்றத்துக்காக 25 பேர் வரை கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரத்திலிருந்து திடீர் வீதிச் சோதனைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் சந்தேகத்துக்குரிய வாகனங்களைப் பொலிஸார் சோதனையிட்டு வருகின்றனர் எனவும் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

# கண்ணிவெடி அகற்றாத இடங்களிலேயே மக்களை மீளக் குடியமர்த்துகின்றது அரசு

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

திருகோணமலை, ஜன.1

இடப்பெயர்வுக்கு உள்ளான மக்கள் நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்படாத இடங்களிலேயே குடியமர்த்தப்பட்டு வருகின்றனர் என எதிர்க்கட்சிப் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை கந்தளாயில் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னதாக இடம்பெயர்ந்த மக்களை நிலக்கண்ணிவெடிகளைக் காரணம் காட்டி குடியமர்த்தாது வந்த அரசு, தற்போது அதனைப் பொருட்படுத்தாது குடியமர்த்தி வருகிறது. இது அரசின் அப்பட்டமான தேர்தல் பிரசாரம் என அவர் இதன்போது குற்றம் சுமத்தினார்.

இதேவேளை, அரசில் இதுவரையில் குடியமர்த்தப்பட்ட மக்கள் அனைவரும், தமக்கான அடிப்படை உட்கட்டுமான வசதிகள் எவையுமின்றி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.



அத்துடன், அரசு முன்னதாக அறிவித்த வகையில் எதிர்வரும் ஜன வரி 31ஆம் திகதிக்கு முன்னதாக இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திட்டமிட்டப்படி ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னதாக அரசு இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் மீள் குடியமர்த்தும் என மனித உரிமைகள் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதற்காக அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது எனவும் அவர் கூறினார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மாவட்டத்தில்!
சான்றுகளுடன்
சாதனைகள் படைத்த
முதன்மை நிறுவனம்
என ஆன்றோரின்
தெரிவில்.....

The Express Institute
Irupalai, Kopay.

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS




அமைதியான சூழலில் கற்றலுக்கான சகல வசதிகளுடன்
அனுபவமிக்க ஆசான்களின் வழிகாட்டல்கள்

புதிய கல்வி ஆண்டில் இணைந்து
உயர்ச்சி பெற ஓர் அரிய வாய்ப்பு!

தரம் 03 முதல் O/L வரை

தமிழ், ஆங்கில மொழி மூலமான வகுப்புக்கள்

முதற்கட்ட அனுமதிகள் — இடவசதி உள்ள வகுப்புக்களுக்கு மாத்திரம் அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன... அதிபர்

## தடுத்து வைத்திருந்த வாகனங்கள் விடுவிப்பு

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காகச் சாவகச்சேரி நீதிமன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் நேற்று விடுவிக்கப்பட்டன.

அனுமதிப்பத்திரமின்றி மணல் மற்றும் மரங்கள் ஏற்றிய மைக்காக நேற்றுவரை தடுத்து வைக்கப்பட்டிருந்த வாகனங்களே விடுவிக்கப்பட்டன. (ஒ-207)

**வீலா** பஞ்சாங்க சித்திரக் கலண்டர் டயறிகள்

சித்திரங்களுடனும் இருவர்ணங்களில் அச்சிடப்பட்டு வெளிவந்து இலங்கையிலும் வெளிநாட்டிலும் துரிதமாக விற்பனையாகின்றன

இதுவரை கிடைக்காத அன்பர்கள், வியாபாரிகள், பாவனையாளர்கள், இன்றே கேட்டுப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்கும் கிடைக்கும் ஒரேயொரு சித்திரக் கலண்டர்

**2010 வீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்**

தயாரிப்பாளர்கள் :
**வீலா பிறஸ் பிரைவேட் லிமிட்டட்**
இல. 400, கே. சிறில். சீ பெரேரா மாவத்தை, கொழும்பு – 13.
தொலைபேசி : 2325930, 2325933 பக்ஸ் : 2446077

**அழகுக்கலை பயிற்சி வகுப்புகள்**

வடமராட்சியில் Facials, bleach, Skincare, Face Cleanup, Waxing, Under eye treatment, Hair Care, Oil Massage Face Massage இவையனைத்தும் பயில 1000/- மட்டுமே.

**தொடர்பு: 0779-174674**

**பாலன் மில்**

தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் } ஆலை

கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்து) சூரியகாந்தி விதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோ வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெயாக உடன் ஊற்றித் தரப்படும். நாடவேண்டிய ஒரே இடம்.

பாலன்மில்,
மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை.
(91619)

**தேவை**

உரும்பை தையல் வேலைக்கு இருபாலரும் தேவை.

ஸ்ரீராமராஜ் அன்சன்ஸ்,
603, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5986 (91986)



யாழ் மண்ணில் முதல் முறையாக

முதல் 100 பேருக்கு இலவச இணையத்தளம்

www.addboxsl.com
தை மாதம் 15 வரைக்கும்

நம்ப முடியவில்லையா... உடனே பதிவுகளுக்கு முந்துங்கள்....

**1GB Web Hosting + Domain Name = Rs 4500 Per/Year**



இணையம் பற்றிய பூரண ஆலோசனையும் வழிகாட்டல்களும் இலவசமாக வழங்கப்படும்

அனைவருக்கும் இணையம் அதுவே எங்கள் நோக்கம்

**DIGITAL DREAMS** யாழில் தொடர்புகளுக்கு

198,1ஆம் மாடி காலி வீதி தெகிவளை **078-9133711**

**077-4457401**

**VARATHAN LEARNERS**





எமது வாடிக்கையாளர், ஆதரவாளர் அனைவருக்கும், எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.
கனரக வாகனம் உட்பட சகல வாகனங்களுக்கும், வன்னியில் இருந்து திரும்பி வந்த எமது உறவுகள் சலுகைக் கட்டணத்துடன் லைசன்ஸ் பெறவும்

**தொடர்பு கொள்ளுங்கள்:- VARATHAN**

K.K.S.வீதி, யாழ்ப்பாணம். | கச்சேரி- நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். | கண்டி வீதி, சாவகச்சேரி.

(92055)

சட்டவிரோதமாக மரம் ஏற்றிச்சென்ற சாரதிகளுக்கு அபராதம்

அனுமதிப்பத்திரமின்றி மரங்கள் ஏற்றிச் சென்ற இரு வாகனங்களின் சாரதிகளுக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் தலா 15 ஆயிரம் ரூபாவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை விசாரித்த நீதிவான் இருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து, அபராதத் தொகை செலுத்தத் தவறின் 15 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-207)

## மறக்கமுடியாத நான்காம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 13.01.1932
உதிர்வு: 16.12.2005

திதி: அபரபட்ச பிரதமை
(01.01.2010)

## அமரர் முருகேசு தாமோதரம்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

ஆண்டுகள் நான்கு மறைந்தாலும்
மாறாது எங்கள் மனத்துயரம்
என்றும் உங்களை வழிகாட்டியாகக் கொண்டு
உங்கள் நினைவுடன் வாழ்கின்றோம்

'கோகுலம்',
சங்கத்தானை, சாவகச்சேரி.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனி மற்றும் உறவினர்கள்.

(சி/563586)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி கூறலும்

### வைத்திய கலாநிதி செல்லச்சாமி சிவசம்பு

(D.A.M. (cey) B.S.H. - L.M.M.(India)



தோற்றம் 07.02.1936 — மறைவு 03.12.2009

எமது அன்பு ஐயாவின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (02.01.2010) சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் அவரது (உடுப்பிட்டி) இல்லத்தில் நடைபெற்று தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆற்றில் அஸ்தி கரைக்கப்படும். இந்நிகழ்வில் பங்கு கொண்டு, மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் ஐயாவின் மரணச் செய்தியறிந்து, நேரடியாகவும், தபால், தந்தி, தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும், மலர் மாலைகள், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் பல வகைகளிலும் உதவிகள் செய்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முக்கிய குறிப்பு:- தனிப்பட்ட அழைப்புகள் எதுவும் இல்லை. இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சேச் லேன், உடுப்பிட்டி. — குடும்பத்தினர்.
(91745)

## Computer Express
### Institute of Information Technology

யாழ் நகரில் முதல் முறையாக தமிழ் மொழி விளக்கத்துடன் தொழில்சார் கணனிக்கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன...

| | |
|---|---|
| PROFESSIONAL DIPLOMA IN MICROSOFT OFFICE | 3Months - 3500/= |
| DIPLOMA IN HARDWARE ENGINEERING & NET WORKING | 3Months - 4000/= |
| HONOURS DIPLOMA IN INFORMATION TECHNOLOGY | 6Months - 6500/= |
| DIPLMA IN AUTO CAD & ARCETECTURE DESIGNING | 3Months - 4500/= |
| DIPLOMA IN GRAPHIC DESIGNING & ADVERDICEMENT MARKETING | 4Months - 4500/= |
| DIPLOMA IN STUDIO TECHNOLOGY & MULTI MEDIA | 4Months - 4750/= |
| DIPLOMA IN FILM TECHNOLOGY &VIDEO EDITING | 4Months - 5000/= |
| DIPLOMA IN COMPUTER SCIENCE & PROGRAMMING | 4Months - 4500/= |
| DIPLOMA IN SERVER TECHNOLOGY & WEB PAGE DESIGNING | 3Months - 4500/= |
| DIPLOMA IN PRINTING TECHNOLOGY & DESK TOP PUBLISHING | 4Months - 4500/= |
| DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING & E-COMMERCE | 3Months - 4500/= |

உங்களுக்கு ஏற்ற நேரத்தில் On line வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும்.

O/L பரீட்சை எழுதி முடித்த மாணவர்களுக்காக...

பரீட்சை முடித்த மாணவர்களே! விடுமுறை தினத்தில் என்ன செய்வோம் என்று யோசிக்கிறீர்களா? கவலையை விடுங்கள் இன்றே எம்முடன் இணையுங்கள் என்றும் எமது மாணவர்களுக்காக கணனித் துறையை முன்னேற்ற காத்திருக்கின்றோம்.

எமது நிறுவனம் 15000ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வெளியேறிய முன்னணி நிறுவனமாக திகழ்கிறது.

நன்கு அனுபவம் வாய்ந்த விரிவுரைகள்
அங்கீகரிக்கப்பட்ட தரச் சான்றிதழ்
100% செய்முறை பயிற்சி
குறைந்த கட்டணம்.

ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்

No 167,Kasthuriyar Road, Jaffna.
T.P-021 2228250

Batch i - 02.01.2010= 11AM or 1PM
Batch ii - 06.01.2010= 11AM or 2PM
Batch iii - 08.01.2010= 11AM or 2PM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் இதயத்தில் வாழும் மகேஸ்வரன்

2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி காலை 9.30 மணியிருக்கும். கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த மகேஸ்வரன் எம்.பி. மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்ற அதிர்ச்சித் தகவல் உலகெங்கும் பரவியது. துப்பாக்கிச் சூட்டில் கடும் காயமடைந்த மகேஸ்வரன் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுவதாக அறிந்ததும் அவரது தொலைபேசிக்கே நான் அழைப்பினை எடுத்தேன். கையடக்கத் தொலைபேசியில் எனது நண்பன் மகேஸ்வரன் பேசவில்லை. மாறாக அவரது மெய்ப்பாதுகாப்பாளர் ஒருவர் பேசினார். என்ன நடந்தது? மகேஸ்வரனின் உடல் நிலை எப்படியிருக்கிறது? எனக் கேட்டேன். அவசரத்தில் பேசிய மெய்ப்பாதுகாப்பாளர் ஐயாவை வைத்தியசாலைக்கு கொண்டு போகின்றோம் என மட்டும் கூறிவிட்டு தொலைபேசியைத் துண்டித்துவிட்டார்.

செய்தியை கேட்டதும் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு பதறியடித்துக் கொண்டு நான் சென்றேன். அங்கு மகேஸ்வரன் எம்.பி. துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்டார். அவரைக் காப்பாற்றும் இறுதி முயற்சியில் வைத்தியர்கள் ஈடுபட்டிருந்தனர். அப்போதுதான் மகேஸ்வரன் எம்.பி.யின் மனைவி, பிள்ளைகள் மற்றும் சகோதர சகோதரிகளும் அங்கு வந்தனர். வைத்தியர்களின் முயற்சி பயனளிக்கவில்லை. மகேஸ்வரன் எம்.பி.யின் உயிர் பிரிந்தது.

அவரது சடலம் வெள்ளைத் துணியினால் மூடப்பட்டு பிரேத அறைக்குக் கொண்டு செல்லப்பட்டது. சடலத்தை துணியினால் போர்த்திக் கொண்டு சென்றபோதும் கூட அவசர சத்திர சிகிச்சைக்குத்தான் அவரை கொண்டு போகின்றனரோ என நாம் ஒருமுறை சிந்தித்தோம். ஆனால் அவரது சடலம் பிரேத அறைக்கு கொண்டு செல்லப்பட்டதும் அங்கு கூடியிருந்த நாம் அனைவரும் ஒரு கணம் திகைத்தோம். இறைவா ! இது என்ன சோதனை. உனது சந்நிதானத்தை நாடி வந்த பக்தனுக்கு இத்தகைய கெதியா என நான் சிந்தித்தேன். கதிகலங்கினேன்.

கணவனின் பிரிவைத் தாங்காது மகேஸ்வரனின் மனைவியும், அப்பாவின்

**மகேஸ்வரன் எம்.பி.யின் இரண்டாம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

பிரிவுத் துயர் தாங்காது அவரது மூன்று மழலைச் செல்வங்களும் கதறியழுத போது இறைவா இது என்ன சோதனை என அங்கு கூடியிருந்தவர்கள் மனங்கலங்கினர். தமிழ் கூறும் நல்லுலகமே அதிர்ச்சியில் ஆழ்ந்தது. மகேஸ்வரன் எம்.பி. மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட செய்தி அறிந்ததும் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படாது என்றே எனது மனதுக்குள் நினைத்தேன். ஏனெனில் 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போதும் கொழும்பு கொச்சிக்கடை பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த மகேஸ்வரன் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர். இதில் படுகாயமடைந்த மகேஸ்வரன் உயிர் தப்பியிருந்தார். இவ்வாறு இரண்டாவது முறையும் அவருக்கு ஆபத்து வராது என்று நினைத்தேன். ஆனால் அது நடைபெறவில்லை.

தமிழ் மக்களுக்காக சேவையாற்றிய மகேஸ்வரன் உயிரிழந்து இன்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. அரசியலில் பிரவேசித்து குறுகிய காலத்தில் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்ட மகேஸ்வரன் முதன் முதலில் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருந்தார்.

பின்னர் 2001ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். ஐக்கிய தேசிய முன்னணியின் அரசாங்கத்தில் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் இந்து கலாசார அமைச்சராக நியமிக்கப்பட்ட மகேஸ்வரன் இரண்டரை வருடங்கள் சிறப்பாகப் பணியாற்றினார். இரண்டாவது உலக இந்து மாநாட்டினை நடத்திய பெருமை இவரையே சாரும். தீபாவளிப் பண்டிகையை இவர் தேசிய விழாவாகப் பிரகடனப்படுத்தினார். செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு புதிய தேரினை இவர் அமைத்துக் கொடுத்தார். குடாநாட்டில் பல வீடமைப்புத் திட்டங்கள், மின் விநியோகத் திட்டங்களையும் ஆரம்பித்தார்.

யாழ். குடாநாட்டுக்கான எரிபொருள் தடை உட்பட பொருளாதார தடையினை நீக்கவேண்டும் என்று அவர் போராடினார். அரசாங்கத்தின் அமைச்சராக இருந்து கொண்டு எரிபொருள் தடையினைக் கண்டித்து பலாலி வீதியினை மறித்து அவர் போராடினார்.



இதனைவிட அமைச்சராக இருந்து கொண்டே தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அன்றைய ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்துடனேயே போராடினார். இத்தகைய போராட்டங்களினால் கட்சிக்குள் ஒரு குழப்பக்காரராகவே இவர் சித்திரிக்கப்பட்டார்.

2004ஆம் ஆண்டு மீண்டும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து தமிழ் தேசியத்தின் ஒற்றுமைக்கு வழிவிட்டு குடாநாட்டில் போட்டியிடாது கொழும்பில் போட்டியிட்டார். மகேஸ்வரன் கொழும்பில் போட்டியிடப் போவதாக அறிவித்ததும் பலர் இவர் எங்கே வெல்லப் போகின்றார் என்று எள்ளி நகையாடினர். ஆனால் இலகுவாக அவர் தமிழ் மக்களின் பேராதரவுடன் வெற்றிபெற்றார்.

அன்று இந்து கலாசார அமைச்சராக மகேஸ்வரன் இருந்தபோது இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்தார். இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட இந்து குருமாரின் குருகுலத்தினை திறந்து வைப்பதற்காக மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான எதிர்க்கட்சி எம்.பிக்களை இங்கு அழைத்து வந்தார். இந்தக் குழுவில் அன்றைய எதிர்க்கட்சி எம்.பிக்களான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, ஏ.எச்.எம். பௌசி, பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உட்படப் பலரும் இடம்பெற்றிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் குருகுலம் திறக்கப்பட்ட வேளையில் இன்றைய எதிரணியின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவே யாழ். குடாநாட்டுக்கான இராணுவ கட்டளைத் தளபதியாக பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அன்று ஆளும் கட்சியில் அமைச்சராக இருந்துகொண்டு எதிர்க்கட்சியினரை அழைத்துச் சென்று குருகுலத்தை அவர் திறந்திருந்தார். இத்தகைய நட்புறவான அரசியலையே மகேஸ்வரன் நடத்தினார்.

இன்று ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஆயுதப் போராட்டம் முடிவடைந்துள்ள நிலையில் தமிழ்த் தலைமைகள் தற்போது முட்டி மோதுகின்றன. இந்த நிலையில் மகேஸ்வரனின் இழப்பானது பெரும் அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் யாழ். குடாநாடு உட்பட வடக்கிலும் ஏனைய தமிழ் பகுதிகளிலும் ஐ.தே.க.வின் பிரசார உத்திகள் போதியதாக இல்லை என்ற கருத்து நிலவுகிறது. மகேஸ்வரன் மட்டும் இன்று உயிருடன் இருந்திருந்தால் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் ஏன் ஏனைய தமிழ்ப் பகுதிகளிலும் முன்நின்று பிரசாரப் பணிகளை நடத்தியிருப்பார்.

அரசியலில் துணிந்து செயற்பட்டவர்தான் மகேஸ்வரனாவார். தமிழ் மக்கள் அன்று சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தபோது அவர்களின் நலனுக்காக நாடாளுமன்றத்திலும் வெளியிலும் போராட்டங்களை நடத்திக் குரல் கொடுத்தவர் மகேஸ்வரனாவார்.

கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் தமிழ் மக்கள் வகை தொகையின்றி கைது செய்யப்பட்டபோது கடத்தல், காணாமற்போதல் சம்பவங்கள் உச்ச நிலையை அடைந்தபோதும் மகேஸ்வரன் கொதித்தெழுந்தார்.

அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு எதிராகப் போராடினார். நாடாளுமன்ற அமர்வுகளின் போது நாள்தோறும் குரல்கொடுத்தார்.

2006ஆம் ஆண்டு, 2007ஆம் ஆண்டுகளில் அவர் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு ஆவேசமாக பேசினார். 2007ஆம் ஆண்டு மே மாதம் பிற்பகுதியில் கொழும்பிலுள்ள லொட்ஜ்களில் தங்கியிருந்த தமிழ்மக்கள் பஸ்களில் ஏற்றப்பட்டு வவுனியாவுக்கு அனுப்பப்பட்டனர். அந்த வேளையில் மகேஸ்வரன் துடிதுடித்துப் போனார்.

நாடாளுமன்றத்தில் தனது மேலங்கியை கழற்றி எறிந்து போராடினார். தமிழ் மக்களின் நிலை இதுதான் என்று சர்வதேசத்துக்கு அவர் எடுத்துக் காட்டினார்.

தமிழர்கள் நூற்றுக்கணக்கில் கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் அடைக்கப்பட்டபோது அங்கு நேரடியாக விஜயம் செய்த மகேஸ்வரன் அங்குள்ள மக்களின் வேதனைகளை வெளிக்கொண்டு வந்தார். மக்கள் சேவகன், அஞ்சாநெஞ்சன் மகேஸ்வரனின் மறைவானது உண்மையில் தமிழ் கூறும் நல்லுலகிற்கு பேரிழப்பாகும்.

மகேஸ்வரனின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய மக்கள் வெள்ளமே இவரது சேவைக்குச் சான்றாகும். வெள்ளவத்தையி

**முருகமூர்த்தி**

லுள்ள அவரது வீட்டிலிருந்து பொரளை கனத்தை மயானத்துக்கு மகேஸ்வரனின் பூதவுடல் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டபோது தமது குடும்ப உறுப்பினர் ஒருவர் இறந்து விட்டதைப் போன்று சகல மக்களும் கண்ணீர் விட்டு கதறியழுதனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட வயோதிப மாது ஒருவர் ''தம்பி மகேஸ்வரன் தான் தமிழர்களுக்காக குரல் கொடுத்தான். அவனையும் கொன்று விட்டனர். இனி யார்தான் இருக்கின்றனர். இதனால்தான் ஊர்வலத்தில் கலந்து கொள்கின்றேன்''என்று கண்ணீர் மல்கக் கூறியமை இன்னமும் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

மகேஸ்வரன் மறைந்தாலும் அவர் இன்றும், என்றும் தமிழ் மக்களின் மனங்களில் வாழ்கின்றார். அவரது சேவைகள் ஒருபோதும் அழியா


## பிறந்தநாள் வாழ்த்து

இன்று முதலாவது பிறந்தநாள் காணும் தாவடிப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சா.குமரேச சர்மா- ஸ்ரீவித்யா தம்பதியரின் ஜேஷ்ட புத்திரி செல்வி வசுதாவை இறையருளுடன் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.


வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, பாட்டி, தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், மாமாமார், சித்தி, அக்காமார், அண்ணாமார்.

தகவல்:
சிவஸ்ரீ சோ.பிரணதார்த்திஹரக் குருக்கள் (தாத்தா).
வீரபத்திரகோயிலடி,
கோப்பாய்.




(சி/563616)





IIS இன் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

Join the Leader in Higher Education
Enroll Now in
Edexcel Courses

HND in Computing
in Civil Engineering
in Quantity Surveying
in Business Management

Leading to B.Sc degrees
From UK, US, Canada, Australia Universities

COURSES COMMENCING ON
January 2010

மேலதிக விபரங்களுக்கு:-0214900900

MANIPAL UNIVERSITY
edexcel advancing learning, changing lives
CIM
SLIM Sri Lanka Institute of Marketing
CMA

IIS CITY CAMPUS
200,Sivan pannai Road, Jaffna
T.P:021 222 8060
Fax: 021 222 6933
Web:iiscitycampus.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NORTH LANKA IIT**
#113, Laxan Plaza,
Navalar Rd., Jaffna
0213214305
0217390110
0214920779

அனைவருக்கும் இனிய புது வருட நல்வாழ்த்துக்கள்!!!

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2010**

விண்ணப்பித்துவிட்டீர்களா?

மேற்படி திட்டத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் நீங்கள் தெரிவுசெய்யும் Diploma, Advanced Diploma, Degree கற்கைநெறிகளை மிகக்குறைந்த கட்டணத்தில் கற்பதுடன் பட்டமளிப்பு விழாவிற்கு வெளிநாடு ஒன்றிற்கு செல்லும் வாய்ப்பினையும் பெற்றுக்கொள்ள முடியும்!!!

விண்ணப்ப முடிவுத் திகதி 05-01-2010

புதிய வருடத்தில் உங்கள் பட்டதாரியாகும் கனவை நனவாக்குங்கள்!!


## நடைபாதை வியாபாரம் செய்தோர் பொலிஸாரால் நேற்று அகற்றப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜன. 01

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் போதனா வைத்தியசாலையின் முன்பாகவுள்ள நடைபாதையில் வைத்து புடைவைகளை விற்பனை செய்தோரைப் பொலிஸார் நேற்று அங்கிருந்து அப்புறப்படுத்தியுள்ளனர்.

இன்று நடைபாதையில் புடைவைகள் மற்றும் பொருள்களை வைத்து விற்பனை செய்யக்கூடாது என்றும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த நடைபாதையைப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (04-224)


GENUINE STICKERS Kandy Graphics

**சுரேஸ் மோட்டோர்ஸ் & என்ஜினியர்ஸ்**

BAJAJ

* அனைத்து வகையான வாகனங்களிற்குமானஒரிஜினல் கண்டி கிராபிக்ஸ், Printec,அன்ட் பட்ஜஸ் அனைத்திற்குமான வடக்கு, கிழக்கு மாகாண ஏக விநியோகஸ்தர்கள். 71, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் தமது வியாபார நிறுவனத்தினை ஆரம்பித்துள்ளனர் என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம். முகவர்களிற்கான பதிவுகளை மேற்கொள்ளலாம். 021 7900800

* 2 வீல், 3 வீல் பஜாஜ் உதிரிப்பாகங்கள், இலவச சேவிஸ் என்பவற்றினை கொழும்பு கம்பனி விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

301-303 கண்டி வீதி,
சாவகச்சேரி.
Hot Line:- 0777064110
0776702454
0217201301

(சி/563581)



அனைவருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

**இருபா லேணர்ஸ்**

யாழ்.நகரில் முன்னணிப் பயிற்றுவிப்பாளர்கள்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

பதிவு எண் D.S.589

★ எழுத்துப் பரீட்சையில் சித்தி எய்த விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
★ ஏதாவது ஒரு வாகன அனுமதிப் பத்திரம் உள்ள ஒருவர் கனரக வாகனம் தவிர்ந்த இன்னொரு வாகனத்திற்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெற எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றத் தேவையில்லை. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து வாகனப் பயிற்சிபெற்று ரயலுக்குத் தோற்ற முடியும்.
★ 'ரயல்' பரீட்சையில் சித்தியடைய வான், ஓட்டோ மற்றும் சிறிய ரக, பெரிய ரக மோட்டார் சைக்கிள்களில் விசேட வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
★ அரச, தனியார் ஊழியர்களுக்கு தாம் விரும்பும் நேரங்களில் வாகனப் பயிற்சி அளிக்கப்படும்.
★ தவணை முறையிலான கட்டணம்.
★ குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மிக விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தலைமை: 226, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2224353
077 7225292, 071 5364822

கிளை: மகாத்மா வீதி,
நெல்லியடி.
தொ.பே: 021 3006550

(சி/5633801)



**SHAMROCK**
ஈச்சமோட்டை,யாழ்.

A/L 2012
B.St. - B.S.பசில்
Acc-S.தவா
ECON-NB.கஜீதரன்

தமிழ்- S.சிவா
அரசியல்- S .ஸ்ரனிஸ்லஸ்
நாடகம்- J.ஜோன்சன்
கிறீஸ்.நாக- A.மல்லிகா
புவி- A .றாஜா
அளவை- S.றொகேசியன்
இந்து.நாக.-S.சாந்தி
ENGLISH. G.ரஞ்சித், A.T.முகுந்
G.I.T.-D. செல்வன்

C/Ma- G.கண்ணன்
PHY. ஆசிரியர்
CHE.-M.A.நிரோஜன்



**BITSMANS**
கல்வி நிறுவனம் மாவிட்டபுரம்

A/L பௌதிகம்

2011 அகைகளும் அதிர்வுகளும்
2010 - சடப்பொருளின் இயல்புகள்

ஆசிரியர்
திரு. V.பார்த்தீபன் B.Sc.
ஆரம்பம்- 2/1/2010
சனி . 4.30 p.m


### பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 01

வலிதென்மேற்கு பிரதேச செயலக பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ம.ஜெகூ தலைமையில் முற்பகல் 10.30 மணிக்கு இந்தக் கூட்டம் இடம்பெறும். அன்றைய தினம் மு.ப.11.30 மணிக்கு உளசமூக அமையக் கூட்டமும் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (04-302)

## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 493
சீட்டிழுப்பு திகதி: 30.12.2009

வெற்றி எழுத்து: Y வெற்றி இலக்கங்கள்: 10 39 43 67

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரு.10,000,000.00 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 2,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 50,000/- | 19 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 2,000/- | 221 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரு. 1,000/- | 453 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 40/- | 11032 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரு. 40/- | 6446 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 159596 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 25434 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரு. 8,244,720.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 2473360, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரு.10,003,967.20

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.

## சுவசெத Suwasetha லொத்தா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 345
சீட்டிழுப்பு திகதி: 30.12.2009

வெற்றி எழுத்து: T வெற்றி இலக்கங்கள்: 02 06 54 57 போனஸ் இலக்கம் 60

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப் பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 10,993,671.00 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரு. 50,000.00 | 02 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 1,000.00 | 86 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரு. 500.00 | 114 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரு. 40.00 | 3667 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரு. 40.00 | 2459 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரு. 20.00 | 45886 |

இந்த முறை வெல்வப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரு. 1,405,760.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரு. 11,216,950.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்புக்களின் முன்னோடி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 2473360, 2433631 இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.



**மாதநிறைவு**
**இசை ஆராதனையும் நூல், இறுவட்டு வெளியீடும்**

இயல் இசை வேந்தன்
லயனல் திலகநாயகம் போல்
இறைபதம் பற்றி
மாதமொன்று நிறைவதால்
அந்நாளில் அவர் நினைவில்
இசையாராதனை செய்து
"இசையின் இமயம்" வரலாறும்
"செவ்விசைக் குரல்" இறுவட்டும்
வெளியீடு செய்வதுடன்
அன்னாரின் நினைவால்
அன்பர்கட்கு அன்னபோசனமளிக்க
உள்ளுணர்வு விரும்புவதால்
அன்பர்கள், ரசிகர்கள், அயலவர்கள்
அன்புடன் வந்து
அவர் நினைவிற் கலந்திடுவீர்.
காலம்: 03.01.2010
ஞாயிற்றுக்கிழமை காலை 9.00

மெதடிஸ் மிசன் பாடசாலை வீதி,

இசைச் சக்கரவர்த்தி
லயனல்
திலகநாயகம் போல்
மண்ணில் 06.07.1941
இறைவனடியில் 05.12.2009

(சி/563805)

## மரண அறிவித்தல்

### சுப்பையா சண்முகம் (சரவணை)



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், சரவணை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சண்முகம் நேற்று (31.12.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா- பார்வதி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- இராசம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற கெங்காதேவியின் அன்புக் கணவரும், செல்வராசா, சேனாதிராசா, சிவராசா, செல்வராணி, காலஞ்சென்ற தங்கராசா மற்றும் புஸ்பவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மல்லிகாதேவி, யோகாம்பிகை, இலட்சுமி, காலஞ்சென்ற ரவீந்திரன், மற்றும் இராசம், இராசன் ஆகியோரின் மாமனும் சுயனி, ஈசன், துசாந்தினி, துஷ்யந்தன், சோபனா, தனேஸ், தர்சினி, தர்சன், ரவித்திரா, விதுசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2010) வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சரவணை புன்னங்கண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சரவணை கிழக்கு,வேலணை. பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு மக்கள் மகிழ்வுறும் ஆண்டாக மலரட்டும்!

## துயருறும் உறவுகளுக்கு உதவுவோம்



இறைவனைப் பிரார்த்தித்து புதிய ஆண்டை அனைவரும் வரவேற்போம். புதிய ஆண்டில் நல்ல காரியங்கள் செய்வதற்கு ஆயத்தமாவோம். பல ஆயிரம் உறவுகளை இழந்த ஆண்டை மறக்கமுடியாது. வேதனைதான்; என்செய்வோம். எனினும் இனிமேல் வாழப்போகும் சந்ததிக்கு வளம் சேர்க்க அனைவரும் ஒன்றுபட்டு இழப்பை மறந்து உழைப்போம். எம்மினத்தவரிடையே உள்ள ஒற்றுமையின்மையே இத்தனை இடருக்கும் காரணம் என்பதை உள்ளத்தால் உணர்வோம். ஏதும் அறியா அப்பாவி மக்களை எல்லா அரசியல்வாதிகளும் அவலப்படுத்தும் நிலைமாற வேண்டும் என இறைவனை வேண்டுவோம்.

இப்புதிய ஆண்டில் இந்த நாட்டில் இனியவாழ்வு அனைவருக்கும் கிடைக்க இடைவிடாது வணங்குவோம். பொதுமக்களின் நன்மை கருதி மக்களுக்காகப் பணி செய்ய புறப்பட்ட அனைவரும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; இல்லையேல் ஏதும் பயனில்லை. அல்லல் அறுத்து ஆனந்தமாக வாழ புத்தாண்டில் அனைவரும் செய்யவேண்டிய பிரார்த்தனை ஒற்றுமை பற்றிய பிரார்த்தனையே.

போரின் அனர்த்தத்தினால் தாய், தந்தையரை இழந்து தவிக்கும் சிறார்களை நினைத்து அவர்களுக்கு உதவுங்கள். வாழவேண்டிய வயதில் கணவனை இழந்து கைம் பெண்ணாகத் தவிக்கும் பெண்களின் வாழ்வுக்கு துணைசெய்ய முற்படுங்கள். பிள்ளைகளை இழந்து நிர்க்கதியாய் இருக்கும் பெற்றோர்களுக்கு உதவுங்கள். பகைமைகளை வளர்த்துக்கொள்ளாமல் புதியதோர் உலகைக்காண அனைவரும் வழிதேடுங்கள்.

சகல அலுவலகங்களிலும் பணி செய்யும் அனைவரும் மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்ய திடசங்கர்ப்பம் கொள்ளுங்கள். எந்தவொரு அப்பாவி மக்களையும் அல்லற்பட வைக்காமால் உதவும் கரங்களாகத் தொண்டு செய்யுங்கள். பிறருக்குத் தீமை எண்ணாத நல்லதோர் சமூகத்தை புத்தாண்டில் உருவாக்க அனைவரும் முற்படுவோம்.

இப்புதிய ஆண்டு ஒற்றுமைக்கும் மனித நேயத்தை மதிப்பதற்கும் வழிசமைக்கும் ஆண்டாக மலர எல்லாம் வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களைச் சமர்ப்பித்து அமைகின்றேன்.

ஆறு.திருமுருகன்
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,தெல்லிப்பழை.

## அனைவருக்கும் சர்வ மங்களங்களும் கிட்டட்டும்



இதுவரை காலமும் நாட்டு மக்கள் அனைவரும் பட்ட துன்ப துயரங்கள் நீங்கி சகல இனமத மக்களும் அவரவர் சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடிய வருடமாக இவ் வாண்டு அமைய வேண்டும் என்பதே மக்கள் அனைவரதும் பெரு விருப்பமாகும். புதிய ஜனாதிபதி தலைமையின் கீழ் சிறப்பான அரசு அமையப்பெற்று மக்கள் அனைவரும் சொந்த இடங்களில் மீள் குடியேறி ஒரு தாய் மக்கள் போல சாதி மத பேதங்கள் நீங்கி நிம் மதியான வாழ்வு வாழ நாம் அனைவரும் இறைவனை ஒரு மனதுடன் பிரார்த்திப்போமாக.

பல ஆண்டுகளின் பின் சிவனுக்கு உகந்த விரதமாகிய திருவாதிரை வெள்ளிக்கிழமை நன்னாளில் இவ்வருடம் பிறந்துள்ளது மகிழ்ச்சிகரமாகவும், சிறப்புடையதாகவும் அமைகின்றது. இதனால் மக்களின் விருப்பங்களும் நிறைவேறும். இத்தகைய சிறப் புடன் கூடிய நன்நாளில் அனைவருக்கும் சர்வ மங்களங்களும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு புது வருட ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

'லோகா சமஸ்தா சுகினோபவந்து'

ப.மனோகரக் குருக்கள்,தலைவர்,
சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியம்,இலங்கை.

## எதிர்காலம் சிறப்பாக அமையட்டும்



மக்கள் வாழ்வில் 2009 ஆம் ஆண்டு மறைந்து 2010 புதுவருடம் உதயமாகின்றது. கடந்த காலத்தில் நடந்த அனர்த்தங்களால் மக்கள் வேதனைகளையும் சோதனைகளையும் சகித்த நிலையில் புதுவருடம் புத்துணர்வுடன் விளங்கிட கடந்தகால நிகழ்வுகள் இன்னும் நெஞ்சை விட்டகலவில்லை. மனச்சோர்வுடன் அகதிகளாக வாழ்வதைக் காணமுடிகின்றது. இந்நிலை நீங்கி மக்கள் அனைவரும் சுதந்திரக்காற்றை சுவாசித்து சமய கலை, கலாசார விழுமியங்கள் மறுமலர்ச்சியடைந்து, ஆரோக்கியமான சிந்தனையுடன் எதிர்காலம் சிறந்த வாழ்வியலை அடைவதற்கு இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சிவஸ்ரீ சோ.இ பிரணதார்த்திஹரக்குருக்கள்,கோப்பாய்.

## புதுவாழ்வு பொங்கும் இனிய ஆண்டாக மலரட்டும்



புதிய ஆண்டு பிறக்கின்றதென்ற நினைப்பு எல்லோருடைய மனதிலும் மகிழ்ச்சி யையும், நம்பிக்கையையும் எழச்செய்கின்றது. அத்தகைய ஒரு மன நிலை கடந்த காலத் தில் நடந்த தீயசெயல்களை, துன்பங்களை மறந்து பிறக்கும் இப்புத்தாண்டு புதிய நம்பிக்கையும், புத்துணர்ச்சியும் கொண்டதாக மலரட்டும்.

மக்கள் தாம் அனுபவித்து வந்த துயரங்களும் துன்பங்களும் முற்றாக அகன்று நிம் மதியான வாழ்வு மலர்ந்து தத்தம் இடங்களில் சுற்றத்தாருடன் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதே இப்புத் தாண்டில் அனைவரது பிரார்த்தனையாகும்.

சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் J.P
பிரதமகுரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
சிவாச்சாரிய பீடாதிபதி அகில உலக சைவக் குருமார் சம்மேளனம்.

## இவர்கள் வாழ்த்துகின்றார்கள்

இன்று மலரும் 2010 புத்தாண்டையொட்டி பிரமுகர்கள் மற்றும் அதிகாரிகள் வாழ்த் துச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர். அந்த வாழ்த்துச்செய்திகள் இங்கே தொகுத்துத்தரப்பட்டுள்ளன.

### வடமாகாண ஆளுநர்



வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

2010 ஆம் ஆண்டு வடமாகாண மக்களுக்கு வன்முறை,பயம், பயங்கரவாதம் என்பன இல்லாத ஆண்டாக உதயமாகின்றது. இங்கு நாட்டின் ஏனைய மக்களுக்கு ஒத்ததான வாய்ப்புக்களையும், நம்பிக்கைகளையும் வழங்கும் வசந்தம் வீசும் இத்தகைய சூழலை உருவாக்கும் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அரசாங்கம் கடந்த 30 ஆண்டுகளில் கிடைக்காது போன வாய்ப்புகளையும், வாழ்க்கையையும் மக்களிற்கு பெற்றுத் தருவதில் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் குடியமர்த்தப்படுவதோடு அவர்களது வீட்டு வசதிகள், சுகாதாரவசதிகள் மற்றும் அவர்களது வாழ்வாதாரம், பொருளாதாரம் ஆகியவற்றை கட்டியெழுப்பத் தேவையான உட்கட்டுமானங்களையும், வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வேண்டிய பல நடைமுறைகள் ஆரம்பமாகியுள்ளன. வாழ்க்கையில் பிடிப்பும், நம்பிக்கையும் உண்டாக மக்கள் எவ்வளவு ஆவலாக உள்ளார்களென்பதை ஜனாதிபதி அவர்களின் அரசாங்கம் பூரணமாக விளங்கிக் கொண்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு உன்னதமான இணக்கப்பாடுகளும் ஆன்மிக, கலாசார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் மிகுந்த ஆண்டாகவும் இருக்கும். வடமாகாண மக்கள் இப்புத்தாண்டில் அமைதியும், வளமும் மிக்க வாழ்வினை பெறவேண்டுமென எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றுள்ளது.

### யாழ். படைகளின் தளபதி



யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் எல்.பி. ஆர்.மார்க் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2010 ஆவது புத்தாண்டு மலர்வதையிட்டு உங்கள் அனைவருக்கும் யாழ்.பாதுகாப்புப் படைகளின் தளபதி என்ற வகையில் வாழ்த்துத் தெரிவிப்பதற்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பமானது நான் அடைந்த பாக்கியமாகவே கருதுகிறேன்.

மலர்ந்துள்ள இந்த 2010 ஆவது புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் சாந் தியும் சமாதானமும் நிறைந்த ஆண்டாக வேண்டுமென்று முதலில் பிரார்த்திக்கின்றேன். தமிழ், சிங்கள, முஸ்லிம் உட்பட அனைத்து இன மக்களும் இலங்கையர்கள் என்ற ரீதியில் மலர்ந்துள்ளன இந்த ஆண்டில், அனைவரும் ஒரே இன மக்களாக இணைந்து மகிழ்வுடனும் ஒற்றுமையுடனும் வாழ திடசங்கற்பம் கொள்வோம். முப்பது வருட காலமாக கொடூர யுத்தத்திற்கு முகம் கொடுத்து தற்போதைக்கு அனைத்து போர்ச் சுவாலைகளும் ஓய்ந்து சமாதானத்தின்வாடையில் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கும் யாழ்.குடாநாட்டு மக்களான உங்களுக்குக் 2009ஆம் ஆண்டைவிட சுதந்திரமான ஆண்டொன்று மலர்ந்துள்ளது. அதனைத் தக்கவைப்பதற்காக தரைப்படையினரான நாம் பெரும் சேவையை பொறுப்பேற்றுள்ளோம். உங்கள் அத்தியாவாசியத் தேவைகளை மிகவும் உயர்தரத்திலே நிறைவேற்ற நாம் பெரும் அர்ப்பணிப்புடன் உயிர்த்தியாகத்துடன் செயற்படுவோம் என்பதை உங்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எதிர்காலத்திலும் மக்களுக்கு பாதுகாப்புடன் சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தரைப்படையினர் எப்போதும் செயற்படுவதுடன், இதனை உறுதி செய்யும் விதமாக யாழ்.குடாநாட்டில் இதுவரை காலமும் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் புத்தாண்டிலிருந்து முழுமையாக நீக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்வுடன் அறியத்தருகின்றேன். இதுவரை காலமும் மக்களின் இயல்பு வாழ்வை ஏற்படுத்துவதற்காக பாதுகாப்புப் படையினரான எமக்கு நீங்கள் வழங்கிய ஒத்துழைப்பை பேருதவியாக கருதி மதிப்பதுடன், தொடர்ந்தும் நீங்கள் அவ்வாறே செயற்படுவீர்கள் என்றும் நம்புகின்றேன். அதே போன்று இன,மத,மொழி பேதமின்றி ஒற்றுமையுடன் இப்புத்தாண்டை கொண்டாடுவது போல் எதிர்காலத்திலும் உலகில் பிரிக்க முடியாத ஒன்றுபட்ட இனமாக இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்-என்றுள்ளது. (ஒ)

### யாழ். மாநகர மேயர்



யாழ். மாநகர மேயர் திருமதி. யோ. பற்குணராசா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது :-

யுத்தம் முடிவடைந்து சமாதானம் அரும்பி வரும் இந்த நேரத்தில் மலரும் புத்தாண்டை வரவேற்கும் எமக்கு இனிவரும் ஆண்டில், யாழ். மாநகரத்தின் அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுத்து, நகர மக்களின் அடிப்படை வசதிகளையும் அத்தியாவசிய சேவைகளையும் வழங்கி, கொழும்பு மாநகரசபைக்கு அடுத்த நிலையில் திகழ்ந்த எமது மாநகரசபையை மீண்டும் முன்பிருந்த நிலைக்கு மீள்விப்பதென நாம் இத்தருணத்தில் உறுதி எடுப்போம்.

எமது எண்ணம் போல வடக்கு நோக்கி வரும் வசந்தத்தை வரவேற்று அதன் மூலமாக நகரை அபிவிருத்தி செய்யும் பணி ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற எமது சபையினால் அனைத்து எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதில் நாம் முன்னுரிமை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு அதிகமாகவே உள்ளது.

மலரும் புத்தாண்டில் நகர மக்கள் அனைவரும் நோய், நொடியின்றி ஆரோக்கியமாக வாழ சபையின் அனைத்து சேவைகளும் உறுதுணையாக இருக்கும் விதத்தில் மாநகரசபை தனது பணியைத் தொடருமென நம்புவதோடு, எமது பணிக்கு மக்கள் அனைவரும் துணைநிற்பார்கள் என எண்ணுகிறேன்-என்றுள்ளது. (ஒ)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 13 | | 01 |
| - | | - |
| 08 | | 01 |
| - | | - |
| 1912 | | 2008 |



## அமரர் மாணிக்கம் கந்தையா

திதி: அபரபக்க நவமி (08.01.2010)

ஆண்டு இரண்டு ஆகிவிட்டது ஐயா உங்களை இழந்து
ஆறவில்லை எம்துயரம் கண்ணீரால் நனைகின்றோம்
இவ் உலகில் நல் உள்ளமாய் வாழ்ந்த உத்தமரே
இன்பமாய் நாம் வாழ உழைப்பால் எம்மை உயர்வித்த தெய்வமே
நாம் என்றும் உங்கள் நினைவுடன்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குமரகோட்டம்,
கோண்டாவில். (சி-563820) குடும்பத்தினர்.

## ஈழத்துச் சிதம்பரத்திற்கு நேற்று திரண்டு வந்திருந்த பக்தர்கள்

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ திருவாதிரை உற்சவ பஞ்சரதப் பவனி நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

காலை 7 மணிக்கு இடம்பெற்ற வசந்த மண்டபப் பூசையை அடுத்து நடராஜப் பெருமான் பரிவார மூர்த்திகளுடன் பஞ்சரதங்களில் பவனி வந்து அடியார்களுக்கு அருள்காட்சி கொடுத்தார்.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் உற்சவத்திற்குத் திரண்டு வந்திருந்தனர். அங்கப்பிரதட்சணை, பறவைக் காவடிகள் உள்ளிட்ட பல நேர்த்திக் கடன்களையும் அடியார்கள் நிறைவேற்றினர்.

கடந்த 14 வருடங்களின் பின் முதற் தடவையாக கடற்படையினர் பொன்னாலைச் சந்தியில் எதுவித சோதனைகளும் இன்றி பக்தர்களை ஆலயத்திற்குச் செல்ல அனுமதித்தனர். (ஒ-250)

## திருத்திக்கொடுக்கப்படும்

[illegible] வாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0771341991

## மரண அறிவித்தல்கள்

### திருமதி காத்தமுத்து தேவசுந்தரி அம்மா



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காத்தமுத்து தேவசுந்தரிஅம்மா நேற்று(31.12.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காத்தமுத்துவின் அன்பு மனைவியும் விஸ்வகுமாரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2010) சனிக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு. தகவல்: குடும்பத்தினர். (92077)
தொ.பே.: 021 3734229

### வாரித்தம்பி சிவபாக்கியம்

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி சிவபாக்கியம் நேற்று(31.12.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வாரித்தம்பி சங்கரப்பிள்ளையின் அன்புத் தாயும் அருந்ததியின் மாமியும் காலஞ்சென்ற சர்மிலா, சாளினி மற்றும் சயந்தன், கிருஸ்ணவேணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2010) வெள்ளிக்கிழமை 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வயல்,
சாவகச்சேரி. (92076) தகவல்: மகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடிகளை அகற்றுவதில் நடைமுறைச்சிக்கல்கள் அதிகம்

## நிபுணர் மேஜர் கே.ராஜூ தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 01

வடபகுதியில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன என இந்திய நிலக் கண்ணி வெடி அகற்றும் நிபுணர் மேஜர் கே.ராஜூ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகள் தொடர்பில் எதிர்வு கூறல்களை வெளியிட முடியாத நிலை காணப்படுகிறது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வழமையான ஓர் அமைப்பிற்கு ஏற்ப நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்படவில்லை எனவும் மிகவும் சிக்கல் மிகுந்த வகையில் நிலக்கண்ணி வெடிகள் ஆங்காங்கே புதைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, நிலக்கண்ணிகளை பூரணமாக அகற்றுவது தொடர்பில் காலக்கெடு விதிப்பதோ அல்லது குறித்த கல எல்லைக்குள் பூர்த்தி செய்ய முடியும் என அறிவிப்பதோ நடைமுறைச் சாத்தியமற்றதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு சதுர மீற்றர் பரப்பில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு சுமார் 3 அமெரிக்க டொலர்கள் செலவாகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஊழல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி வருமாறு:-

புதுவருடப் பிறப்பு எமது உள்ளங்களில் எதிர்காலம் பற்றிய புதிய நல்வரவுடன் கூடிய சிந்தனையுடன் பிறக்கின்றது.

உள்ளங்களிலே எரிந்துகொண்டிருக்கும் அனல் யுகம் முடிவுக்கு வந்து, இலங்கை வாழ் சகல மக்களினதும் வாழ்க்கைச் சுமை களையப்பட்டு, நாடு முழுவதும் பரந்து காணப்படும் ஊழல், மோசடி மற்றும் துன்பம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, அச்சமில்லாது, சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு சூழல் உருவாக்கப்பட்டு, குடும்ப ஆதிக்கம் ஒழிக்கப்பட்டு, மக்களுக்குக் கிரீடம் சூட்டப்படக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டு, நீதியும், நியாயமும் ஆதிக்கம் பெறவேண்டும் என்பதே எமது இலங்கைவாழ் மக்களின் நாளைய எதிர்பார்ப்பாகும்.

அந்த சுபீட்சமான எதிர்காலம் மலர பிரார்த்திருக்கிறேன். - என்று உள்ளது. (அ-சி)


**வரலாற்று வகுப்புகள் ஆரம்பம்**
(க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கானது)
இடம் : தாம்சன் கல்வி நிலையம், மக்கள் வங்கி அருகாமை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தரம் : 12 (2011), 13 (2010), Day Class
2012 புதிய வகுப்புகள் ஆரம்பம்.
காலம் : 03/01/2010 ஞாயிற்றுக்கிழமை.
நேரம் : முற்பகல் 10.30
ஆசிரியர் : பிரபல உயர்தர வரலாற்று ஆசிரியர் R.R. ஆனந்தன்
குறிப்பு : (6 வருடகால, ஆசிரியர் சேவையில், 142 (A) பெறுபேற்றினை உருவாக்கியதோடு, 6 மாதங்களில் பிறிதொரு பாடத்தில் இருந்து வரலாற்றுப் பாடத்திற்கு மாறிய 16 மாணவர்களில் 11 (A) பெறுபேற்றை உருவாக்கிய சாதனை ஆசிரியர்)

**வர்த்தகப் பிரிவு**
ஆரம்பம்: 02.01.2010
சனி காலை 8 மணி
A/L 2012
யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்

| | |
|---|---|
| பொருளியல் | திரு. அருணன்<br>திரு. M.C.சுதாகரன் |
| வணிகக் கல்வி | திரு. S.K.பாலசபேஸ் |
| கணக்கீடு | திரு. பாலகஜன் |

BEACON யாழ்.நகர் (வெலிங்டன் சந்தி அருகில்)

தரமான உயர்ரக ஹற்றன் தேயிலை விற்பனைக்குண்டு.
கிடைக்குமிடங்கள்:-
★ பரமேஸ்வரன் ஸ்ரோர்ஸ் (கிளிகடை),இணுவில்.
★ சோதி வர்த்தக நிலையம், கோண்டாவில்.
★ கலா களஞ்சியம், உரும்பிராய்.
★ கஜமுகன் மல்ரி ரேட் சென்ரர் அளவெட்டி
(மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.)
தொ.பே : 0213006944, 0713059433

நிறை குடம் தழம்பாது
விக்னா கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
34 ஆவது வருட சேவையில் தனித்துவமான ஆசிரியர் குழுவின் ஒன்றிணைந்த சேவை
கலை, வர்த்தக வகுப்புகள்
A/L 2012
ஆரம்பம்: 10.01.2010 காலை 8 மணி.
அனுமதிகளை இன்று முதல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


## தென்னாசியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதியதோர் ஆண்டில் காலடியெடுத்து வைக்கும் வேளையில் கடந்த வருடத்தை மீட்டிப் பார்ப்பதும் புதிய ஆண்டின் எதிர்பார்ப்புகள்குறித்துச் சிந்திப்பதும் மரபாகும்.

கடந்த வருடம் நாம் ஒரு தேசமாக ஒன்றிணைந்து 27 வருடகால கொடூரப் பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, எமது மக்கள் மத்தியிலிருந்த சந்தேகம், பிரிவினை என்பவற்றைத்துடைத்தெறிந்ததன் மூலம் நாம் பெற்றுக்கொண்ட அடைவுகள் குறித்த பெருமையோடும் திருப்தியோடும் புதிய ஆண்டில் பிரவேசிக்கின்றோம்.

ஒரு தேசம் என்ற வகையில் முன்னேற்றத்தையும் சுபீட்சத்தையும் எதிர்பார்க்கும் எமது மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும் எமது எதிர் கால சந்ததியினருக்கு அமைதியும் ஐக்கியமும் நிறைந்த நாட்டைக் கட்டியெழுப்பவும் முடியுமென்ற மிகுந்த நம்பிக்கையோடு நாம் இப்புத்தாண்டைப் பார்க்கிறோம்.

பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் எமது முயற்சிக்கு குறுக்கே நின்ற இடையூறுகளுக்கு எதிராக நாம் உறுதியாக இருந்தது போன்று கடந்த கால காயங்களைக் குணப்படுத்தும் விடயத்திலும் வெளியிலிருந்துவரும் அழுத்தங்களுக்கு அடிபணியாது அந்த இலக்கை அடைந்துகொள்ள எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

இன்று ஆரம்பிக்கும் புதிய தசாப்தத்தின் எமது அபிவிருத்தி மூலோபாயங்கள் இலங்கையை தென்னாசியாவிலேயே ஒரு கேந்திர நிலையமாக மாற்றியமைக்கும். அந்த வகையில் அபிவிருத்தியைக் கட்டியம் கூறும் வகையில் அமைக்கப்படும் துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் விரிந்த நெடுஞ்சாலைகளின் நிர்மாணப் பணிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுவரும் அதேவேளை, தகவல் தொழில்நுட்ப அறிவையும் பரந்தளவில் அதிகரிக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

எதிர்பார்க்கப்பட்ட ஒரு குறுகிய காலப் பகுதியில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த சுமார் மூன்று லட்சம் மக்களில் பெருந்தொகையினரை மீள் குடியேற்றும் நடவடிக்கையில் நாம் வெற்றிகண்டோம். இதேபோன்று, புத்தாண்டில் எமது மக்கள் நாட்டின் அரசியல் அபிவிருத்தியில் ஒரு தீர்க்கமான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கையின் தேசிய விவகாரங்களில் மூலோபாயத் தலையீடுகளைக் கொண்டுவர விரும்புபவர்களால் ஏற்படுத்தப்படும் பொருளாதாரத் தடை அல்லது வர்த்தக நலன்களை, தடைசெய்யும் அச்சுறுத்தல்களால் நாம் பின்வாங்கப்போவதில்லை.

மலர்ந்திருக்கும் இப்புத்தாண்டில் நாம் எதிர்பார்க்கும் அபிவிருத்தி எமது சூழலைப் பாதுகாப்பதுவும் அதிகரித்துவரும் போட்டிமிக்க உலக சந்தைச் சூழலில் எமது உற்பத்திகளுக்கு நல்லதொரு இடத்தை உறுதி செய்யும் அதேவேளை, எமது தேசிய சொத்துகளைப் பாதுகாப்பதுவுமாகும்.

எல்லா இலங்கையர்களினதும் அபிலாஷையான கண்ணியமும் கீர்த்தியும் மிக்கதோர் இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகத் தேசத் தின் ஸ்திரத் தன்மை, எமது மக்களின் முன்னேற்றம் என்பவற்றுக்கான அர்ப்பணிப்போடு சமாதானமும் மகிழ்ச்சியும் சுபீட்சமும் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்- என்றுள்ளது.

(அ-சி)

## மஹிந்தா, ரணில் இருவருடனும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத் தரப்பு, எதிர்த்தரப்பு ஆகிய இரண்டு பக்கங்களுடனும் தமிழ்க் கூட்டமைப்பு தொடர்ந்து பேச்சுகளை நடத்திவருகின்றது.

நேற்று முன்தினம் இரவு அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலை மையிலான அரசுத் தரப்பினருடன் இரா. சம்பந் தனும், மாவை சேனாதிராஜாவும் சுமார் ஒன்றரை மணிநேரம் பேசினர். அரசுத் தரப்பில் ஜனாதிபதியுடன் அவரது சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ எம்.பி., அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் பங்குபற்றினர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுத்தரப்பினால் முறைப்படி முன்வைக்கப்பட் டது.

எனினும், இவ்வளவு காலமும் - கடந்த நான்கு வருடங்களும் - அரசுத் தரப்பி னால் தமிழ்க் கூட்டமைப்பு எப்படி நடத் தப்பட்டது என்பதை ஆரம்பத்திலேயே சம்பந்தன் எம்.பி., அரசுத் தரப்புக்கு உறைக்கும் விதத்தில் உரைத்தார் எனக் கூறப்படுகின்றது.

''இந்த நான்கு ஆண்டுகளாக ஜனாதிபதியைப் பல தடவைகள் சந்தித்துப் பேசினோம். ஆனால், எங்களை (கூட்டமைப்பை) தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக மதித்துச் செயற்படக் கூட அரசு தயாராக இருக்கவில்லை.

டக்ளஸ் தேவானந்தாவையும், கருணா வையும் வைத்துக்கொண்டு தமிழ்மக்க ளின் பிரச்சினையைக் கையாளலாம் என்று கருதித்தான் இதுவரை நீங்கள் செயற்பட் டுள்ளீர்கள்.

### வடக்கு கிழக்கு இணைப்பை முறியடித்த அரசு

வடக்கு - கிழக்குப் பிரிப்பு விடயத்தை இந்த அரசே முழு அளவில் முன்னெடுத் தது. அதன் மூலம் அரசியல் தீர்வுக்கான அடிப்படைச் சூழலையே நீங்கள் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டீர்கள். இணைப்பை சட்டரீதியாக உறுதிப்படுத்தும் முயற்சிக்கு உதவ ஐ.தே.கட்சி தயாராக இருந்தது. ஆனால், அந்த வசதியான வாய்ப்பை நீங்கள்தான் வேண்டுமென்றே பயன்படுத் தாமல் முறியடித்தீர்கள்.

எங்கள் மக்கள் எங்கள் மீது அதிகம் நம் பிக்கை வைத்துப் பார்த்திருக்கின்றார்கள். அவர்களை - எந்த அழுத்தம் கருதியும் - நாம் கைவிட மாட்டோம்.

*''நாங்கள் அடுத்த தடவை ஆட்சிக்கு வந்ததும் உங்களோடு பேசி இனப்பிரச் சினைக்குத் தீர்வு காண்போம் - என்று நீங்கள் இன்று கூறும் உறுதியுரையை மட்டும் நம்பி நாம் திருப்திப்பட முடியாது. இத்தகைய பல உறுதியுரைகளைத் தென் னிலங்கையிடம் பெற்று ஏமாந்து போனமையே எமது வரலாறாக உள்ளது.''* - இப்படி இரா. சம்பந்தன் அரசுத் தரப்பினரிடம் கூறினார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட்டாரங்கள் தெரிவித்தன.

*''அரசியல் தீர்வு பற்றிய விடயத்தில் நாம் மீள ஆட்சிக்கு வந்து உங்களுடன் தான் பேசித் தீர்வு காண்போம் என்ற உறு தியுரையை மட்டுமே அரசு தந்தது. அதற்கு அப்பால் தீர்வுக்கான அடிப்படை யைக் கூட அவர்கள் கோடி காட்டவில்லை. அதனால் இந்தப் பேச்சுகளில் முன்னேற் றமோ, திருப்தியோ இல்லை''* என இரா. சம்பந்தர் சார்பில் பேசவல்ல கூட்டமைப் புப்பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். எனினும், தமிழ்மக்களின் உடனடிப் பிரச்சினைகள் குறித்து இரு தரப்புகளிலும் தாராளமாகக் கருத்துகள் பரிமாறப்பட்டன என்றும் அப்பிர திநிதி கூறினார்.

### முன்னேற்றகரமான பதில் இல்லை

''வலி வடக்கு மக்கள், முஸ்லிம் மக்கள் உட்பட இடம்பெயர்ந்த அனைத்து மக்கள் தொடர்பாகவும் மீள்குடியமர்வு நடவடிக்கை விரைந்து எடுக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தினோம். இதுவரை மீள்குடியமர்வு விடயம் தொடர்பாக அரசு எடுத்தவை என்று கூறப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் எமக்குத் திருப்தியில்லை என்பதைச் சுட்டிக்காட்டினோம். அந்த மக்களுக்கு உரிய வாழ்வாதாரங்கள், சமூகக் கட்டமைப்புகள், குடியிருப்பு வீடுகள், வேலைவாய்ப்புகள், வருமான ஆதாரங்கள் போன்றவை வழங்கப்படாமல் அவர்களை வெறுமனே முகாம்களுக்கு இடம் மாற்றியோ அல்லது உறவினர் வீடுகளுக்கு மாற்றியோ விடுவதில் அர்த்தமில்லை என்பதைக் கூறினோம்.

*வடக்கு - கிழக்கு உயர் பாதுகாப்பு வலயங்களை விலக்கி மக்களை மீளக்குடியமர்த்தல், இராணுவ செயற்பாடுகளைக் குறைத்து மக்களின் சுதந்திர நடமாட்டத்துக்கு அனுமதித்தல், தடுப்புக்காவலில் உள்ள கனகரட்ணம் எம்.பி. மற்றும் கிளிநொச்சி அரச அதிபர் ஆகியோரை விடுவித்தல் ஆகியவை குறித்தெல்லாம் அரசுத் தரப்பினரிடம் வலியுறுத்திப் பேசினோம்.*

*உடனடிப் பிரச்சினைகள் குறித்து எமது தலைவர்கள் இருவருடனும் உரையாடிய அரசுத் தரப்பினர், இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய விடயத்தில் ஆக்கபூர்வமான - முன்னேற்றகரமான பதில் எதையுமே தரவேயில்லை.''*- என்றார் அவர்.

### ரணிலுடன் நடந்த சந்திப்பில் ஆக்கபூர்வமான யோசனைகள்

இதேசமயம், நேற்றுக் காலை கொழும்பு, கேம்பிரிட்ஜ் டெரஸில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் அவரை இரா. சம்பந்தன் எம்.பி. தனியாகச் சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரம் உரையாடினார்.

''இந்தப் பேச்சு முன்னேற்றகரமாக இருந்தது. சாதகமான முறையில் - பாதகமற்ற வகையில் - அது அமைந்தது. பேச்சுக்களில் முற்போக்கான பல விடயங்கள் இடம்பெற்றன. தமிழர் தாயக ஐக்கியம் தொடக்கம் அரசியல் தீர்வு வரை பல விடயங்களில் ஆக்கபூர்வமான யோசனைகள் ஆராயப்பட்டுள்ளன.

*''இந்தச் சந்திப்பை அடுத்து நான் இன்று (வெள் ளியன்று) திருகோணமலை செல்கிறேன். திரும்பி வந்து ஒருதடவை ஜெனரல் சரத் பொன்சேகாவை நான் சந்திக்க வேண்டியிருக்கும். அதன் பின்னரே - ஜனவரி 4 ஆம் திகதி - எமது நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தில் இவ்விடயங்கள் குறித்து ஆராய்வோம்.''* - என்று சம்பந்தர் நேற்றுத் தெரிவித்தார். (அ-சி)


**மெய்கண்டான் கலண்டர் விற்பனையாகிறது**
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

**COLLEGE OF CHEMISTRY**
* TAMIL MEDIUM :Sa,Su 3 p.m.
2012 A/L Tu.4.30 P.m
* ENGLISH MEDIUM : Tu,We,Th
6.15- 7.30 A.m.
DIAS Bsc (Hons) Spl in Chem.
32, Palam Rd, Kantharmadam, Jaffna.

**BEACON** யாழ்.நகர் (வெலிங்டன் சந்தி) A/L 2012
கலைப்பிரிவு

| | |
|---|---|
| தமிழ் | வழமையான ஆசிரியர் |
| இ.நாகரிகம் | K.S.ரமணன் |
| அளவையியல் | S.S.மனோகரன் |
| அரசியல் | N.றஜிதா |
| புவியியல் | S.P.கரன் |
| வரலாறு | S.விக்கி |
| நாடக அரங்கியல் | S.R.ரமேஸ் |

ஆரம்பம்: 02.01.2010
சனி காலை 8 மணி.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
**A.C பஸ் புக்கிங் சென்ரர்**
பஸ் புறப்படும் நேரம் : காலை7 மணி
இடம் :யாழ். போன்சொப்
இல.9, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசான பாதுகாப்பான பயணத்திற்கு முன்கூட்டியே ஆசனப்பதிவுகளை மேற்கொள்ளலாம்.
இன்று முதல் கட்டணம் 200 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.
உங்கள் பதிவுகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்

| யாழ்ப்பாணத்தில் | கொழும்பில் |
|---|---|
| 021 222 7125 | 0113133811 |
| 021 222 3817 | 0113133815 |
| 077 3611282 | 0113133812 |






**KARAN ELECTRICAL**
Dealers & Distributors for all Kinds of Electrical Equipments.
Authorized Distributors For
ORANGE ELECTRIC ORANGE LIGHTING BRIGHT ELECTRICAL HOME APPLIANCES KANCHAN Kitchen & home appliance ALICTA PVC Pipes, Square Cutters & Fittings



KE Karan Electrical
No:100, Stanley Road, Jaffna. Tel: 021 222 8772, Fax: 021 222 4505


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் மார்க்கண்டு



வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கச்சேரியை வசிப்பிடமாக கொண்டவருமான ஆறுமுகம் மார்க்கண்டு நேற்று (31.12.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2010) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

113/1, பாரதி வீதி,
யாழ்ப்பாணம். (சி/563828)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
01.01.2010

# புதுவருட சிறப்பு மலர் 2010

## இறை நம்பிக்கையோடு ஆண்டைஆரம்பிக்க இறையாசி வேண்டுகிறேன்



புதிதாய் மலர்ந்த புத்தாண்டில் இயேசு பாலனின் அருள் வேண்டி இவ்வருடத்தை ஆரம்பிக்கின்றோம். இறைவனிலே தொடங்கி இறைவனிலே முடிப்பது ஆசிரும், அருள் அளிக்கும் செயலுமாகும். எனவே நன்றியுடன் 2010ஆம் ஆண்டை இறை கரங்களில் இருந்து பெற்றுக்கொள்கின்றோம்.

சென்ற வருடம் தமிழ் மக்களாகிய எமக்கு மிக வருத்தம் நிறைந்த ஆண்டாக இருக்கின்றது. எம் மக்கள் பல்வேறு இடப்பெயர்வுகளின் அவலத்தைச் சந்தித்தது மட்டுமல்ல, ஒரு கொடிய போரை எதிர்கொண்டு அதன் விளைவுகளால் பாதிக்கப்பட்டனர். உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஆகிய பெரும் துயரங்களைச் சந்தித்து இறுதியில் அகதி முகாங்களில் பல்வேறு நெருக்கடியின் மத்தியில் செலவழித்தனர். மீள் குடியேற்றப் பணிகள் துரிதகதியில் நடந்தும் மக்களின் துன்பியல் வாழ்வு இன்றும் முடிந்ததாக இல்லை.

யுத்த தளபாடங்கள் ஓய்ந்து அமைதி நிலவினாலும் இவ்வருடத்தின் ஆரம்பத்திலேயே இன்னுமொரு தேர்தலை மக்கள் சந்திக்க வேண்டியுள்ளது. இதன் பயனீ மக்களுக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ இருக்கும் என்பதில் பயமும் அச்சமும் உண்டு. வடக்கில் மீள் குடியேற்றம் நீதியோடும் நேர்மையோடும் நடைபெறவும் அனைத்து மக்களும் தமது தொழில் துறைகளில் முன்னேறவும், கல்விச் செயற்பாடுகள் வளர்ந்து மாணவ மாணவிகள் திறமை அடையவும் அனைத்து மக்களும் இறை நம்பிக்கையோடும், இவ் ஆண்டை ஆரம்பிக்க இறை ஆசி வேண்டி அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேதகு இ. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ். ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## புதிய வருடம் ஆசீர்வாதமான ஆண்டாக அமையட்டும்

அன்பான வாசக சகோதரர்களே,



இன்று புதியதோர் ஆண்டிற்குள் இறைவன் நம்மை அழைத்துச் செல்கிறார். 2010 ஆம் ஆண்டு எப்படியாக அமையும் எனப் பல கேள்விகள் நமக்குண்டு. பலர் இன்று பொதுவாகப் பேசும்போது வரப்போகும் தேர்தலுக்கு பின் எமது நிலை எப்படியாக அமையுமோ என ஐயப்பாடுகளைக் கொண்டுள்ளனர்.

கடந்த முப்பது வருடமாக அனுபவித்து வந்த கடினமான வாழ்வும், பட்ட துன்பங்களும், ஏற்பட்ட இழப்புகளும் மீளவும் ஏற்படாது என்ற நம்பிக்கையை இறைவனிடம் இருந்து பெற்றுக்கொள்வோம். எந்தச் சந்தர்ப்பத்திலும் இறைவன் நம்முடன் இருக்கிறார் என்ற நம்பிக்கை எங்களில் வளரவேண்டும்.

புதிய நம்பிக்கையுடனும், புதிய எதிர்பார்ப்புடனும், புதிய உற்சாகத்துடனும் புதிய வருடத்தை வரவேற்போம்.

எங்களோடு எம்மத்தியில் வாழும் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த மக்கள், தங்கள் உடைமைகளை, நிலங்களை இழந்த மக்கள், தடுப்பு முகாமிலே இருக்கும் உறவுகள் இவர்களையும் எம் வாழ்வோடு இணைத்து எம்மாலான உதவிகளையும் அன்பையும் பகிர்ந்து கொள்வோமாக.

இப்புதிய வருடம் நம் அனைவருக்கும் ஆசீர்வாதமான ஆண்டாக இருப்பதாக.

வணபிதா.செ.பி. நேசகுமார்,
குருமுதல்வர்,
இலங்கைத் திருச்சபை.

## புத்தாண்டில் மானிட மாண்பு மீள் சீரமைக்கப்படப் பிரார்த்திப்போம்

எல்லோரும் இன்புற்று வாழவும் இறைவனில் அன்பு செலுத்தி வாழவும் இறைவனின் அருளை முன்னிட்டு வாழ்த்துகின்றேன்.



தனி மனிதருக்கும் தேசத்திற்கும், திருச்சபை மக்களுக்கும் இன்று சமாதானம் தேவைப்படுகின்றது.

இன்றைய உலகை நோக்கினால் பல விஞ்ஞான,தொழில்நுட்ப வளர்ச்சி ஆகிய யாவும் அதன் நவநாகரீக முன்னேற்றத்தைப் பறை சாற்றுகின்றன. மறுபுறத்திலோ, தற்காலச் சூழ்நிலைகள் மனித நாகரீகத்தை எள்ளி நகையாடும் சவால்களாய் திகழ்கின்றன. இதனால் மனிதன் சமாதானத்தை அதிகமதிகமாய் இழந்து வருவதை அவதானிக்கலாம்.

ஆகவே இதய சமாதானமும் சமூக சமாதானமும் மானிட மாண்பின் மீள் சீரமைப்புக்கு வழிகோலும். சூழ்நிலை ஏதுக்களால் மனம் சோர்ந்து போகாமல் இறைவனின் தயவினாலே நாம் பெற்றடையும் எமது உள்ளான இதயத்து சமாதானமாகிய அவரது ஈவைப் பெற்று அச் சமாதானம் இடம் பெறுவதை நாம் இப்புத்தாண்டில் நாடுவோமாக. மானிட மாண்பை மீள் சீரமைக்கும் இறைபணியிலே நாமும் முழுமூச்சுடன் ஈடுபட்டு இறைவன் நம்மை அழைத்த பணிக்கேற்றதாக எமது பங்கினை ஆற்றுவோமாக.

''யுத்தத்தை, உருக்காயுதங்களைக் கையாளும் மனிதர்களைக் கொண்டு வெல்வதைவிட வார்த்தைகளால் சங்கரிப்பதே அதிக மேன்மை. சமாதானத்தை சமாதான வழிமுறைகளிலே அடைவதே மெய்யான மேன்மை.'' எனும் புனித அகஸ்தீனுடைய வார்த்தைகளும், ''ஒருவனுக்கும் தீமைக்கும் தீமை செய்யாதீர்கள்... நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு'' (ரோமர் 12:17-21) எனும் புனித பவுல் அடிகளாரின் வார்த்தைகளும் எமக்குள் மனக் கருத்தை உருவாக்கட்டும்.

மலரும் புத்தாண்டில், மானிட மாண்பை மீள் சீரமைக்கும், இதய சமாதானத்தையும் இவைகளுக்கு அடித்தளமாயுள்ள மெய்யான நேர்மையையும் வாய்மையையும் எமக்குள் அரியணையேற்றுவோமாக.

எல்லோருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்

அருட்திரு சத்தியசீலன் கே.கதிர்காமர்,
குரு முதல்வர், இலங்கை மெதடிஸ்த திருச்சபை,
யாழ்ப்பாண சேகரம்.

## சமாதான நல்வாழ்வு மலரட்டும்

இன்று புது வருடப்பிறப்பு



நன்னாளாகும். இந்த வருடமானது இங்கு வாழ்கின்ற அனைத்து மக்களுமே அமைதியும் சுபிட்சமும் மங்களமும் நிறைந்து வாழ்கின்ற நிம்மதியைத் தருகின்ற ஒரு நிறைவான ஆண்டாக மலரட்டும்.

இற்றை நாள்வரை பட்ட துன்பதுயரங்கள், இன்னல் இடுக்கண்கள் யாவும் நீங்கப் பெற்று இன்று முதல் நிம்மதி நிறைந்த சமாதான நல்ல வாழ்வு மலர வேண்டுமென்று எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானை வாழ்த்தி வணங்கி எமது நல்லாசிகளை வழங்குவதில் இறும்பூதெய்தி நிற்கின்றோம்.

ஈழம் வாழ்கின்ற எல்லா மக்களுமே சந்தோஷம் நிறைந்து, மன மகிழ்வெய்தி, மங்களகரமான நல்வாழ்வு கிடைக்கப் பெற்று தன்னிறைவுள்ள தகைமைகள் பெற்று, ஒற்றுமையுடனே 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு' என்னும் முதுமொழிக்கிணங்க சகல வளங்களோடு சகல சௌபாக்கியங்களும் கைவரப்பெற்று இனிமேல் இன்ப வாழ்வு வாழ வேண்டுமென்று நல்லை குருமணியின் பாதபங்கஜ மலரடி தொழுது சிந்தித்து வந்தித்துச் சேவித்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகளை வழங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்!

வாழ்க வளமுடனே!
'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமகா சந்நிதானம்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆண்டில் உதயமாகும் ஒவ்வொரு நாட்களும் உங்கள் முகத்தில் புன்னகை மலரட்டும் என கொமர்ஷல் வங்கி வாழ்த்துகிறது.

COMMERCIAL BANK
www.combank.lk

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
01.01.2010
Happy new year
புதுவருட சிறப்பு மலர் 2010

யுத்தப் பிரளயத்தில
ஆதி இனமொன்று சிதறடிக்கப்பட்டிருகிறது

இனத்தின் முகம் கிழித்து
துயரங்களால் வேலியிட்டு
இருப்பு சூனியமாக்கப்பட்டிருக்கிறது

2010 உதயமர்கிறது....
மாண்டு போன இனத்தின் கபாலங்களில்
புதிய பிரகடனங்கள் தொங்கவிடப்படும்

புத்தாண்டே!
இம்முறை எது கொணர்ந்தாய் எமக்கு?

மீண்டும் துயிலறுந்த இரவு....
துகிலறுக்கும் கொடுமை.....
துயர் சூழ்ந்த வாழ்வு....
இருப்பிழக்கும் நிலையென்றால்

இப்போதே எங்களை
உனக்கு படையலிடுகிறோம்
நீ
பிறக்க வேண்டாம்
கருவிலே அழிந்துபோ

- கவிசிலிருந்து சுதேசிகன்.




அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற
பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்பைவிட உறுதியான,
அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட - இளைய தலை முறைகளே!
மிதப்புப் பற்களா? அழகிய அமைப்
பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட
யாழ்ப்பாணத்தில் கை தேர்ந்த ஒரே ஸ்தாபனம்
ஏரிக்கணேஷ்
மூக்குக் கண்ணாடி அகமும் பல் கட்டுமிடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2486
கிளைகள்: பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல.80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

கர்த்தரே தெய்வம்
துன்பங்கள் நீங்கி,
இன்பமாக வாழ எமது
இனிய
புதுவருட வாழ்த்துக்கள்
மேசியா
நகைமாடம்
தங்கநகை வியாபாரம்
237, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8460

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்களுக்கு
எமது புதுவருட வாழ்த்துக்கள்
2010
எந்நாளும் எப்போதும் எந்நேரமும்
எழிலும் உறுதியும் நிறைந்த
தளபாடங்களுக்கு இன்றே விரையுங்கள்
திரேசா
தளபாட மாளிகை
137, 139, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம், தொ.பே: 0212227941

2010
HAPPY NEW YEAR
அனைவருக்கும்
உளம் கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
Holcim Cement
யாழ்.ஏகவிநியோகஸ்தர்கள்
ஸ்ரீ ரங்கன் என்ரப்பிறைஸ்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 2027
செல்வா காட் வெயர்
120, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 2873
Jaffna Distributors
Sri Rangan Enterprises
370, Hospital Road,
Jaffna.
Selva Hardware,
120, Stanley Road,
Jaffna.

MACKSON'S PAINTS
WORLDWIDE
Multilac®
www.multilac.com
அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
2010
உங்கள் இடங்களை
உங்கள் எண்ணம் போல்
வண்ணமயமாக்குவதற்கு
பூசுங்கள்
Multilac Paints
பிரதேச வாரியாக உள்ள எமது
Colour Bank களில்
பெற்றுக்கொள்ளலாம்.
வடமாகாண
ஏகவிநியோகஸ்தர்கள்:
கந்தவேலன்
ரேடர்ஸ்
இல.110, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2822

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
01.01.2010
Happy new year
புதுவருட சிறப்பு மலர் 2010

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# நிமலன்

கட்டடப் பொருள் விற்பனை நிலையம்

2010 HAPPY NEW YEAR

சகலவிதமான கட்டடப் பொருள்கள் நியாய விலைக்கு குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

525, 528 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே 0212229296

Wish You Happy New Year

## புத்தாண்டே நற்தீர்வு தந்திட வருக

எம்மவர்தம் ஏக்கமது தீர்ந்து இடப்பெயர்வு
எனும் துயரும் நீங்கியே அனைவரும் தம் இல்லங்களில்
நம்பிக்கை கொண்டே நல்வாழ்வு அமைத்திடவே
நீன் வரவு நல்வரவாய் விளங்கிடவே வந்திடுக!
நம்நிலையோ நல்லபடி நானிலத்தில் நிலவிடவே
நல்லதொரு தீர்வதனை நிறைவுடனே நாம் பெறவே
செம்மை மிகு சிந்தனையை சகலரும் கொண்டிடவே
செய்கபுகழ் பெற்றிடுக பிறக்கும் புத்தாண்டே!

நாயன்மார்கட்டு,
ப.மகேந்திரராசன்.



அனைவருக்கும் எம் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

# உதயா ஜூவல்லர்ஸ்

தங்கப் பவுண் நகை வியாபாரம் உங்கள் இளமைக்கு
மேலும் மெருகூட்டும் கவர் 22 கரட்
நகைகளைப் பெற்றிடச் சிறந்த ஸ்தாபனம்

2010 HAPPY NEW YEAR

Uthayaa Jewellers
81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

# சரவணா புடவையகம்

No:1 நல்லூர்

புதுவருடம், தைப்பொங்கலை முன்னிட்டு மலிவு விற்பனை

**31.01.2010 வரை மட்டும்**

இன்றே விரையுங்கள்

- இந்தியன் சீக்குன்ஸ் சாறி 1900/- Full Worked
- இந்தியன் திரட்வேக் சாறி 1800/- Full Worked
- இந்தியன் சில்க்சாறி 650/- (Official Saree)
- இந்தியன் கொட்டன் சாறி 850/- (Official Saree)
- இந்தியன் கொட்டன் சாறி 1500/- (Rich cotton vijayalaksmy 6.20m)
- இந்தியன் சில்க் பஞ்சாபித் துணி 1000/- (No.1 Special quality Gurukupa)
- இந்தியுன் கொட்டன் பஞ்சாபித் துணி 1300-2400/- வரை (Rich cotton Special quality)
- பாகிஸ்தான் கொட்டன் பஞ்சாபி துணி 700/- (லைனிங் தேவை இல்லை)

மற்றும் இந்தியன் சாறிகள் பஞ்சாபித் துணிகள் ஏராளம்! ஏராளம்!! மிக மிக மகத்தான விலைக் கழிவில் உள்ளது.
"வாருங்கள் வந்து பாருங்கள்"

எங்கும் கிடையா விலையில்

New Selection

Saravana Tex
526, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின்வீதி)
சிவன்கோயில் அருகில் யாழ்ப்பாணம்.

குறிப்பு:
ஏழு நாள்களும் காலை 8 மணிமுதல்
இரவு 8 மணிவரை கடை திறந்திருக்கும்.

அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

# மாபெரும் மலிவு விற்பனை

**50 வருட பூர்த்தியை முன்னிட்டு**
**20 வீதம் - 40 வீதம் வரையான விசேட கழிவு**

எங்களிடம் எல்லாவிதமான அப்பியாசக் கொப்பிகள், பாடப்புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், சிறுவர்களுக்கான நாலு றூள், இரட்டை றூள் கொப்பிகள் (160, 80 பக்கங்களில் ) மற்றும் எழுது கருவிகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் தெரிவுசெய்து குறைந்த விலையில் தரமான பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தரங்குறைந்த கொப்பிகளை வாங்கி சிறுவர்களின் தரத்தைக் குறைக்காதீர்கள்

2500 /- பெறுமதிக்கு அதிகமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய My Clear bag (Rexion) இலவசமாக வழங்கப்படும்.

சனி, ஞாயிறு தினங்களில் முழுமையாக எமது நிறுவன வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

happy NEW Year!

அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

பலசரக்கு மற்றும் மிக்சர் தயாரிக்கும்
...ருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெறுவதற்கு நாடவேண்டிய ஒரே இடம்

# ஜெகன் களஞ்சியம்

இல.475, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.



அனைத்து அன்புள்ளங்களுக்கும் புதுவருட வாழ்த்துக்கள்

யாழ்.நகரில் அனைத்து ரக ஜவுளிகள், றெடிமேட் ஆடைகள், திருமண முகூர்த்தப் பட்டுப்புடைவைகள், பான்ஸி வகைகள், பேபி நீட்ஸ் அனைத்துத் தெரிவுகளையும் ஓர் இடத்தில் தெரிவு செய்திட சிறந்த தெரிவுகளின் சாம்ராஜ்யம்.

தரமும் விலையும் எங்கள் பாரம்பரியம்

2010

# G.S.லிங்கநாதன் அன் கோ

13, 14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். 47, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.



அனைவருக்கும் எம் இனிய புதுவருட வாழ்த்துக்கள்

# செல்வி நகை அகம்

2010

நம்பிக்கையான நாணயமுள்ள நகை வர்த்தகர்கள்,
நல்ல முறையில் உத்தரவாதத்துடன்
நகைகளைச் செய்து கொடுப்பவர்கள்.

1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
01.01.2010
Happy new year
புதுவருட சிறப்பு மலர் 2010










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
01.01.2010
புதுவருட சிறப்பு மலர் 2010

## கவலைகள் நீங்கிடப் பிறந்திடு புத்தாண்டே

போரின் வடுக்கள் சுனாமியின் அனர்த்தம்
பொழுதெலாம் எங்களை வாட்டி வதைக்குது
யாரிடம் சொல்வது யாரோடு நோவது
யாரால் இதனைத் தீர்க்க முடியும்
பாரினில் ஈழத் தமிழனாய் பிறந்தது
பாழாய் போன விதியின் சதியோ
காரிருள் போன்ற கவலைகள் நீங்கிக்
காட்டிடப் பிறந்திடு புத்தாண்டே நீ

வ. யோகானந்தசிவம்




## விழாக்களைச் சுருக்கிடுவோம்

அவரவர் வேலையை அவரவர் செய்வோம்,
அடுத்தவர் பதவியை அபகரிக்காதிருப்போம்,
ஆண்டவன் மனதினைப் புண்படுத்தாதிருப்போம்,
அளவுக்கு விஞ்சிய பேராசையை விட்டிடுவோம்,
ஆன்மீகம் என்பதனை அடக்கமுடன் பெற்றிடுவோம்,
ஆரவாரமின்றி அதனைக் காத்திடுவோம்,
வாண்மை தரு கல்வியால் வணங்க வரம் பெறுவோம்,
வல்லவர்கள் எம் வாழ்வை நிர்வகிக்க வழிவிடுவோம்
நான் தான் என்பதனை இனியாவது விட்டிடுவோம்
நல்லவரோடு இணைவதற்காய் நாவதனைச் செவ்வழிப்போம்
வீண்வாதம் செய்யும் விவாதத்தை விட்டிடுவோம்
விழாக்களை (வீண்) விரயமாக்காது சுருக்கிடுவோம்
ஏன் தான் 'இலவசம்' என்றாலும் யோசிப்போம்
இந்த உடம்பினை வளர்ப்பதற்காய் உழைத்திடுவோம்
தின் பண்டம், தேன் என்றாலும் மருந்தாக உண்போம்
தெய்வம் தந்த கடமைக்காவது எம்மை அர்ப்பணிப்போம்
திவ்வியமாய் நீ பிறப்பாய், திருவாசகமாய் வரவேற்போம்

கே.எஸ். சிவஞானராஜா,
கொக்குவில்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

Dulux

"அதிகம் பூசலாம்" "அதிகம் பாவிக்கலாம்"

தயாரிப்புகளான பெயின்ற் வகைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

AkzoNobel Tomorrow's Answers Today




சிவகுமரன் என்ர பிறைஸ்
இல.75,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


சிவன் மோட்டோர் ஸ்ரோஸ்
இல.70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
At major destinations around the island
Jaffna - Mount Lavinia - Trincomalee
(3 Locations in the Peninsula)
Tilko Holidays (Pvt Ltd)
TILKO Holidays
Hotels and Guest Houses

Jaffna City Hotel
* Comfortable Accommodations at Affordable Prices
* A/C Non A/C Rooms
* Fully Air Conditioned Auditorium for any Occasion

Guest House for budget accommodation
Mount Lavinia and Trincomalee
Mount La Villa
Santhiya Villa

Branches hotel is to be opened at Balangoda






DG Fashion Garment (Pvt) Ltd.
Ashokarama Road, Kondeniya, Dickwella.
Tel:041-2255954/9 Fax:041-2255955
Email:-info@newdgfashions.com
Web-www.newdgfashions.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
01.01.2010
Happy new year
புதுவருட சிறப்பு மலர் 2010

## வன்முறைகளற்ற புதுயுகம் படைத்திட வா

தித்திக்குந் தேன் மலர்கள் பூத்துக் குலுங்க
எத்திக்கும் இன்னிசை கீதம் முழங்க
உத்தம வேளை உலகோர் உவந்து போற்ற
புத்தாண்டு பிறந்தெமக்குப் புதுவாழ்வு தந்திடுமே

சொந்தங்கள் பந்தங்கள் சுகங்கள் விட்டிங்கு
பந்தபாசந் தொலைத்துச் சிந்திய கண்ணீரோடு
தஞ்சமென வந்த நந்தமிழ் உறவுகளின்
வெந்து நொந்து மனங்களைத் தேற்றிடவா புத்தாண்டே!

காந்தி மகானன்று காட்டிய நற்பாதையில்
சாந்தி சமாதானம் பெற்றுச் சங்கடங்கள் நீக்கி
அன்பு வழி சென்று அறநெறி காத்தென்றும்
வன்முறைகளற்றதோர் புதுயுகம் படைத்திடவா

ச. அப்புத்துரை, மட்டுவில்



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
அஜந்தாஸ் 2010
ரெக்ஸ்ரைல்ஸ்
புத்தம் புதிய ஆடைத் தெரிவுகளை நித்தம் நித்தம் அறிமுகம் செய்யும் ஸ்தாபனம்
54, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
25,04, குறுக்குத்தெரு, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.




அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்
2010 HAPPY NEW YEAR
நவீன தொழில்நுட்பத்தில் என்றும் ரம்மியமான ஆபரண கட்டிங் வேலைகட்கு
அன்ரனி ஜூவல்ஸ் டிசைனேர்ஸ்
Antony Jewels Designers


ஜூவலறி உரிமையாளர்கள், ஊழியர்கள், ஆபரண உற்பத்தியாளர்கள், நகைப் பிரியர்கள், அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் யாவர்க்கும் இதயம் கனிந்த புத்தாண்டு நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்
இல.149-4A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0212224392, 0776264650



அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Happy new year
கொழும்பு விலையைவிட குறைவான விலையில்..
கபிலா காலணியகம்
24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
குபிலா பாதணியகம்
13, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.




2010 HAPPY NEW YEAR
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

அருள் விநாயகர் ரேடர்ஸ்
இல.106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை : இல.262, கண்டி வீதி, சாவகச்சேரி
கிளை:- மெயின் வீதி, சங்கானை.


★ புத்தம் புதிய தரம்மிக்க மோட்டார் சைக்கிள்களா?
★ M.D. 90 மற்றும் நீக் கொண்டிசன் மோட்டார் சைக்கிள்களா?
★ அவற்றுக்கான உதிரிப்பாகங்களா? ★ பற்றறி வகைகளா? ★ அஸிட் வகைகளா?
★ சோலர் வகைகளா? இவை அனைத்தையும் ஓரிடமாகவே பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!



நியூ அசோகா
அலுமினியப் பிற்றிங் சென்ரர்
63, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
தொலைபேசி இல:- 021 2240331, 0773609034.

வாடிக்கையாளர்களுக்கு எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!
உங்கள் சகல விதமான அலுமினியப் பிற்றிங் வேலைகளையும் உத்தரவாதத்துடன் செய்து பெற்றிட எம்மை அணுகவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
01.01.2010
Happy New Year
புதுவருட சிறப்பு மலர் 2010

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

பஜாஜ் வாடிக்கையாளர்களுக்கு உத்தரவாத இலவச சேவிஸ்சினையும் உத்தரவாத சேவையினையும் பெற்றிட டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் உத்தரவு பெற்ற உதிரிப்பாக விற்பனையாளரும் சேவை முகவரும்

HAPPY NEW YEAR 2010





RRSC Motor Engineer

# றஞ்சிற் மெக்கானிக் & சேவிஸ் சென்ரர்

யாழ்.வீதி, மானிப்பாய். தொ.பே:0773107549, 0213737808

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்



தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

## நியூ பிரசாந்தி ஜுவல்லறி

தங்கப்பவுண் நகை வியாபாரம்
95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 2223015

### புத்தாண்டே வருக

புத்தாண்டே வருக! புதுப்பொழிவு தருக!
மங்களமாய் மலரட்டும்! மக்கள் மனங்கள்
களி கூரட்டும்!
புதுவாழ்வு தரட்டும்! புதுயுகம் படைக்கட்டும்!
அடிமைத்தனங்கள் ஒழியட்டும்! மக்கள்
வாழ்வு செழிக்கட்டும்!
இறந்த உயிர்கள் உயிர்க்கட்டும்!
உறவுப் பாலங்கள் இனித் தொடரட்டும்!
தமிழர்க்கு விடிவு கிடைக்கட்டும்!
தமிழ்த்தாய் அகம் மகிழட்டும்!
2009 கழிந்து போக 2010 தே வந்திடுக!

M. கீதன், பாஷையூர்

### சுடர் வீசி வருகவே!

சுற்றுமுலகில் சூழந்துறை கொடுமிடர்
நீங்கி நாடெல்லாமுய்ய
மாற்றமென்றொடு மங்கலம் நிறைந்துறை
வாழ்வை இறைஞ்சி புலரும் பொழுதில்
பொற்கரத்தில் பூவேந்தி பெருமை சேர்
தமிழ் கூட்டி புகழ்ந்தேத்தி
போற்றினோம் புத்தாண்டே பொன் நிகர் தேசம்
மலர சுடர் வீசி வருகவே!

கந்த தியாகராசா
கோண்டாவில்.

2010 Happy New Year
happy new year

## சுன்னாகம் பல நோக்குக் கூ.சங்கம்

கூட்டுறவே நாட்டுயர்வு

கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

Brown & Co.PLC (IBS-O/A/D)

Happy New Year 2010



அனைத்து வகை SHARP அலுவலக சாதனங்கள்
(Sharp photo copiers, fax machines, cash Registers, Projectors, Olympus Camera, Slimp Top Computers)

நிழற்பிரதி இயந்திரங்களுக்கு
* 01 வருடம் அல்லது 50,000 பிரதிகளுக்கு உத்தரவாதம்
* 25,000 பிரதிகள் எடுக்கக்கூடிய (Toners) இலவசம்
* முதல் வருடத்திற்கான இலவச திருத்தல் சேவை

சிறப்புச் சலுகை

எம்மிடம் 3000 ரூபா பெறுமதிக்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் அதிர்ஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் முறையே 3000/-, 2000/-, 1000/- பெறுமதியான பரிசில்கள் அல்லது அடுத்த கொள்வனவில் விலைக்கழிவு

வாடிக்கையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்
* போலிகள் விலை குறைவானவை தரமற்றவை
* தரமற்ற உதிரிகள் உள்ளீடுகளை (Toners) கொள்வனவு செய்து உங்கள் பெறுமதிமிக்க இயந்திரங்களைப் பழுதாக்கிக் கொள்ளாதீர்கள். அவ்வாறான இயந்திரங்களுக்கு நாம் உத்தரவாதம் வழங்க மாட்டோம்.

விற்பனைக்குப் பிந்திய தரமான சேவை வழங்குநர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர்கள்

டிஜிற்றல் எலக்ரோனிக்ஸ்,
62/16 ஸ்ரான்லி வீதி, யாழ்.
(ஸ்ரான்லி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

Authorized Dealer: *Digital Electronics*
62/16, Stanley Road, Jaffna. தொடர்புகளுக்கு :
021 2224040

HAPPY NEW YEAR

### புத்தாண்டே புதுவாழ்வு தந்திடுவாய்

அவலங்கள் பலவற்றை அள்ளியே தந்திட்ட
கடந்த ஆண்டுதனை முனைப்புடன் புறந்தள்ளி
வாழ்வினில் நம்பிக்கை தருகின்ற புத்தாண்டே
நாட்டிற்கும் மக்களுக்கும் நலன்தனைத் தந்திடுவாய்

மனிதம் மலர்ந்திடவும் மாண்புகள் உயர்ந்திடவும்
எம்மண்ணில் சமாதானம் நிரந்தரமாய் நிலைத்திடவும்
பேதங்கள் ஒளிந்துபோய் நல்உறவு நிறைந்திடவும்
புதிய நல்ல ஆண்டேநீ நல்வழிகள் காட்டிடுவாய்

சுமைகள் சுமக்கின்ற இதயங்கள் மகிழ்ந்திடவும்
சுதந்திரக் காற்றுதனை எல்லோரும் சுவைத்திடவும்
துன்பங்கள் நிறைவாழ்வு இல்லாமல் போய்விடவும்
பிறக்கின்ற புத்தாண்டே புதுவாழ்வு தந்திடுவாய்

இ.அ.அமலரட்ணம், யாழ்ப்பாணம்.

### புத்தாண்டே...! இடம்பெயர்ந்த மக்களை குடியேற்ற வா!!

இரண்டாயிரத்திப் பத்தே எழுந்தே வருக!
இந் நாட்டு மக்களின் நலன் காக்க எழுந்தே வருக!
கரம் கூப்பி வரவேற்கிறோம் புத்தாண்டே வருக!
கண்ணீர் கதை எழுதாத ஆண்டாக எழுந்தே வருக!
பலமிழந்த தமிழருக்கு பலம் கொடுக்க வருக
பாட்டாளி மக்களின் நலன் காக்க வருக
இளம் சமுதாய வாழ்வுக்கு வழிகாட்ட வருக
இடம்பெயர்ந்த மக்களை குடியேற்ற வருக
தடைகளை விதித்திடாத புத்தாண்டாய் வருக
தமிழ் நிலத்தில் அவலத்தை பெருக்காதே புத்தாண்டே
ஏழைகளின் வாழ்வில் ஒளிகாட்டிவிடு புத்தாண்டே
ஏற்றமிகு வாழ்வதனை தந்துவிடு புத்தாண்டே

[illegible] காரை.
எம்.பி அருளானந்தன்

அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்



நவநாகரிக நங்கையர் விரும்பும் ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்.

மலிவு விற்பனை பொங்கல்வரை நீடிக்கப்பட்டுள்ளது

## லைடன் புடைவை நிலையம்

பஸ்நிலையம் முன்பாக, 410 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 222 2381.

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்



அசல் 22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

## ஆசைப்பிள்ளை அன்சன்ஸ் நகைமாடம்

இல.10 பஸ் நிலையம் முன்பாக, சங்கானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
01.01.2010

# புதுவருட சிறப்பு மலர் 2010

## பீடுநடைபோட்டு வெற்றிபல தருக

புத்தாண்டே வருக! வருக!!
புதுமைகள் பல தருக! தருக !!
முத்தான உந்தன் வருகை - இனி
முழு நிலவாய் ஒளி வீசட்டும் !
எத்தாலும் உனைத் தொழுவோம்!
ஏற்றங்கள் பல செய்திடுவாய் !
பித்தாகி நெஞ்சம் விதிர்க்கின்றதே !
பீடு நடைபோட்டு
வெற்றி பலதருவாய்!

- கவிமணி இராசையா ஸ்ரீதரன்.



## மலரும் புத்தாண்டு நலமே தருக!

ஆரணஞ் சொல்லுண்மை யவனிமிசை விளங்கப்
பூரணமா ரட்சண்ய புண்ணியங் கைகூட
மரணத்தின் கூரொடிய புல்லர்தம் செருக்கழிய
காரது துடைக்கும் வானக கதிரவன் ஒளியைப் போலக்
காரணமாய் வந்துதித்த கல்வாரி ராஜனே
வேரறுந்த விருட்சம்போல் வருந்தும் மெக்குப்
பேரோடு நல்ல பெருமை பலவோடு
சீரோடு வாழக் கிருபை தாரும் பிதாவே!

கலாபூசணம் மு.தணிகாசலம், கற்கோவளம்.

இலங்கை வங்கி ரண்சுரக்கும் அடகுச் சேவையின் சிறப்பு அம்சங்கள்

- ஒரு தங்கப் பவுணுக்கு ஆகக்கூடிய தொகை
- குறைந்த வட்டியில் உபசரிப்புடன் கூடிய உடனடிச் சேவை
- கொடுக்கல் வாங்கல்களின் இரகசியத்தன்மை கொடுக்கல் வாங்கல்களுக்கென ஒதுக்கப்பட்ட அறையொன்றில் இரகசியமாக மேற்கொள்ளப்படும்
- அடகு வைக்கப்படும் பொருள்களுக்கு அதிகூடிய பாதுகாப்பு
- நன்கு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள், ஏற்றுக்கொள்ளத்தக்க தரமதிப்பீடு,தங்க ஆபரணங்களின் தரத்தை தவறின்றி பரீட்சித்தலும் மதிப்பிடுதலும்
- கணனிமயப்படுத்தப்பட்ட கிளைகளில் பகுதி பகுதியாகப் பணத்தை மீளச் செலுத்துவதற்கான வாய்ப்பு
- தங்க ஆபரணங்களை அடகு வைக்கும்போது சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்கவும் பணம் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் குறித்த கணக்கில் சேமிப்பை மேற்கொண்டு அடைவை மீட்டுக்கொள்வதற்குமான வாய்ப்பு
- அவ்வாறே கணக்கில் சேமிக்கும் தொகைக்கு வட்டியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு
- தொடர்ந்தும் தங்கள் விருப்பத்திற்கேற்ப வங்கிக் கணக்கை நடைமுறைப்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பம்.
- வியாபார நடவடிக்கைகளுக்காக மேலதிகப்பற்று வசதிகளைப் பெற்றுக்கொள்ளத்தக்க வாய்ப்பு

2010
BOC
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

அனைவருக்கும்
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
சாறி வகைகள்,
அனைத்துக்கும் அதி சிறந்த உன்னதமான இடம்
மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்
இல.10, 11, POWER HOUSE RD, GRAND BAZAAR, JAFFNA.
T.P: 021 222 9399
MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR



✓ சிக்கின் புரியாணி ✓ சிக்கன் பிறைட்றைஸ் ✓ சிக்கன் கொத்துறொட்டி
✓ நூடில்ஸ் புரியாணி ✓ மட்டன் புரியாணி ✓ மட்டன் றோல்ஸ்
✓ மீன் சாப்பாடு ✓ குளிர்பான வகைகள்
✓ ஐஸ்கிறீம் வகைகள்

அனைவருக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்

அனைத்தும் அதி உயர்ந்த
தரத்தில் வழங்கப்படும்

அனைவரும் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

சுத்தம் சுவை தரம்

2010 HAPPY NEW YEAR

டிலன் ஹோட்டல்
இல.133, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0212224136

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
சாரங்கா நகை மாடம்
T.P.No: 222 6972, Fax. No: 222 8869
கிளை: நிறுவனம்
சாரங்கன் நகைமாடம்
109, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். T.P.No: 222 8917
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
இணை நிறுவனம் புதிய பொலிவுடன்
கொழும்பில் உதயமாகி நடைபெறுகின்றது
இணைநிறுவனம்
சாரங்கா ஜூவல்லறி
இல.55, செட்டித்தெரு, கொழும்பு - 11
55, SEA STREET, COLOMBO - 11. TEL: 2434971. FAX: 0112434071



அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
ஓடருக்கு நகைகளை அசல் 22 கரட்டில் உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்
தங்க நகையுலகில் நம்பிக்கை,
நாணயத்துடன் நித்திய
சேவையாலும் நியாயமான
முறையாலும் நன்நம்பிக்கை பெற்று
நகையுலகிலேயே தனியலகு
படைத்து நிற்கிறது
நித்திய கல்யாணி நகை மாளிகை
205/4 கஸ்தூரியார் வீதி, (ராஜா கட்டடத் தொகுதி), யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org